
# பாரதம் காட்டும் பாரதப் பெண்மணிகள்



# பாரதம் காட்டும் பாரதப் பெண்மணிகள்

பேராசிரியர் – டாக்டர். பொ. கு. வரதராசன்,
வித்துவான். எம். ஏ., பி. ஓ. எல். பி. டி. பிஎச். டி.

[This book is Printed with the financial Assistance of the Thirumalai - Tirupati Devasthanam Tirupati under their scheme, ' Aid to Publish Religious books' ]

அருட்பிரகாசர் வெளியீடு 11.
3. கோபால கிருஷ்ணா காலனி,
கிருஷ்ணகிரி - 635 001.

1-7-92

விலை ரு 20–00

| | | |
|---|---|---|
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| முதல் பதிப்பு | : | *1992* |
| புத்தகத்தின் பெயர் | : | பாரதம் காட்டும் பாரதப் பெண்மணிகள் |
| பக்கங்கள் | ; | 2+1+2+4+130 = 139 |
| பேப்பர் விபரம் | : | Q/cr. 23. 3. Kg. |
| | : | 19 × 12½ CM. |
| | ; | 1000 பிரதிகள் |
| ஆசிரியர் | : | டாக்டர் பெ. கு. வரதராசன் எம்.ஏ.பி.ஓ,எல்.பி.டி.,பிஎச்.டி. |
| ஆசிரியர் முகவரி | : | கோபாலகிருஷ்ணா காலனி, பெங்களூர் சாலை, கிருஷ்ணகிரி 635 001. |
| விலை | ; | ரூ. **20/-** |
| அச்சிட்டோர் | : | ஜூபிடர் பிரஸ், 38, டாக்டர் சுப்பராயன் ரோடு, சேலம் - 636 001. |



# இந்நூல் திருவேங்கடவன்
# திருவடிகட்கே படையல்

தமிழ் காக்கும் தெய்வமென வடக்கே நின்று
தனை நினைக்கும் அடியார்கள் துன்பம் நீக்கி
உமிழ்கின்ற பிறவிதனை ஒடுக்கி யாளும்
உலகளந்த உத்தமனே ! உன்னை நாளும்
அமிழ்தூறும் தமிழ்ப்பாவால் பாடிப்பாடி
அருந்துளப மாலைதனைச் சாற்று கின்றேன்
இமிழ்தூறும் கடல் சூழ்ந்த உலகில் துளப
இனியதுளிர் எனநூலைப் படைக்கின் றேனே

- ஆசிரியர்,

**டாக்டர் பெ. கு. வ.**

கள் சிரித்தால் போச்சு - புகையிலை விரித்தால் போச்சு' என்பதாம். வழங்கும் இப்பழமொழிகளின் உண்மைக் கருத்தை விட்டு விட்டு வேண்டாத பொருளைச் சொல்லிப் பெண்களுக்கும், அவர்கள் தம் பெருமைக்கும் இழுக்குத் தேடும் நிலை என் உள்ளத்தைப் பெரிதும் வருத்தியது.

ஆகவே, இதிகாசங்கள் இரண்டிலுமுள்ள பெண் கதாப்பாத்திரங்களைப் பற்றிய முன்-பின் வரலாறுகளை ஆய்வு செய்து அவ்வாய்வின் பயனாக வெளிப்படும் பெண்களின் உயர்ந்த பண்புகளை விளக்க விரும்பினேன். அவ்விருப்பத்தின் விளைவே. முதன் முயற்சியே, பாரதம் காட்டும் பாரதப் பெண்மணிகள்' என்ற இந்நூல்.

இந்நூலினை இற்றைக்குச் சற்றேறக் குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன் உருவாக்கினேன் இந்நூலை அச்சவாகன மேற்றி, கற்றுத் தெளிந்த சான்றோர் மத்தியில் நூலாக உலாவரச்செய்ய இயலாது இந்நூல் கையெழுத்துப் பிரதியாகவே யிருந்தது. காலங் கனிந்தது - பயன் - உங்கள் கைகளில் இன்று சிறந்த நூலாகத் திகழ்கின்றது. இந்நூலினை வாங்கிப் பயன் துய்க்கின்றவர்களின் அளவே எனக்குரிய பெருமையும் ஊக்கமு மாகும்.

அன்பன்,

3, கோபால்கிருஷ்ணா காலனி **டாக்டர் பெ.கு.வ.**

கிருஷ்ணகிரி - 635001.

1-7-1992

சுபம்

சிவமயம்

ஸ்ரீ மகாதேவ ஜெயம்

**சிவபக்தி பிரச்சாரமணி, சிவபுராண ஞான பூஜகர்**
**சாஸ்திர பிரச்சார பூஷணம், சிவபுராண சக்கரவர்த்தி**
**சிவபுராண காவலர்**

## ஆங்கிரஸ S. வேங்கடேச சர்மா

# அணிந்துரை

பெருமைக்குரிய பேராசியர் டாக்டர் பெ. கு. வரதராசனார் அவர்கள் இயற்றிய பாரதம் காட்டும் பாரதப் பெண்மணிகள் என்ற நூல் கிடைத்துப் படித்துச் சுவைத்துப் பெருமகிழ்ச்சியடைந்தோம். நூலாசிரியர் சிறந்த மேதை என்பதை நூலின் தலைப்பே நன்கு விளக்கும். முதலில் உள்ள பாரதம் என்ற சொல் மஹாபாரதம் என்ற இதி ஹாசத்தின் பெயராகும். பெண்மணிகளுக்கு அடைமொழி யாக இரண்டாவதாக வரும் பாரதம் என்ற சொல் நமது பாரதப் பெரும்பழம் நாட்டைக் குறிக்கும் எனவே இந்த நூல் மஹாபாரதம் என்னும் பேரிதிஹாசம் நமக்கு எடுத்துக் காட்டும் பழம்பெரும் பாரத நன்னாட்டின் பெண்மணி களைப் பற்றியது என்பதை அறிந்து கொள்ளலாம்.

நூலாசிரியர் டாக்டர் பெ. கு. வரதராசனார் அவர்கள் பெரும் புலவர் குழாத்தில் ஒருவர். பெரும் புலவர் கள் மரபில் தோன்றியவர். அப்பெருமைக்கேற்ப இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் வல்லவர். இலக்கண, இலக்கிய நூல்கள் மட்டுமேயன்றி சாத்திர, தோத்திர நூல் களிலும் பயிற்சி மிக்கவர். விரைந்து கவிபாடும் ஆற்றலால் ஆசுகவி எனவும், இனிமையான பாடல்கள் இயற்றும் இயல் பினால் மதுரகவி எனவும் போற்றத் தக்கவர். எல்லாவற் றுக்கும் மேலாக வாலறிவன் நற்றாள் தொழுவதை வாலாய மாகக் கொண்டவர்.

இவரது உரைநடை தெளிந்த ஆற்று நீர் ஒழுக்காய் உள்ளது. கலங்கிய நீர் ஆற்றின் ஆழங்காட்டாது. தெளிந்த நீர் ஆழங்காட்டும். உள்ளே உள்ள பொருள்களையும் தெளிவாகக் காட்டும். இத்தகு உரைநடைப் பெருக்கை 'ப்ரஸன்ன கம்பீரம்' என்று வடமொழிப் புலவர்கள் கூறுவர். அஃதாவது நடை தெளிவாகவும் ஆழ்ந்த கருத்துக் களை உடையதாகவும் உள்ளது என்பதாம். நமது பேராசிரி யரது இந்த நூலும் 'ப்ரஸன்ன கம்பீர' நடையும் அமைந் துள்ளது பெருஞ் சிறப்பாயிற்றன்றோ?

மாபாரதம் என்னும் பெருங்கடலில் மூழ்கி முத்துக் குளிக்கும் பணியை மேற்கொண்ட நமது பேராசிரியர் அதனைச் செம்மையாகச் செய்து முடித்துள்ளார். கடலில் விலையுயர்ந்த முத்து, பவளம், மணி போன்றவை மட்டுமே யன்றிக் கிளிஞ்சல்களும் உளவன்றோ? அவற்றை அன்ன வாறே பகுத்துத் தெரிந்து நமக்குக் கொடுத்துள்ளார் இந்த முத்துக் குளிப்பாளர்.

மகாபாரதம் என்னும் பெருங்கதையில் வரும் பெண் கதாபாத்திரங்கள் அனைவரையும் தேடி எடுத்தார். மணி களின் தராதரத்தைப் பரீட்சிக்கும் இரத்தினப் பரீட்சை யாளர் போலப் பாத்திரங்களின் பெருமை சிறுமைகளை நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனியே என்ன விளக்கமாகக் காட்டியுள்ளார்.

பெண்மணிகளுக்கு உயிரினும் சிறந்தது நாணம். நாணத்தினின்றும் சிறந்தது கற்பே என்பது நம் பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூறும் உண்மை. அத்தகைய கற்பை - அதன் நிலை யாது? - அதைப் பாரதப் பெண்மணிகள் எவ் வாறு பேணினார்கள், எவ்வாறு பேணினார்கள் கற்பின் பெருமையை எவ்வாறு காட்டினார்கள், நாட்டினார்கள் என்பன போன்ற உயர்ந்த செய்திகளைப் பேராசிரியர் அவர்கள் நாமறியும்படி - சிறப்பாக இக்காலப் பெண்கள் அறியும்படி - எளிமையாக, தெளிவாக, ஆனால் அழுத்தந் திருத்தமாக அறிவுறுத்தியுள்ளார்கள்.

காலம் மாற மாற மக்களின் குணங்களும் மாறுகின் றன. சென்ற நூற்றாண்டில் இருந்த நிலை இந்த நூற் றாண்டில் இல்லை. சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாகக் கருதப்படும் பாரதவரலாற்றில் கண்ட பெண் களின் குண நலன்களை இக்காலத்தே நாம் காண இயலுமா? தன் கணவன் காணாத ஒன்றைத் தான் காணுவதா? என்று தன் கண்களைத் துணியினால் கட்டி மறைத்துக் கொண்ட காந்தாரியை இன்று காண இயலுமா? பெருநோயாளனான கணவனைக் கடவுளாக மதித்துப் பணிவிடை புரிந்த நளாயினி இன்று உண்டா? மற்றும் திரெளபதி, சுபத்திரை, முதலியோர்களின் குணங்களையும் பாரதம் சித்திரித்துக் காட்டியுள்ளது. அந்தச் சிறப்பையெல்லாம் ஆசிரியர் ஒரு சிறிதும் தமது நூலில் குறையாது காட்டியுள்ளார்.

இன்றைய உலகம் - சிறப்பாகப் பெண்டிருலகம் - இந்த நூலை வரவேற்றுப் படித்துப் பயன்பெறுமெனப் பெரிதும் நம்புகிறோம். நூலாசிரியர் காலத்துக் கேற்ற நல்லதொரு பணியைச் செய்துள்ளார் என்றும் நாம் உறுதி யாக நம்புகிறோம். திருமலை திருப்பதி தேவஸ்தானம் இதனை ஆதரித்துப் பதிப்பிக்க உதவி செய்துள்ளதும் எமது இந்த உறுதியை வலுப்படுத்துகின்றது.

பேராசிரியர் வரதராசனார் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து பார்புகழும் பல பெருநூல்களை இயற்றிச் சீரும் சிறப்புடனும் வாழ அருள் புரியுமாறு எமது சித்தமே கோயில் கொண்ட அம்மையப்பர் சீரடிகளை இறைஞ்சுகின்றோம். எல்லாம் சிவன் செயல்.

சிவம்.

26-7-92,
43-7வது அவென்யூ,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

இங்ஙனம்,
சங்கரனடிமை
**ஆங்கீரஸ சர்மா**

# நன்றியுரை.

கையெழுத்துப் பிரதியாக இருந்த இந்நூலினை அச்சுவாகனமேற்றி கற்றோருலகில் சுற்ற விட என்னை அடிக்கடிச் சந்திக்கும் போதெல்லாம் கேட்டு வந்த நண்பர் திரு. S. இராஜரத்தினம் எம். ஏ., எம். எட்., தமிழாசிரியர வர்கட்கும், கையெழுத்துப் பிரதியைப் பார்த்தவுடன், 'இதை ஏன் இன்னும் புத்தகமாக்காமல் வைத்திருக்கிறீர் கள்?' என்று கேட்டுக் கொண்டே பிரதிநிதியை எனது கடிதத்துடன் திருப்பதி தேவஸ்தானத்திற்கு அனுப்பிவைத்த நண்பர் திரு. K. G. கோபால் இடைநிலை ஆசிரியர்-மல்லப் பாடி அவர்களுக்கும் என் நன்றியுரியதாகும.

திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து வந்த கையெ ழுத்துப் பிரதியை நூலாக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட என் மைத்துனர் புலவர், திரு. K. முருகேசன் எம் ஏ., பி. எட்.. - CSI மேல்நிலைப் பள்ளி, சேலம், தமிழா சிரியர் அவர்களுக்கும், பிழையின்றி அச்சுப் படியினைத் தரு வதாக ஒப்புக்கொண்டு - ஒப்பியவாறு செவ்வனே தம் பணி யினை முடித்துத் தந்த அன்னாரது மூத்த குமாரன் M இளமுருகு, B. Sc., (கணினியல்) அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

உயிரினும் மேலான எனது நெடுங்கால நண்பர் எனது வேண்டுகோளை யேற்று இந்நூலுக்குச் சிறந்ததோர் அணிந்துரையை வழங்கிய ஆங்கீரஸ திரு. S. வேங்கடேச சர்மா அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியதாகும். அனைத்திற்கும் மேலாக, யாம் விரும்பியவாறு விரும்பிய காலத்திற்குள் சிறந்த முறையில் நூலாக்கித் தந்த ஜூபிடர் பிரஸ் அதிபர் திரு. T. கண்ணன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்புள்ள,
பேராசிரியர் டாக்டர். **பெ. கு. வ.**

# பாரதம் காட்டும் பாரதப் பெண்மணிகள்

தாரை: வியாழன் என்னும் தேவ குருவின் பத்தினியான தாரையைச் சந்திரன் கூடி புதன் என்னும் புதல்வனைப் பெற்றான்.

இளை: மனுவின் புதல்வன் இளன் என்பவன் ஒரு நாள் தேரின் மீது ஏறிக் கொண்டு காடு சென்றான். 'இங்கு வருபவர் பெண்ணாய் விடுக' எனப்பார்வதி தேவி சாபம் கொடுத்திருந்த ஓரிடத்து அதனையறியாமல் இளன் அங்குச் சென்றனன். பார்வதி தேவியின் ஏற்பாட்டின் படி இளன் பெண்ணுருவடைந்தான். 'இளை' என யாவரும் அப்பெண் வடிவமான இளனைப் பேரிட்டழைத்தனர்.

வளை நெடுஞ்சிலைக் கரத்தினன் மநுவருள் மைந்தன்
உளையெழும்பரித் தேரினனுறுவ தொன்றுணரான்
விளையருந்தவ விபனமுற்றம்பிகை விதியால்
இளையெனும் பெயர் மட வரலாயின னென்ப

குருகுலச்சருக்கம் - 7

புதனுக்கும் இளைக்கும் புதல்வனாகப் புரூரவா தோன்றுதல்.

உருப்பசி: புரூரவா மன்னன் உருப்பசியைப் பாதுகாத்தல். உருப்பசி என்பவள் தேவலோகப் பெண்களுள் ஒருத்தி. பதரிகாச்சிரமத்தில் திருமால் நாராயண ரூபியாயிருந்து தவம் செய்ய, அத்தவத்தைக் கெடுக்கும்படி மேனை முதலிய தேவ மாதர்கள் வர, நாராயண முனிவர் தமது தொடையினின்றும் ஓர் கட்டழகியைப் படைத்தனுப்ப

அவளது அழகைக் கண்ட அத்தேவ மாதர்களெல்லாம் வெட்கிப்பின் தம்முடன் சேர்த்துக் கொண்டனர். 'ஊர்வசீ' என்பது ஊருவீ என்ற வட சொல்லின் திரிபு. 'ஊருவீ' என்றால் தொடை என்பது பொருள். நாராயண முனிவரின் தொடையினின்றும் [ஊருவீனின்றும்] தோன்றியதால் 'ஊர்வசீ' யானாள். தமிழில் உருப்பசியானாள். இவள் அழகில் மிகுந்திருந்ததால் அரக்கர் சிலர் இவளைத் தூக்கிச் சென்றனர். 'அபயம்! அபயம்!' எனக் கத்தினாள். அச் சொல்லைக் கேட்ட புரூரவ வான்வழி சென்று அரக்கர்களைப் புறமுதுகிடச் செய்து உருப்பசியைக் காப்பாற்றினான். மித்திரனென்ற சூரியனது சாபத்தால், இவள் பூலோகத்தில் புரூரவாவோடு வாழுமாறு முன்னொரு சாபமிருந்ததால், புரூரவா உருப்பசியைப் பூவுலகிற்கழைத்து வந்தான். இந்திரன் தன் ஆள் மூலம் புரூரவா உருப்பசியை மணந்து சில காலம் மண்ணில் வாழ்க எனச் செய்தியனுப்பினான். அதன்படி அவளோடு இன்ப வாழ்வினை மேற்கொண்டான். 'ஆயு' என்ற மைந்தனையும் பெற்றாள்.

தேவயாநீயும் சன்மிட்டையும்:-

ஆயுவின் மைந்தன் நகுடன், நகுடன் மைந்தன். யயாதி. நகுடன் அகத்தியர் சாபத்தால் சர்ப்பமானான். யயாதி சுக்கிராச்சாரியார் புதல்வி தேவயாநீ என்பவளை மணந்து கொண்டான். யது-துருவசு என்ற இரு புதல்வர்களை ஈன்றனள்.

விடபன்மன் என்னும் அசுர மன்னன் ஒருவனின் மகள் சன்மிட்டை என்பவள். இவள் தேவயானையின் பணிப்பெண். சுக்கிராச்சாரியார் அசுரர் குரு. விடபன்மன் [விருஷபர்வன்] அசுரமன்னன். சுக்கிராச்சாரியாரின் உயிர்த்தோழன். விடபன்மன் மகள் சன்மிட்டை தேவயானியின் உயிர்ப்பாங்கி. ஒருசமயம் சன்மிட்டை தன்னைச் சினந்து பழித்த தேவயானையைக் கிணற்றில் தள்ளி விட்டாள். அதனையறிந்த விடபன்மன் தன் மகளைத் தேவயானைக்கு பணிப் பெண்ணாக்கினான். (தேவயானை - குரு - இவர்களுடைய கோப, சாபங்களிலிருந்து தப்பிப் பிழைக்க).

தேவயானி அறியா வண்ணம் சன்மிட்டையிடம் யயாதிக்கு அன்பு ஏற்பட்டு காந்தருவ மணத்தால் ஒன்று கூடினர். இவ்விருவருக்கும் பூரு என்பவன் தோன்றினான்.

ஆழி மன்னனவ் வணங்கினை யணங்கெனக் கண்டு
பாழி வன்புயம் வலந்துடித் துடலுறப் பரிந்து
வாழி தன்மனை மடவர லறிவுரு வண்ணம்
யாழினோர் பெறும் புணர்ச்சியினிதய
மொத்திசைந்தான்.

குருகுலச்சருக்கம் -19

சன்மிட்டை புத்திரப்பேறு பெற்றதும் தேவயானிக்குத் தன் கணவனிடத்தே ஐயமேற்பட்டது. தன் கணவனது ஒழுக்கத்தை ஊன்றிக் கவனித்து வந்த தேவயானிக்கு மேலும் சந்தேகம் வலுத்தது. சன்மிட்டை ஈன்ற அடுத்த இரு குழந்தைகளும் (த்ருஹ்யு-அனு) யயாதியின் சாயலைப் பெற்றிருந்ததால் சன்மிட்டையிடம் யயாதி கொண்டுள்ள உறவு தேவயானியின் மனத்தை மிக்க வருத்தியது.ஆகவே அவள் யயாதியை விட்டு தன் தந்தையில்லத்தை யடைந்தாள்.

மருவிளங் கொடியனைய மென்மருங்கிலாள் பின்னும்
இருவர் மைந்தரைப் பயந்தனளிறை மனை காணா
உருவிளங் கியவுலகுடை நிருபனுக் கிவண் மேல்
திருவுளங் கொலென்றழன்று தன் றாதையிற் சென்றாள்
குருகுலச்சருக்கம் - 21

நடந்தவற்றைக் கேள்வியுற்ற சுக்கிராச்சாரியார் யயாதிக்குச் சாபமிடுகிறார். ''நீ எவரையும் இன்பம் துய்க்கும் வலிமையற்று முதுமையை யடைவாய்'' என்று. யயாதி தனது புதல்வர்களிடம் முதுமையை ஏற்றுக் கொண்டு இளமையைத் தரும்படி வேண்டினான்.தேவயானியீன்ற இரு புதல்வர்களும் யது-துருவசு இளமையைத்தர மறுத்தனர். சன்மிட்டையிடந் தோன்றிய புதல்வர்கள் மூவரையும்

(பூரு-த்ருஹ்யு-அனு) இளமையைத்தர வேண்டினான். பூரு தன் தந்தையின் வேண்டுகோளை ஏற்று முதுமையைப் பெற்றுக் கொண்டு தனது இளமையைக் கொடுத்தான். தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுத்த காரணத்தால் யயாதி தன் அரசாளும் உரிமையைத் தனக்குப் பின் பூருவிற்கே கொடுத்தான்.

## கங்கை

பூருவின் குலத்திலே பரதன் என்று ஒரு மன்னன் தோன்றினான். இவன் வேள்வி, கேள்விகளில் வல்லவன். இசையிலும் நாட்டியத்திலும் வல்லவனாக இருந்தான். துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்தவன் இந்தப் பரதனே. இவன் வமிசத்தில் வந்தவனே அத்தி என்பவன். இவனே அத்தினாபுரியை அமைத்தவன். அத்தின் குலத்தில் உதித்தவனே குரு மன்னவன். குருகுலத்தில் வந்தவனே சந்தனு என்பவன். சந்தனுவுக்கு கங்கையாளிடத்துப் பிறந்த எட்டாவது குழந்தையே தேவவிரதன் அல்லது வீடுமன் என்போன். இவனது வம்சத்தில் வந்தவர்களே திருதராட்டிரனும் பாண்டுவும் ஆவார்கள்.

குருகுலத்தில் தோன்றிய சந்தனு மகாராஜன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். வேட்டையாடிக் களைப்புற்றதால், நீர்வேட்கை கொண்டு கங்கைக் கரையையடைந்தான். கங்கை நதி மீது தோன்றிய பெண் தெய்வத்தைச் சந்தனு கண்ணுற்றான். முதலில் கங்கையைக் கண்டு ஐயுற்றான். பின் அவளிடத்தில் தோன்றிய குறிகளினால் 'பெண்' எனத் தெளிவு பெற்றான். வருணதேவனே பிரம்மனது சாபத்தால் சந்தனுவாய்ப் பிறந்தானென்றும், தான் மணக்க வேண்டியவன் இவன்தான் என்றும் கங்கா நதியின் பெண் தெய்வம், கங்கையாள் உணர்ந்தாளாதலால் அவனைக் கண்டதும் துயரம் நீங்கப் பெற்றாள்.

சாப வரலாறு:-

ஒரு காலத்தில், கங்காதேவியாகிய பெண் தெய்வம் சத்தியலோகத்தில் பிரமனது சபையை யடைந்தாள். அப்போது அங்குச் சூழ்ந்திருந்த தேவர்களின் புத்தி எவ்வாறுள்ளது என்பதை அறிந்து கொள்ள வாயுதேவன் கங்கா தேவியின் ஆடை விலகி அவளது உள் அவயவங்கள் தெரியும்படி மென்காற்றை வீசினான். அக்காட்சியைக் காண விருப்பமில்லாத் தேவர்கள் தம் கண்களை அப்போது மூடிக்கொண்டனர். கங்கையும் இப்படியொரு நிலை ஏற்படு மென்பதை அறியாதவளாகத் தானிருந்தாள், ஆனால், வருணதேவன் தான் விரும்பிக்காணுமளவிற்கு அச்சபையிலிருந்த கங்கையாளின் உருவழகை வெளிப்படுத்திய வாயு பகவானைப் போற்றினான். இதனைக் கண்ட பிரம்ம தேவன் ''பூலோகத்தில் நீ தோன்றுவாய்'' எனச்சபித்தான். அதே போல கங்கையாளையும் ''நீ அரசனாகப் பிறக்கும் வருணனிடத்தே அன்பு கொண்ட அழகிய மானிட மகளாய்ப் பிறந்து அவனை மணந்து மீண்டும் சுய வடிவு பெறுவாய்'' எனச் சபித்தான்.

சாபத்தை ஏற்றுக் கொண்ட கங்கை பூவுலகில் நமக்கும் ஒரு நற்கதியுண்டு என எண்ணித் திரும்பும் போது ஒரு சேர வீழும் கொள்ளிக் கட்டை போல முகம் மிக்க ஒளி மழுங்கி வசுக்கள் என்னும் தேவகணங்கள் தோன்றினர். அப்போது அந்த வசுக்கள், 'தாயே' வானுலகைவிட்டு தாங்கள் பூவுலகை நாடிச் செல்வதேன்?' எனக் கேட்டனர். அதற்கு கங்காதேவி, 'பிரமலோகத்தில் பிரமதேவனிட்ட சாபத்தால் பூலோகம் செல்லுகிறேன் என்று கூறினாள். அப்போது அவ்வசுக்களும், 'தாயே! எங்களுக்கும் இப்படிப்பட்ட ஒரு சாபமுளது' எனத் தங்கள் சாபவரலாற்றினைக் கூறினர்.

## சாபவரலாறு

பிரபாசன் என்ற வசுவினுடைய மனைவி சொல்லிய தற்கு ஏற்ப அவனுடன் மற்ற நாங்கள் எழுவரும் சேர்ந்து கொண்டு வசிட்டனுடைய வீட்டில் வாழும் பசுவைக் கவர்ந்து வந்தோம். முனிவரின் மனைவி அருந்ததி பசுவை யாரோ கவர்ந்து சென்றனர் எனக் கூற, முனிவர் இதனைக் குழந்தைகள் போல் அறிவிலாச் செயலால் வசுக்கள் செய் தனர் என, தன் ஞான திருஷ்டியால் அறிந்து கூறினார். அதோடு, 'வசுக்களாயிருக்கும் உங்கள் பதவியை நீங்கள் இழந்து மானிடப் பிறவியைப் பெறுங்கள்' எனச் சாபமுமிட் டார், உடனே, எங்களுக்கு மீண்டும் இப்பதவி எப்போது கிட்டுமென வசிட்டனது திருவடிகளை வணங்கினோம். வசிட்டன் சினந்தவிர்த்து ''காமதேனுவைக் கவர்வதற்கு உடந்தையாயிருந்த ஏழு பேரும் மானிடப் பிறவியைப் பெற்று உடன் உமது பழைய பதவிக்கே வந்து விடுங்கள். இந்தத் திருட்டுக்கு மனைவி சொல்லைக் கேட்டு பிரதானனாக இருந்தவன் பூவுலகில் பெண்ணின்பத்தை நீங்கி வெகு காலம் இருப்பானாக'' என்று கூறினான்.

இதனைக் கேட்ட கங்கா தேவி பிரமனது சாபத்தால் வருணன் பூவுலகில் மன்னனாகப் பிறப்பான். நானும் அவனை விரும்பும் பெண்ணாகப் பிறந்து அவனுக்கு மனைவி யாக வாழ்வேன். நீங்கள் எண்மரும் என் வயிற்றுள் என் புத்திரர்களாகத் தோன்றுவீர்களெனக் கூறினாள்- நீங்கள் பூமியில் பிறப்பதற்கு அஞ்ச வேண்டாம். பிரபாசன் என்கின்ற இச்சாபத்திற்குக் காரணமான வசுவைத் தவிர மற்ற எழுவரையும் பிறந்தவுடன் பூமியிற்படு முன் இறக்கச் செய்து உங்கள் சாபத்தைத் தீர்த்து வைக்கின்றேன். பிரபா சனன் என்பவனை அவனது தந்தையோடு நிறுத்தி மானிடப் பிறவியை மாற்றுவேன் என்றாள். இதனைக் கேட்ட அஷ்ட வசுக்களும் மிக்க மகிழ்ந்து, கங்கா தேவியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள்.

கங்கையாளிடத்து அன்பு கொண்ட சந்தனு, ,என்னை மணந்து கொள்ள நீ 'விரும்புகின்றனையா' எனக் கேட்க, அதற்கு கங்கையாள், 'நான், நீ மனம் வருந்தும்படி உடல் நடுங்கிட எச்செயலை மேற்கொண்டாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். என்செயலை ஏற்றுக் கொள்ள மறுப்பாயானால் அன்றே உன்னை விட்டு என துருவினை மாற்றிக் கொண்டு பிரிந்திடுவேன்.சம்மதமாயின் நான் உன்னை மணப்பேன்' என்று கூறினாள்.

இரிந்து மெய்ந்நடுங்கிட யாதியாது நான்
புரிந்தது பொறுத்தயேற் புணர்வலுன்புயம்
பரிந்தெனை மறுத்தியேற் பரிவொடன் றுனைப்
பிரிந்தகன் றிடுவனிப் பிறப்பு மாற்றிரோ

குருகுலச்சருக்கம் - 43

சந்தனு அவளது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, தன்னை மணம் புரிந்து கொள்ள அவளை வேண்டினான்.

எனதுயி ரரசுவாழ் வென்ப யாவையும்
நினதுநின் னேவலி நிற்பன் யானென
வனிதையை மருட்டினான் மன்ற லெண்ணியே
தனதனு நிகரிலாத் தனம கீபனே

குருகுலச்சருக்கம் - 45

இருவரும் அக்கினி சாட்சியாக மணம் புரிந்து கொண்டார்கள். கங்கையாள், பெற்ற முதற் குழந்தையை கங்கை நீரில் எறிந்தாள். சந்தனு வருந்தினா னாயினும் கங்கையாள் மீது கொண்டிருந்த அன்பினாலும், பெருங் காதலினாலும் ஒன்றும் பேசாது வாளாவிருந்தான். கங்கை யாள், தொடர்ந்து தான் பெற்ற ஏழு குழந்தைகளையும் கங்கையாற்றில் எறிந்தாள். மனம் பொறாத சந்தனு, தனக்குப்பின் தன் குலம் விளங்க சந்ததி இல்லாமல் செய்து விடத் திட்டமிட்டாள் போலும் எனக்கருதி, எட்டாவது

குழந்தையை ஈன்றெடுத்ததும் அக் குழந்தை அவளது கைக்குக் கிடைக்காதபடி தான், முன் எச்சரிக்கையுடன் அதனை எடுத்துக் கொண்டான். அந்தப் புதல்வனையேனும் கொல்லாதிருக்குமாறு மன்னவன் தேவியை வேண்டினான்.

நிறுத்துக மரபினை நிலைபெ றும்படி
வெறுத்தெனை முனியினும் வேண்டு மாலிது
மறுத்தனன் யானென மனஞ்செ யாதினிப்
பொறுத்தருள் புரிகவிப் புதல்வன் றன்னையே

கங்கையாள், 'ஏழு குழந்தைகளை ஆற்றிலெறிந்து கொன்ற போது தடுக்காமல் - அவற்றிற்காக மனம் வருந்தி இரக்கங் கொள்ளாமல் - இந்த எட்டாவது குழந்தையைக் கொல்லும் போது தங்கள் மனநிலை மாறுபாடடைவதேன்' எனக் கேட்டாள். 'என்னிடம் முன்பு கொடுத்த வாக்குறுதி இப்போது என்னவாயிற்று?' என்று மன்னனைக் கடிந்து கேட்டாள். அப்போது அரசன் உணர்ச்சி வயப்பட்டு கங்கை யாளை ' நீ யார்? பெற்ற புதல்வர்களைக் கொன்றதேன்? 'எனக் கேட்டான். உடனே, கங்கையாள் தன் சாப வரலாற் றினைக் கூறினாள்.

பின்பு, சந்தனுவிடம் 'இந்த எட்டாவது குழந்தை காளைப் பருவம் வரை என்னிடமிருந்து பிறகு உன்னிடம் வருவான்' என்று கூறி குழந்தையோடு கங்கையில் மூழ்கி மறைந்தாள்.

கங்கையைப் பிரிந்த சந்தனு அவளது பிரிவாள் வருந்திப் பல நாள்களைக் கழித்தான். ஒரு நாள் வேட்டை யாடக் காட்டிற்குச் சென்றான். இளைப்பாற கங்கைக் கரை யினையடைந்தான். முன்பு கங்கையாளைக் கண்ட சோலை முதலியவற்றைக் கண்டு, பழைய நினைவுகளால் வருத்த முற்றிருந்தான்.அப்போது அவன் முன்னே கங்கையினின்றும் தோன்றிய வீரன் ஒருவன் வந்தான். வந்தவுன் தன் மைந்த

னே என்பதையறியாத சந்தனு பலவாறாக அவனைப் புகழ்ந்து கொண்டாடினான். வந்தவனும் தன்னைப் புகழ்ந்து கொண்டாடுவது தனது தந்தைதான் என்பதை உணராமல், சந்தனுவின் மார்பிலே மோகனக்கணை யொன்றினை ஏவி கங்கை நீரினுள் மறைந்தான். அம்பு பட்டதும் மயக்கமுற்று மன்னன் பூமியில் வீழ்ந்தான்.

இந்த நிலையினை யறிந்த கங்கையாள் மனமுருகித் தன் மகனுடன் நதியினின்று வெளியேறி அரசனிடம் வந்தாள். மயங்கிக் கிடக்கும் அரசனைக் கைகளால் எடுத்துத் தழுவினாள். மயக்கந் தீர்ந்த சந்தனுவிடம் மைந்தனை ஒப்படைத்துப் பின்வருமாறு கூறினாள்.

'இவன் உனது மைந்தன். தேவவிரதன் என்பது இவன் பெயர். வசிஷ்டருடைய அருளால் பலகலைகளையும் கற்றுத் தேர்ந்தவன். அன்றியும் பரசுராமனுடைய திருவடிகளை வணங்கியதால் வில்வித்தைகளையும், பல வகைப்பட்ட அஸ்திரங்களின் மந்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவனாக உள்ளான். மகனைப் பெற்றவருள் எவரும் பெறாத இன்பத்தையும், உயர்ந்த வாழ்வையும், உடல் வலிமையையும், பெருந்தவத்தையும் உடையவனாக நீ விளங்குவாய். மனதில் உற்சாகம் மிக இவனோடுநீ இவ்வுலகை நீண்ட நாள்கள் ஆட்சி புரிவாயாக' என்று கூறி புத்திரனை மன்னன் பால் ஒப்படைத்தாள். சந்தனுவைப் பிரிய மனமில்லாதவளாக, அடி மேல் அடி வைத்து கங்கை வெள்ளத்துள் புகுந்து மறைந்தாள்.

வேந்த கேளிவனுன் மதலையே தேவ
விரதனென் றிவன்பெயர் புல்லோர்
ஆய்ந்த நூல்வெள்ளங் கடந்தனன் கரைகண்
டருந்ததி பதிதிரு வருளால்
பூந்துழாய் மாலைப் போர்மழுப் படையோன்
பொன்னடி பொலிவுற வணங்கி

ஏந்துநீள் சிலையும் பலகணை மறையு
மேனைய படைகளும் பயின்றான்
குருகுலச்சருக்கம் - 87

மகப்பெறு மவரி லொருவரும் பெறாத
மகிழ்ச்சியும் வாழ்வுமெய் வலியும்
மிகப்பெறுந் தவநீ புரிந்தனை நின்னை
வேறினி வெல்லவல் லவரார்
உகப்புற விவனோ டாவனியா ளுகவென்
றோடிக் கோரடி புரிந்து
தகப்பெறு மயிலுந் தலைவன்மே லுள்ளந்
தகைவுறத் தடம்புனல் புகுந்தாள்
குருகுலச்சருக்கம் - 88

சந்தனு தன் மகனை ஏற்றுக் கொண்டு ஊரார் கை தொழ, தன் நகரத்திற்குத் தேரில் வந்தான். மக்களும் விரும்பியவாறு தேவவிரதனுக்கு முடிசூட்டி, அரியாசனத் திலிருத்தி, ஆட்சிப் பொறுப்பினைக் கொடுத்தான்.

## யோஜநகந்தி.

சந்தனு மகாராஜன் ஒரு சமயம் வேட்டையாட வேண்டும் என்னும் விருப்பத்தினால் கானகம் சென்றான். வேட்டையாடிக் களைத்துப் போய் ஒரு பாசறையில் தங்கி யிருந்தான். அப்பாசறை முழுவதும் ஓர் உயர்ந்த மணம் மெல்லெனக்காற்றுடன் கலந்து வீசுவதை உணர்ந்தான். யமு னையாறு இருமருங்கிலும் ஒரு யோசனை தூரத்திற்கு அம் மணம் வீசுவதை அறிந்தான். அப்பகுதியில் வாழ்ந்த வலை ஞர் குலத்துக்குத் தலைவனான 'உச்சைச்சரவஸ்' என்பானது மகள் யோஜநகந்தியை மன்னன் கண்டான். இவளது இயற் பெயர் மச்சகந்தி. பாராசர பகவானருளால் யோசனை தூரம் நறுமணங் கமழும் உடம்பைப் பெற்றாளாதலால் யோசனைகந்தி என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று.

இவளுக்குக் காளி, சத்தியவதி, வாசவி என்ற வேறு பெயர்களுமுண்டு. இவளைக் கண்ட மன்னன் அவளை நெருங்கி ''நீ யார்? உன் பெற்றோர்கள் யாவர்? அவர்களைக் காணுதல் வேண்டும்'' என்றெல்லாம் கேட்டான். யோசனைகந்தி, ''இவ்வாற்றின் மறுகரை செல்ல விரும்புவோர்களை இவ்வோடத்தில் ஏற்றிச் செல்ல நான் இங்குள்ளேன். என்னுடைய தந்தையார் இப்பக்கத்தில்தான் உள்ளார்கள். இதோ அழைத்து வருகின்றேன்.'' என்று கூறிச் சென்றாள். வலைஞர் தலைவன் மன்னன் முன் அடிபணிந்து நின்று அழைத்த காரணத்தைக் கேட்டான். மன்னன் தன் கருத்தைக் கூறும் படி தனது தேர்ப்பாகனிடஞ் சொன்னான்.

பாகனை யரசன் குறிப்பினா லேவப்
 பாகனும் பரதவர் பதியை
ஓகையோ டிருத்தி நின்னுழை வதுவையை
 யுலகுடை நாயக னயந்தான்
தோகைசெய் தவமோ நின்பெருந் தவமோ
 தொல்குலத் தவர்புரி தவமோ
ஆகுமிவ் வாழ்வென் றுரைத்தன னவனு
 மாகுமா றவனுட னுரைப்பான்

குருகுலச்சருக்கம் - **93**

தேர்ப்பாகன் மன்னனுடைய கருத்தையறிவித்தான். அதனைக் கேட்ட வலைஞர் தலைவன் 'என் மகள் வயிற்றில் பிறக்கும் புத்திரனுக்கு அரசு அளிப்பதானால் திருமணம் செய்து தர நான் ஒப்புவேன்' என்றான். வலைஞர் தலைனுடைய பதில் மன்னனுக்கு நேர்மையுடையது என்று பட்டாலும் வெளியில் சொல்ல மனமின்றி வேதனையுடன் அரண்மனை சென்றான். நாளடைவில் மன வேதனையாலும் யோசனைகந்தி மீதுள்ள காதலாலும் உடல் தளர்வுற்றான். சோக நிலையினைத் தேர்ப்பாகன் வாயிலாக அறிந்த தேவவிரதன், தன் தந்தைக்காக வலைஞர் தலைவனைக் காணச் சென்றான். கண்டு, தன் தந்தைக்குப் பெண் கேட்டான்.

வலைஞர் தலைவன் விரும்பியவாறு தன் இளையதாயின் புத்திரனுக்கு அரசைப் பட்டங்கட்டித் தருவதாக வாக்களித்தான். அதனைக் கேட்ட வலைஞர் தலைவன், ''நீங்கள் உங்களுக்கு அரசு பதவி வேண்டாமெனத் தம்பிக்கு அப்பதவியினைத் தரலாம். நாளை, உம் வயிற்றில் பிறக்கும் பிள்ளை பாட்டன் சொத்து. எனக்குத் தான் உரிமையுண்டு என வாதாடினால் நான் என் செய்ய?'' எனக்கேட்டான். உடனே தேவ விரதன் அந்தக் கவலை உனக்கு வேண்டாம். 'நான் திருமணம் செய்து கொள்ளுவதில்லை' என அவன் முன் சூளுரை கொண்டான். தந்தை பொருட்டால் மேற்கொண்ட சூளுரையைக் கேட்ட தேவர்கள் அனைவரும் தேவ விரதனை 'வீடுமன்' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். பூ மழை பொழிய வாழ்த்தினர்.

இவன்மொழி நயந்துகேட் டுழியவையி னிருந்த
தொன்ம னிதரே யன்றித்
தவமுனி வரருந் தேவருங் ககனந்
தங்குமா மங்கையர் பலரும்
உவகையோ டிவனுக் கேற்றபே ருரைசெய்
தொளிகெழு பூமழை பொழிந்தார்
அவனியி னிருபர் வெருவருந் திறலா
னரிய சொற் பொருணிலை யறிந்தே

குருகுலச்சருக்கம் - 99

வலைஞர் தலைவனும் யோசன கந்தியை மன்னனுக்கு மணம் முடித்துத்தர விருப்பம் தெரிவித்தான். வீடுமன் வலைஞர் தலைவனைத் தன் மகளுடன் அரண்மனைக்கு அழைத்து வந்தான். மகனுடைய உளப்பாங்கினையும், தந்தைபால் கொண்டிருந்த அன்பினையும் நோக்கி மிக்க மகிழ்ந்தான் சந்தனு மகாராஜன். தேவ விரதனை - வீடுமனைப் புகழ்ந்தான்; கொண்டாடினான்; முடிவில் ஒரு வரத்தையுங் கொடுத்தான். வீடுமன் எப்பொழுது தான் உயிர்விட விரும்புகின்றானோ, அப்போது தான் காலன் வீடுமனுயிரைக் கவருவான் என்பதே மன்னன் மகனுக் கீந்த வரமாகும்.

தந்தையர்க் குதவு முதவியி னெனக்குச்
சதமடங் குதவினை யுனக்கு
மைந்தருக் குதவு முதவியிற் சிறிது
மாதவஞ் செய்திலே னுதவச்
சிந்தையிற் றுறக்கம் வேண்டுமென் றெண்ணிச்
செல்லுமன் றல்லதுன் னுயிர்மேன்
முந்துறக் காலன் வரப்பெறா னென்றே
முடிவிலா வொருவர மொழிந்தான்

குருகுலச்சருக்கம் – 102

வலைஞர் தலைவன் யோசனகந்தியை மன்னன் முன் நிறுத்தி, " இவளையாரோவென நினைத்தல் வேண்டாம். உனக்கு மனைவியாக, உன்னை மணப்பதற்காகவே தவம் புரிந்தவள். உனக்கேற்ற மனைவியாதற்குரிய பெண்ணே யன்றி வலைஞர் குலப் பெண்ணல்லள்" எனச் சொல்லி அவளது வரலாற்றினைக் கூறினான்.

வரலாறு:- இந்திரன் அளித்த விமானத்தின் மீது சேதி வமிசத்தில் தோன்றியவனான 'வசு' என்பான் தேவர்களைப் போல வான்வழி சென்றான். அவ்வாறு செல்லும் போது அவனுக்கு அவனுடைய மனைவி கிரிகை என்பாளுடைய நினைவு வரவே காம விகாரங் கொண்டான். அச்சமயத்தில் சுக்கிலம் வெளிப்படவே, சூரியனால் படைக்கப்பட்ட யமுனை நதியில் அது வீழ்ந்தது. பிரமனது சாபத்தால் கிரிகை என்ற தேவமாது மீனாயினாள். அம்மீன் யமுனை நதியில் திரிந்து கொண்டிருந்தது. அம்மீன் வசுவினுடைய சுக்கிலத்தை உட்கொண்டது. உடன் அம்மீன் கருப்பமுற்றது. அந்த மீன் வலைஞர்தம் வலையிற்பட, அதனை மீனவர்கள் அரிந்தபோது அதன் வயிற்றிலிருந்து ஒரு புதல்வனும் ஒரு புதல்வியும் கிடைத்தனர். வலைஞர் தம் தலைவனிடத்து அக்குழந்தைகளை ஒப்படைத்தனர். வசுவினிடத்து இக்குழந்தைகளை வலைஞர் தலைவன் திருப்பிக் கொடுத்த போது, வசு மகனை மட்டும் பெற்றுக்

கொண்டு மகளை வலைஞர் தலைவனிடமே கொடுத்துச் சென்றான். அன்று முதல் இன்று வரை வலைஞர் தலைவனே அப்பெண் குழந்தையைத் தன் மகளே போல வளர்த்து வருகின்றான்.

'அப்பெண்ணே யோசனகந்தி. அவளை வளர்த்து வருபவனே நான்' என வலைஞர் தலைவன் மன்னனிடம் கூறினான்.

இவ்வரலாற்றினைக் கேட்ட பின்பு சந்தனு யோசன கந்தியை மணமுடித்துக் கொண்டு இன்ப வாழ்வினை மேற் கொண்டான். யோசனகந்தி சூரியனைப் போலவும் சந்திரனைப் போலவும் இரு புதல்வர்களை யீன்றனள். இவ்விருவரும் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்பவர் களாவார்கள். இவர்களை, முறையாக வீடுமன் கல்வி, கேள் விகளில் வல்லவராக்கினான். அரசர்களுக்குரிய அனைத்துப் பயிற்சிகளையும் பயிற்றுவித்தான்.

வயது முதிர்ந்த காரணத்தினால் சந்தனு மன்னன் விண்ணுலகடைந்தான். வீடுமன் தன் தந்தையின் மரணத் திற்குப்பின் வலைஞர் தலைவனுக்குக் கொடுத்த வாக்குப்படி அவன் மகள் வயிற்றுப்பிள்ளை சித்திராங்கதனை அரசுக் கட்டிலமர்த்தினான். சித்திராங்கன் என்ற கந்தருவன் ஒருவன், தன் பெயரைத் திருடிக் கொண்டாய் என சித்தி ராங்கதனை இரவில் வந்து கொன்றான்.

இதனையறிந்த தாய் யோசனைகந்தி மிக்க வருத்த முற்றாள். அவளது வருத்தத்தை நீக்க வேண்டி வீடுமன் சித்திராங்கதனுடைய தம்பி விசித்திரவீரியனுக்கு முடி சூட்டி அரசுப் பொறுப்பினை அவனிடமே கொடுத்தான். சித்திராங் கதன் ஆட்சி புரிந்து வரும் போது காசி மன்னன் தன்னுடைய கன்னியர்களுக்கு சுயவரம் நடத்த ஏற்பாடு செய்தான். இச் செய்தியறிந்த வீடுமன், தன் தம்பிக்கு மணம் முடிக்க வேண்டும் என சுயவரத்திற்குச் சென்றான்.

## அம்பை-அம்பிகை-அம்பாலிகை

சுயம்வர மண்டபத்துள் வீடுமனும் தன் தம்பியுடன் அமர்ந்திருந்தான். தோழி ஒவ்வொரு அரசரின் சிறப்புக்களையும் கூற, அது கேட்டு மாலையிட அம்பை, அம்பிகை, அம்பாலிகை மூவரும் மாலையுடன் வந்தனர். வீடுமனைக் கண்ட கன்னியர் மூவரும் அவன் தோற்றத்தையும், வீரத்தையும் கண்டு மாலையிட விரும்பினர். ஆயினும் வயதான நிலை கண்டு தயங்கினர். இதனையறிந்த வீடுமன் மூவரையும் தன் தேர் மீதமர்த்திக் கொண்டு அத்தினாபுரியை நோக்கி விரைந்தான். மற்ற மன்னர்கள் வீடுமனைத் தொடர்ந்தார்கள். வழியில் வீடுமனை வளைத்துக்கொண்டு போரிட்டனர். சாலுவ தேசத்து மன்னன் பிரமதத்தன் என்பவன் வீடுமனோடு செய்த போராற்றலைக் கண்டு அம்பை என்பாள் அவன்பால் காதல் கொண்டாள். இதனையறிந்த வீடுமன் பிறர் மீது காதல் கொண்ட கன்னியை நாங்கள் விரும்போம் எனக்கூறி, அவளை பிரமதத்தனிடம் விட்டுச் சென்றான். வீடுமன் அம்பிகையையும். அம்பாலிகையையும் தன் தம்பி விசித்திர வீரியனுக்கு மணமுடித்து வைத்தான்.

சாலுவ வேந்தன் - பிரம தத்தன் 'பகைவர் கவர்ந்து சென்ற உன்னை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்' எனக் கூறி அம்பையை மணந்து கொள்ளவில்லை.அம்பை மீண்டும் தன்னைச் சிறையெடுத்துச் சென்ற வீடுமனையே நாடினாள் என்னைச் சாலுவ வேந்தன் மணம் புரிந்து கொள்ள விரும்பாததால், தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டினாள். வீடுமன் மறுத்து விடவே, கண்கள் சிவக்க உள்ளத்தே தீயெழ வெகுண்டாள். தன் தந்தையிடம் சென்றாள். நிகழ்ந்ததைக் கூறினாள். உடன் காசிராஜன் வீடுமன்பால் தூதுவர்களை அனுப்பி, அம்பையை மணந்து கொள்ளும்படி வேண்டினான். வீடுமன் தூதுவர்களிடத்தேயும் தன் கருத்தினை முடிவாகக் கூறி மணம் முடித்துக் கொள்ள மறுத்து விட்டான். காசிராஜன் தன்

மகள் அம்பையிடம், ' நீ பரசுராமனிடம் இதனைக் கூறி உன் விருப்பத்தை முடித்துக் கொள்வாயாக' என்றனன். அம்பை பரசுராமனிடம் சென்றாள். தான் வந்த காரணத்தையும், தன் கருத்தினையும் கூறினாள்.

பரசுராமன் அம்பையின் குறையினைக் கேட்டு, 'உன் குறையினை நான் நிறைவேற்றுவேன்' என்று உறுதி கூறினான். அம்பையை அழைத்துக் கொண்டு பரசுராமன் வீடுமனை நோக்கிச் சென்றான். பரசுராமனைக் கண்ட வீடுமன் அவனை எதிர் கொண்டழைத்து வரவேற்றான். வந்த காரணம் யாதென வினாவினான். பரசுராமன் அம்பையை நீ மணந்து கொள்ள வேண்டும் எனக் கூறினான். அது கேட்ட வீடுமன் தான் அம்பையை மணந்து கொள்ள முடியாமைக்கு ஆன காரணத்தையும், தன் விரதத்தையும் தெளிவு பட எடுத்துக் கூறினான். என் தந்தையின் இன்ப வாழ்விற்காக நான் திருமணம் செய்து கொள்வதில்லையென சூளுரை கொண்டுள்ளேன். எனது குருவாகிய உங்கள் சொல்லை உலகில் எவரும் மறுக்க மாட்டார்கள் எனினும் என்னிலை தங்கள் வேண்டுகோளை ஏற்க முடியாததாக இருக்கிறதே'' என்று கூறி வருந்தினான்.

இன்சொலாலவுனி கொண்ட வெந்தைமுத
   லின்ப மன்றலினி தெய்தநான்
வன்சொலா விரத மணமுறே னென
   மனத்தினால் விரத மன்னினேன்
நின்சொல் யாவருமறா ரெனக் கருதி
   நீயுரைப்பினு நிகழ்ந்த விப்
புன்சொலா னதினி மாதவத் தின்மிகு
   புனித வென்செவி பொறுக்குமோ

குருகுலச்சருக்கம் - 138

களம்புகுந் தவரை மீள வேகுதல்
   கொடாத கார்முகவி னோதகேள்
உளம்புகுந் தினி திருக்குநற் கடவுள்
   உன்னை யன்றியிலை யுண்மையே

வளம்புனைந் தவதுராக போகமிகு
மாதர் மங்கையர் பொருட்டினால்
விளம்பு மிந்தமொழி யொழிக வென்றனுயிர்
லேண்டு மென்னினும் வழங்குவேன்

குருகுலச்சருக்கம் - 139

பரசுராமன் வீடுமனது மறுப்புரையினைக் கேட்டு மனங்கொதித்தான். போருக்கு வருக எனத் தேரேறினான். நாம் மேற்கொண்டுள்ள உறுதி மொழியினின்றும் தவறுவதைக் காட்டிலும் குருவுடன் போர் செய்து மாள்வதே நன்றெனக் கருதினான். வீடுமனும் தேரேறிப் போர் செய்யத் துணிந்தான். இரவும் பகலும் இடைவிடாது தொடர்ந்து பத்து நாள்கள் போர் புரிந்தனர். முடிவில் பரசுராமன் வீடுமனிடம் தோற்றோடி விட்டான். பரசுராமனை நம்பி வந்த அம்பை இனி தன் எண்ணம் நிறைவேற வழியில்லை என்ற முடிவுக்கு வந்தாள்.

தான் இந்நிலைக்கு வரக் காரணமாகவிருந்த வீடுமனை வெல்லுஞ்சூரனாவேனென்று உறுதி பூண்டு பெருந்தவமியற்றக் கானகம் சென்றாள். அங்குக் கடுந்தவமியற்றி வீடுமனைக் கொல்லும் சிகண்டியாக ருதுபதனிடத்துத் தோன்றினாள்.

தாளி ரண்டினிலொர் தாண்மடக்கியொரு
தாளில் வைத்தெம்மை சமைத்தபொன்
தோளி ரண்டினை மீதெடுத்துநனி
தொழுதியக் கிதுணை யடியிலே
வாளி ரண்டனைய விழிமலர்த்திநிறை
வாவி நீரினிடை வானுளோர்
நாளி ரண்டதனொடை யிரண்டுமொரு
நாளெனும் படி நடக்கவே

குருகுலச்சருக்கம் - 145

முயலிலா மதிமுகத்தினா ளொருவர்
முயலருந் தவமுயன்ற பின்
புயலிலா தமினலொத்த மெய்யிலொளி
புரியியக் கிதன தருளினான்
மயில னாடனதுவடிவகற் றியிகல்
யாக சேனனது வயினிடைச்
செயலி லாறுமுக னிகரெனத்தகு
சிகண்டி யாயினள் சிறக்கவே

குருகுலச்சருக்கம் - 146

பாரதப் போரில் ஒன்பதாம் நாள் சிகண்டி போர்க்க ளஞ் சென்றாள். வீடுமன் சிகண்டியின் கணைக்கு வருந்தி னான். 'சேயுந் தனக்கு நிகரில்லாச் சிகண்டி கடுங்காற் சிலை வாங்கிக் காயுங் கணைகட்கிலக்கானான் காமன் கணைக்குங் கலங்காதான்.' இதனையறிந்த துச்சாதனன் சிகண்டியின் கொடி, தேர், வில் இவற்றைச் சிதைத்தான். சிகண்டி தோற்றது கண்டு அருசுனன் தேரைச் செலுத்திச் சிகண்டியின்பால் வர பகைவரும் அஞ்சியோடினர்.

அடுத்த நாளும் சிகண்டி போர்க்களஞ் சென்றான். அவனைச் சூழ்ந்து அருசுனன் வீடுமனெதிரில் அவனைக் கொண்டு சென்றான். சிகண்டியைக் கண்டதும் வீடுமன் ஆயுதத்தைப்போக விட்டு நின்றான். நிராயுதபாணியான வீடுமனை அம்புகளால் தாக்க ஆகாது எனச் சிகண்டி வந்த வழியே செல்ல, அர்சுனன் மீண்டும் சிகண்டியை வீடுமன் முன் நிறுத்தித் தானும் அம்புகளை வீடுமன் மீது எய்தான். அர்சு னனுடைய அம்புகளே தம்மீது பாய்கின்றன என்று வீடுமன் நினைந்து மகிழ்ந்தான். அம்பையின் தவப்பயன் நிறைவு றுங்காலமானதாலும், வீடுமன் தன் வாழ்நாளை முடித்துக் கொள்ள விரும்பியதாலும் மலரம்புகளின் மீது வீடுமன் சாய்ந்தான்.

விசித்திர வீரியன் அம்பிகை, அம்பாலிகை ஆகிய இரு பெண்களிடத்தும் இன்பம் துய்த்து முடிவில் க்ஷயரோகத்தால் வானுலகடைந்தான். 'ராஜ்ய க்ஷமா' என்ற க்ஷய ரோகம் மிகு போகத்தால் தோன்றும் நோய். விசித்திர வீரியனுக்கு மகப்பேறில்லை. ஆகவே, குருகுலம் வாரிசு இன்றி தம் வளர்ச்சியில் தடைப்பட்டது. வீடுமன் தன் சோதரரின் பிரிவால் வருந்திக் கொண்டிருக்கும் பொழுது தாய் - சந்தனுவின் மனைவியான யோசனகந்தி வீடுமனைப் பார்த்து, ''நமது வம்ச விருத்திக்குத் தடையாக விசித்திர வீரியன் விண்ணுலகடைந்து விட்டான். வம்சவிருத்தித் தடைபடாமல் தொடர உன் கொழுந்தியரிடத்து புத்திரர்கள் பிறத்தல் வேண்டும். அதற்கான நற்செயல்களை நீதான் மேற்கொள்ளுதல வேண்டும்'' என்று சொன்னாள் ''தாய் சொல்லைத் தட்டாமல் நீ ஏற்பதால் உன்னுடைய, திருமணம் செய்து கொள்ளுவதில்லை என்ற விரதமும் கெடாது'' எனவும் கூறினாள். இடியோசை கேட்ட நாகம் போல வெகுண்டு தன்னிரு காதுகளையும் கைகளால் பொத்திக் கொண்டு 'மீண்டும் நான் கங்கையாளிடத்து மகவாகப் பிறந்தாலும் என் விரதத்தை விடேன். என்று வீடுமன் கூறினான்.

'பூமியிற் சென்று பெண்ணின்ப மற்றுவாழுமாறு சாபம் பெற்ற நான் பெண்ணின்பம் அடைந்தால் இந்தப் பிறவியால் சாபத்தின் பயனை நுகராமையால், சாபத்தின் பயனைப் பெறுமாறு மீண்டும் பிறக்க வேண்டுமே' என்றெண்ணி வருந்தினான்.

ஈண்டுதேவர நீதியிற் கொழுந்திய
    ரெழின்மகப் பெறநின்னால்
வேண்டுமாலிது தாயர்சொல் புரிதலின்
    விரதமுங் கெடாதென்ன
மூண்டுவானுரு மெறிந்தபே ரரவென
    முரிந்திரு செவிபொத்தி
மீண்டுமா நதி வயின்மிசைப் புரியினென்
    விரதமுந் தபுமென்றான்.

சம்பவச் சருக்கம் - 4

மச்சகந்தி யோசனகந்தியானது: மச்சத்தின் வயிற்றிற் பிறந்த மச்சகந்தியாயிருந்தவளை, யமுனை நதியருகே ஒரு நாள் பராசரன் என்ற முனிவன் கண்ணுற்றான். அவன் ஒரு மகனைப் பெற வேண்டி அவளுடல் மீதிருந்து வீசும் புலால் நாற்றத்தைப் போக்கி யோசனை பரப்பு வீசும் நறும ணத்தைக் கொடுத்து, அவளைத் தன்னருகில் அழைத்தான் பனியினால் மறைத்து வளப்பமான நீரிறங்கு துறையில் அவ ளைக் கூடி வியாசன் என்ற மகவைப் பெற்றான்.

பருதி தந்தமா நதிமருங் கொருபகற்
 பராசரன் மகப்பேறு
கருதி வந்துகண் டென்னையு மெனதுமெய்க்
 கமழ்புலவை யுமாற்றிச்
சுருதி வாய்மையின் யோசனைப் பரப்பெழு
 சுகந்தமு மெனக்கீந்து
வருதி நீயெனப் பனியினான் மறைத்தொரு
 வண்டுறைக் குறைசேர்ந்தான்.

சம்பவச் சருக்கம் - 6

க்ஷத்திரிய மகளிர் காமவிச்சையினாலன்றி குல விருத் திக்காக முனிவரைச் சேருதல் சாத்திர சம்மதமாதலால் கற் புக் கிழுக்காகாது என்பது உரையாசிரியர் கூற்று.

முன்னைய பாடலில், 'பழுதின்மங்கையர்' என்ற தொடருக்கு உரையெழுதிய உரையாசிரியர் 'பிறரொரு ஆடவர்பால் மகப்பேற்றினைப் பெற்றுக்கொள்' எனக் கூறப் பெற்றாலும் அம்மங்கையர்கள் பழுதுடையவர்கள் அல்லர் எனக குறிப்பிடுவதால் மேற்கூறிய கூற்று வலுவடைதலை யும் அறிக. அன்றியும், முன்னோர் பேணி வந்த மரபினை யும் எடுத்துக் காட்டுகின்றார் நூலாசிரியர் அஃது,

'பரசுராமனால் க்ஷத்திரிய குலம் அற்றுப்போவதாயி ருந்த ஒரு சந்தர்ப்பத்தை, முனிவரால் அரச மாதர் மகப் பேற்றினைப் பெறச் செய்து மாற்றியமைத்தாற் போல'

இதற்கொரு ஏற்பாட்டினைச் செய்வோமென வீடுமன் தன் தாயிடங் கூறினான்.

மழுவெனும் படையி ராமனான்
    மனுகுலமடிந் துழியவர் தத்தம்
பழுதின் மங்கையர் முனிவர
    ரருளினாற் பயந்தனர் மகவென்பர்
எழுது நன்னெறி முறைமையின்
    விளைவிப்ப தேயியற்கை யென்றிருகையால்
தொழுது சொன்னபின் மனந்தெளிந்
    தன்னையுந் தோன்றலுக்குரை செய்வாள்

சம்பவச் சருக்கம் - 5

[தன் வரலாற்றைக் கூறி, இனி மேற்கொள்ளும் செயலில் தவறில்லை என்பதனையும் உணர்த்தினாள்]

'வியாசனை அழைத்து குருகுலத்தை யுண்டாக்கு வாய்' என்று யோசனகந்தி வீடுமனிடம் கூறினாள். வீடு மனும் அவ்வாறே செய்து முடிக்க இசைந்தான்.

வீடுமனது அனுமதி பெற்று, வியாசன் தன் தாயின் கருத்தினை நிறைவேற்ற தன் மருமகளிரை காளி சந்ததி வளர்க்க இசையும்படி வேண்டிக்கொண்டாள். அவர்களும் மாமியின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்திலர்.

வியாசன் அம்பிகையிடம் சென்றான். கணவனை நினைத்தவாறு அச்சத்தால் கண் மூடிய வண்ணம் அம்பிகை மஞ்சத்திருந்தாள். அவளைக் கூடிய வியாசன் தன் தாயி டஞ் சென்றான். 'தாயே! நான் அம்பிகையிடம் சென்ற போது அவ்வம்பிகையிடத்திலே உண்டான உடற்குறியினால் இதனைச் சொல்லுகிறேன். அம்பிகைக்கு பதினாயிரம் யானை கொண்டுள்ள பலத்தோடு கூடிய ஒரு ராஜசிரேஷ் டன் பிறப்பான். ஆனால், அந்தப் புத்திரனுக்கு விழிப்பு லன் இல்லை. நான் அவளைப் புணரும்போது, அவள்

தனது இருகண்களையும் பொத்திக் கொண்டதால் ஏற்பட்ட பலன்'' என்று கூறினான்.

பராசரன் றருமுனி நினைவொடு
கருப்பதித்து மீளவுஞ் சென்று
நிராசைநெஞ் சினனவசரத் தவளிடை
நிகழ்ந்த மெய்க்குறி தன்னால்
கராசலம் பதினாயிரம் பெறுவலிக்காய
மொன்றினில் பெற்று ஓர்
இராச குஞ்சரம் பிறந்திடும்
விழிப்புல னில்லைமற் றதற்கென்றான்

சம்பவச் சருக்கம் - 13

அம்பிகையிடத்துப் பிறக்கும் குழந்தை பிறவிக் குருடாயிருக்குமென்பதை அறிந்த யோசனகந்தி மீண்டும் வியாசனை நோக்கி இவ்வுலகை ஆள ஏற்றதொரு புத்திரனை அம்பாலிகைபால் தருக என வேண்டிக்கொண்டாள். அன்னையின் சொல்லை ஏற்றுக் கொண்ட வியாச பகவான் அம்பாலிகை மனை சேர்ந்தான். அவள் அம்முனிவனைக் கண்டு கருத்தோன்றுமுன் நாணமும், அச்சமும் கொண்டாள் உடல் வெளுத்தாள். அம்பாலிகையிடம் கருவளித்த வியாசன் தன் தாயிடம் சென்று,'அம்பாலிகை வெண்ணிறத்தோடு கூடிய அருந்திறற் குமரனை ஈன்றெடுப்பாள்' எனக் கூறினான். தான் அவளோடு கூடுங்காலத்தில் அவள் அச்சத்தாலும், நாணத்தாலும் உடல் வெளுத்தமையே காரணம் என்றும் கூறினான்.

அருந்தபோநிதி யவளிடத் தினுங்கரு
வருளியக் கணத்தேகி
இருந்தவாறு தன்னன்னையோ டினிதுரைத்
திமையவ னெச்சென்றான்
பெருந்தரா தலந்திறலினா லொருதனி
பெறுமுறை யவுஞ்பெற்ற

முருந்தவா ணகைமருட்சியால் விளர்த்திடு
முழுவதுமுட லென்றே

சம்பவச் சருக்கம் - 16

உரிய காலத்தில் அம்பிகை திருதராட்டினையும், அம்பாலிகை பாண்டுவையும் பெற்றனர். அக்குழந்தைகள் இருவரையும் கண்ட பாட்டி - சத்தியவதி ஒன்று குருடாகவும், மற்றொன்று வெளுப்பாகவும் இருப்பதைக் கண்டு அரசராதற்குறிய தகுதியுடன் இன்னுமொரு குழந்தையைப் பெற்றுத்தர வியாசனை நினைத்தாள். வியாசனும் தாய் சொற்படி அம்பிகைபாற் சென்றான்.

வியாசன் வந்துள்ள சேதியை யறிந்த அம்பிகை அச்சமுற்றாள். வியாசனிடத்துத் தான் செல்ல அஞ்சி, தனது தோழியை அனுப்பி வைத்தாள். அவளிடத்து இன்பந்துய்த்த பின் வியாசன் தன் தாயிடஞ் சென்று, 'யமன் அமிசமாகப் பிறக்கும் இத்தோழியின் புத்திரன் விதுரன் என்ற பெயர் பெறுவான். இனி, புத்திரர் பொருட்டு என்னை அழைக்காதீர்கள்'' என்று கேட்டுக் கொண்டு விடைபெற்றுச் சென்றான்.

## காந்தாரி

காந்தார தேசத்து அரசன் சுபலன் என்பவனுடைய மகள் காந்தாரி. வடமீன் - அருந்ததியையொத்த கற்பிற் சிறந்தாளை திருதராட்டிரனுக்குத் திருமணம் செய்துதர சுபலன் மனமுவந்தான். தனக்கு மணாளனாக வரப்போகும் திருதராட்டிரன் இரண்டு கண்களையும் இழந்த பிறவிக் குருடன் என்பதை உறவினர்கள் கூற அறிந்த காந்தாரி 'இனியான் ஒருவரையும் கண்களால் காணேன்' என்று தன் கண்களைப் பட்டத்தாற் மறைத்துக் கொண்டாள்.

இமைத்த கண்ணிணை மலர்த்தினி
நோக்கலேன் யானொருவரை யென்று
சமைத்த பட்டமொன் றினிற்பொதி
பெதும்பையைத் தந்தையுந் தனயோரும்

அமைத்தருங் குலமுனிவரு மறைமுறை
யருங்கடி விளைத் திட்டார்
சுமைத்தரா பதிமதி யிவளுரோகிணி
யென்னவே தொழத் தக்காள்

சம்பவச்சருக்கம் - 24

தருமபுத்திரனைக் குந்தி ஈன்றெடுத்தாள் என்பதனை யறிந்த காந்தாரி, பொறாமை கொண்டு தன் வயிற்றில் உள்ள கருப்பம் குழம்புமாறு கல்லால் மோதிக் கொண்டாள். அடியுண்ட கருப்பம் சிதைந்து கருப்பையோடு குருதி பொங்க, கீழே மயங்கி வீழ்ந்தாள்.

இதனையறிந்த வியாசன் காந்தாரியிடஞ் சென்று அக் கருக்கோசத் தசையை நூறு கூறு செய்து நெய் நிரப்பிய நூறு கும்பங்களிலிட்டான். மிகுந்ததை கலிசப்பானை யொன்றிலிட்டு வைத்தான். 'பாதுகாக்கப்பட்ட இக்கருக் கூறுகளை உருப்பெற்று நிறைவுறும் வரை சேமித்து வைப்பாயாக' எனக் காந்தாரியிடம் வியாசன் கூறிச் சென்றான்.

காந்தாரியும் தாழிகலிளிட்ட தசைக் கூறுகளைப் பாதுகாத்து உற்பவிக்கும் காலத்தை நோக்கிக் காத்திருந்தாள்.

குந்தியின் வயிற்றில் வீமசேனன் தோன்றிய முன்னளில், இழுது தாழியிட்ட தசைமுற்றி துரியோதனன் தோன்றினான். பின், துரியோதனனுடைய தம்பியரும், துச்சளையும் தோன்றினார்கள். பாண்டவர்களில் தருமபுத்திரன் துரியோதனனை விட மூத்தவன். வீமன் துரியோதனனை விட ஒரு நாள் இளையவன்.

துரியோதனனுடைய அழைப்பிற்கிணங்க பாண்டவர்கள் அத்தினாபுரம் வருகிறார்கள். திரௌபதியை திருதராட்டினன் வாழ்த்தி காந்தாரியிடம் அனுப்புகிறான். பாண்டவர்கள் காந்தாரியை வணங்கினார்கள். காந்தாரியும் அவர்களை வாழ்த்தினாள்.

இருந்த மைந்தரு மேவ லோடுசென்று
அருந்த திக்குநே ரன்னை நன்னையும்
பரிந்தி றைஞ்சினர் பயில வாழ்த்தினாள்
திருந்து பூணினாள் சிறுவர் தம்மையே

சூதுபோர்ச்சருக்கம் - 134

தன்னைக்காட்டிலும் குந்தி மிக்க தவத்தைச் செய்த வள் என்று எண்ணி குந்தியைப் பாராட்டி அவளை மிக்க மதித்தாள். திரௌபதி தருமனது விருப்பப்படி விதுரனு டைய மாளிகையில் அன்று இரவு தங்கினாள். அடுத்த நாள் சபாமண்டபத்துக்கு வரும்படி துரியோதனன் பிரதிகாமி என் பவனிடம் செய்தி சொல்லியனுப்பினான் அவன் கூற அனை வரும் சபா மண்டபத்தை அடைந்தனர். தருமபுத்திரன் திரௌபதியை மீண்டும் காந்தாரியிடம் அனுப்பிவிட்டு, தான் துரியோதனனுடைய சபைக்குச் சென்றான்.

சூதாட்டத்தில் தருமபுத்திரன் அனைத்தையும் தோற் றான். துரியோதனனுடைய ஏவலினால் துச்சாதனன் காந் தாரியின் மாளிகையை அடைந்தான். 'தோன்றா நயனத் துணைவனைப் போற்றுணைக் கண் டுகிலிற் சூழ்ந்திருந்த, ஈன்றாளில்லத் திருந்தானை யிகலோ டெய்தி' துச்சாதனன் திரௌபதியைப் பிடித்திழுக்கச் சென்றான். திரௌபதி திகைத்துத் தன் மாமி காந்தாரிபால் ஒதுங்கினாள். காந் தாரி சிறிதும் இரக்கங் கொள்ளாது, திரௌபதியைத் தன் பக்கல் இருத்தி அவளுடைய வழியும் கண்ணீரைத் துடைக் காமல், 'அழைப்பவர் உன் பகைவரல்லர். நீ சபைக்குச் சென்று உன் கருத்தை அரசர்களிடையே கூறி வருவாயாக' என உரைத்தாள்.

பிறகு. பதினெட்டாம் நாளைய போரில் துரியோத னன் வீமனால் தொடையில் அடிபட்டிறந்தான் என்று சஞ் சயன் திருதராட்டிரனுக்கும். காந்தாரிக்கும் செய்தி கூறி னான். செய்தி கேட்ட காந்தாரி வருந்தினாள். தம் மக்க

ஞன் சேனாவிந்து, சுதக்கணன், பிங்கலசன், சலாசந்தன், வீமவாகு என்ற ஐவரும் பாரதப் போரில் நான்காம் நாள் வீமனாற் கொல்லப்பட்டனர். அன்றிலிருந்தே போர்க்க ளத்தில் தினந்தோறும் காந்தாரியின் மக்கள் இறந்தனர். ஆகவே, தொடர்ந்து புத்திர சோகத்தால் மூழ்கிக் கிடந்த காந்தாரிக்கு சஞ்சயன் கூறிய செய்தி காதில் விஷம் பாய்ந்தது போலிருந்தது. இடியோசை கேட்ட நாகம் போல் கீழே வீழ்ந்தயர்ந்தாள்.

சேனா விந்துவை முதலாந்திரு மைந்தரை
　　வருவான் சென்றக நாட்டொடு
ஆனா மற்சொரி கண்ணீ ராறு
　　பெருங்கடலாக அழுது சோர்வாள்
பானாள் வந்தருண் முனிவன் பகருமொழி
　　விடஞ்செவியிற் பட்ட தாகத்
தூநா கமுருமொலி கேட்டயர்வது
　　போல்வீழ்ந் தழுதாள் சுபலன் பாவை

பதினெட்டாம் போர்ச்சருக்கம் - 240

## குந்திதேவி

யது குலத்தரசன் சூரன் என்பானுடைய மகள் பிரதை. சூரனுடைய அத்தை குமாரனான குந்தி போசனுக்கு மகவில்லாக் குறையைப் போக்க சூரன் தன் மகள் பிரதை யைக் குந்தி போசனுக்கு ஸ்வீகாரப் புத்திரியாகக் கொடுத் தான். குந்திபோசனும் பிரதையைத் தன் வளர்ப்பு மகளாக ஏற்றுக் கொண்டான். குந்தி போசனால் வளர்க்கப்பட்ட தால் பிரதை குந்தியென் றழைக்கப் பட்டாள். குந்தி. அறிவில் சரசுவதி போலவும், அழகில் இலக்குமி போலவும், கற்பில் அருந்ததி போலவும், பொறுமையில் பூமா தேவி போலவும் விளங்கினாள்.

புத்திய வருங்கன்னி மகள் பொற்பினாற்
　　பூந்திரு புனைகுழால்

*அந்திவா யருந்ததி பெரும் பொறையினா*
*லவனிமா ணிகரென்னக்*
*குந்திபோ சரிற்சூர னென்பவள் மகள்*
*குருகுலந் தழைத்தோங்க*
*வந்தியா வரும்பிரதை யென்றடி தொழ*
*மதியென வளர்கின்றாள்*

*சம்பவச்சருக்கம் - 25*

குந்திபோசனிடத்திலே வளருகின்ற போது குந்திபோசனுடைய அரண்மனைக்கு துருவாச முனிவன் வந்தான், முனிவனுக்குக் குற்றேவல் புரியும்படி தன் வளர்ப்பு மகளாகிய குந்திக்கு மன்னன் கூறினான். முனிவனுடைய குற்றேவலில் மனம் பதித்த குந்தி, தன் இளமைப் பருவத்தில் விளையாடும் விளையாட்டுக்களை எல்லாம் மறந்தாள்.

தனக்குக் குற்றேவல் புரிந்து, தன்னை மகிழ்விக்கும் குந்தியின் செயல்களைப் பாராட்டிய முனிவன் பல மாதங்கள் அங்கேயே தங்கியிருந்தான். ஓராண்டிற்குப் பிறகு துருவாச முனிவன் குந்தியை அழைத்தான். ''எனக்கு, உன்னைப் போல ஓராண்டு காலம் பணிவிடை செய்து என் மனங் கோணாமல் நடந்து கொண்டவர் இவ்வுலகில் உன்னையன்றி வேறுயாருமிலர். உனக்கு ஒரு தேவ மந்திரத்தைச் சொல்லுகின்றேன். அதனைக் கேட்பாயாக! தேவர்களுள் யார் யாரை நினைத்து நீ இம் மந்திரத்தை செபிக்கின்றாயோ, அவரவர் உடனே உன்னிடம் வருவர். அவரையொப்ப உனக்கோர் குமாரனையும் நீ பெற உன்னோடு கூடி மகிழ்வர்'' என்று கூறி முனிவன் அரண்மனையை விட்டகன்று தம் ஆசிரமம் சென்றான். அதனை மிக்கக் கருத்தோடு கேட்டு மனதில் பதிய வைத்துக் கொண்ட குந்தியும் அரண்மனையை விட்டுத் தன் மாளிகை - கன்னி மாடம் - வந்து சேர்ந்தாள்.

ஒருநாள் இரவு முனிவன் கூறிச் சென்ற அவ் வேத மந்திரத்தின் பயனையறிய வேண்டி தன் மாளிகையில் நிலா

முற்றத்தனை யடைந்தாள். தன் இதய மலர் மலர மகிழ்ந் தாள். சூரியனை மனதிலே நினைத்துக் கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு அவ்வேத மந்திரத்தை உச்சரித்தாள். உடனே, சூரிய பகவானும் அவள் முன் தோன்றினான்.

செந்நிறமுள்ள பொற் பட்டாடையும், கவச குண்ட லங்களும், இரத்தின கிரீடமும், ஆரமும், பசும் பொன்னா லான தோள் வளையலை யணிந்த புயங்களும், பவழம் போன்ற செந்நிறத் திருமேனியும் கண்ட, குந்தி தேவி அதி சயித்தாள். சூரிய பகவான், அம்மந்திரத்தைக் கூறிய நறு மணங்கமழும் குந்தியின் உடலை அழகுறத்தழுவினான்.

அச்சத்தால் குந்தி விலகினாள். பின் நாணத்தால் ஒதுங்கி நின்று, ''நான் கன்னிப்பெண் என்னைத் தொடாதே கற்பின் சிறப்பை நீ அறியாயோ'' எனக் கதறினாள். சூரியன் குந்தியை நோக்கி 'நீ என்னை அழைத்தது ஏன்? என்ன பயனைப் பெறும் பொருட்டு என்னை அழைத் தாய்?'' எனக்கேட்டு மீண்டும் கோபத்துடன் பேசலானான்.

''என் மனைவி சாயையும். மற்றோர் மனைவி உஷா தேவியும் அறியா வண்ணம் உனது தவறாமல் பலிக்கும் வேதமந்திரம்பொய்க்காதிருக்க உன்னை நாடி வந்தேன். நீ என்னை மறுத்தாயெனில் இம்மந்திரத்தை உனக்கு உபதே சித்த குரு என்ன பாடுபடுவாரோ? அவரை நான் சபித்தி டுவேன். நீ பிறந்த குலம் என்ன பாடுபடுமோ? என் சாபம் உன் குலத்தையே அழித்துவிடும் '' என்று தன் உடலைக் காட்டிலும் ஆயிரம் மடங்காக உளங்கொதித்தான்.

''நீ அஞ்சாமல், கோபிக்காமல் நாணத்தை விட்டு என்னோடு மகிழ்ந்து கூடுவாயெனில் என்னை முன் பெற்ற அதிதி போல் இவ்வுலகில் புகழைப் பெறுவாய். அப்புகழுக் குக் காரணமாக என்னை விடச் சிறப்புடைய ஆண் மகனை யும் பெறுவாய். உலகோர் அவனை தாளில் விழுதற்குரிய மேன்மையுடையவனாவான். நீ என் சொற்களை மதித்து

உடன்படாவிடில் என்றுங் கன்னியாகவே யிருப்பாய்'' என்ற குறிப்புத் தோன்றக் கூறினான். இதனைக் கேட்ட குந்தி படுக்கையறைக்குச் சென்றாள். மலரணை மீது சாய்ந் தாள்.[சூரியன் அவளைப் புணர்ந்தான். அவசமாகிய குந்தி, பின் தன் வசமானாள். சூரியனும் மறைந்தான். குந்தி கருக்கொண்டாள்.

தினகரன் சுடர்வடிவமு மமிர்தெழ திங்களின் வடிவாகத்
தனதடந் திடுமார்புறத் தழீஇயபின் றையறன் னினைவெய்த
மனமகிழ்ந் ததும்வந்தது மணந்ததும் வரங்கொடுத்தது
மெல்லாம்
கனவெனும் படிகரந்தனன் பெருந்தகை கன்னியுங் கருக்
கொண்டாள்'

சம்பவச்சருக்கம் - 37

உரிய காலத்தில் ஓர் ஆண் மகவினைப் பெற்றெடுத் தாள். அப்புதல்வனை, உலகப் பழிப்புக்கு அஞ்சி ஒரு பெட்டியில் வைத்து ஆற்று வெள்ளத்திலே விட்டாள். சூரிய னுடைய கருணையினால் பிறந்தவன் - அக் குழந்தை கவச குண்டலத்துடன் விளங்கியது.

சூரன் மாமகள் சூரண தருளினாற்
நுலங்கு கன்னிகை யாகி
வார மாமணிக் கவசகுண் டலத்துடன்
வருமகன் முக நோக்கிப்
பார மாமரபினிற் பிறந்தவர் மொழி
பழுதினுக் கழு தஞ்சிப்
பூர மாநதிப் பேடகத்திடை நனி
பொதிந் தொழுக்கினண் மன்னோ

சம்பவச்சருக்கம் - 39

(அசுவ நதியிலே விட்ட பேழை, சமண்வதி நதிய டைந்து, பின் யமுனை வழியாகக் கங்கையைக் அடைந்தது என வியாச பாரதம் கூறும்.)

அந்தக் குழந்தையைத் தாங்கி வருகின்ற பெட்டியை கங்கை நதியெனும் தாய் தனது அலைக்கரங்களால் (தாலாட்டி) அசைத்து, அசைத்து வில்லாற்றல் மிக்க தேர்ப் பாகர் தலைவனான அதிரதன் என்பானுடைய நகரத்தில் சேர்ப்பித்தாள்.

ஆற்றில் வரும் வெள்ளத்தைக் கண்டு மகிழ வேண்டு மென்ற விருப்பத்தோடு ஆற்றங்கரையை யடைந்த அதிரத னும், அவன் மனைவி இராதை என்பாளும் அப்பெட்டியி னைக் கண்டனர். கரையோரம் ஒதுக்கப்பட்ட அப்பேழை யினை எடுத்துத் திறந்து பார்த்தனர். வறியவர் பெற்ற செல்வத்தைப் போல மிக்க விருப்பத்துடன் அக்குழந்தையை எடுத்துச் சென்று வளர்க்கத் தொடங்கினர்.

நாள்கள் பல கழிந்தன. குந்திக்குச் சுயம்வர ஏற்பா டுகள் நடந்தன. மன்னவர் பலர் திரண்டனர். அவர்களுள் பாண்டுவுக்கே குந்தி மாலை சூட்டினாள்.

உருவஞ் சிறந்து பலகோளு முதிக்கு மேனும்
மருவுங் குமுத மதிகண்டு மலரு மாபோல்
பருவஞ் செய்பைம் பொற்கொடி யன்னவள் பாண்டு வென்னும்
நிருபன் றனக்கே மனங்கூர் பெருநேய முற்றாள்.

சம்பவச்சருக்கம் - 44

## மாத்திரி.

மத்திர தேசத்தரசன் ருதாயனன் என்பவனுடைய மகள் மாத்திரி என்பவள். பாண்டுவுக்கு குந்தி மணமாலை சூட்டியதும், ருதாயனன் தன் மகள் மாத்திரியைப் பாண்டு விற்கு விரும்பி மணமுடித்துத் தந்தான். இருவரையும் மணந்து கொண்ட பாண்டு தன்னகர் வந்து இன்பமாக வாழ்ந்தான். ஒருசமயம், பாண்டு தன் இரு மனைவிமாரு டன் இமயமலைச்சாரலை யடைந்தான். பல மிருகங்க ளையும் வேட்டையாடி ஓரிடத்தே இளைப்பாறினான்.

அப்பொழுது, அம்மலைச்சாரலில் ஓரிடத்தே கிந்தம னென்ற முனிவன் தன் மனைவியோடு கூடி இன்பமனுபவிக்க விரும்பிதால் காலமும், பொழுதும் கண்டு, தான் மான் வடிவு கொண்டான். மான் வடிவு கொண்ட தன் மனைவி யோடு இன்பந்துய்த்துக் கொண்டிருந்தபோது, பாண்டு அம்மானைத் தன் அம்பினால் வீழ்த்தினான். கீழே விழுந்து உயிர் விட்ட அம்மான், ஒரு முனிவனுடைய வடிவங் கொண்டு பாண்டுவிடம் சென்றது.'சிவபெருமானால் எரிக் கப்பட்ட மன்மதனுடைய மலரம்புகளால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நான், அந்நோய் தீர மான் வடிவு கொண்டு என்மனையாளோடு நான் கிரீடித்திருந்தேன். என்னைக் கொன்றுவிட்டாய். என்போலவே நீயும் இன்ப சுகத்தில் ஈடு பட்டிருக்கும் போது இறந்திடுவாயாக' எனச் சபித்தான்.

இச்சாபத்திற்கு எதிர்பாராமல் ஆளான பாண்டு இனி பெண்களின் இன்ப சுகத்தில் ஈடுபடக் கூடாதென மனவுறுதி கொண்டு யாவரும் மேற்கொள்ள முடியாத தவத்தைப் பூண்டு கொண்டான். ஞானமுனியானான்.

நாமக் கலவி நலங்கூர நயந்து நாளும்
காமக் கனலை வளர்க்கின்ற கருத்து மாற்றித்
தாமக் குழலா ரிருவோரோடு தானு மொன்றி
ஓமக் கனலே வளர்த்தா னுணர்வுண்மை கண்டே

சம்பவச்சருக்கம் - 56

இவ்வாறு தவநிலையில் மனம் பதிந்து வாழ்ந்து வந்த பாண்டு மன்னன், ஒருநாள் குந்தியை நோக்கிக் கூறினான். 'காந்தாரி, வியாச முனிவரின் கருணையாலும், பெருமுதவி யாலும் நூறு மகவைப் பெறும்படியான ஒரு கருப்பத்தைக் கொண்டாள். நீயும் மகப் பேற்றினையடைய வேண் டாவோ' என்றான்.

இவ்வாறு கேட்டதற்குக் காரணம், பாண்டு மன்னன் சதசிருங்க பருவத்தில் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்த

போது, அங்குள்ள முனிவர்கள் பலருடைய நட்புக் கிட்டியது ஒரு சமயம் அம்முனிவர்கள் சிலர் பிரம்மலோகத்திற்குத் திரண்டு செல்ல விரும்பினர். அது கண்ட பாண்டு, 'எனக்கு மகப்பேறில்லையாயினும் கடுந்தவத்தை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தால் பிரம்லோகம் புகுவேன்' என்றான். அது கேட்ட முனிவர்கள், 'உனக்கு மகப்பேறுண்டு என்பதை ஞானக்கண்ணால் அறிந்துள்ளோம்' என்று கூறினார்கள். 'முனிவருடைய சாபத்தைப் பெற்ற எனக்கு மகப்பேறு எவ்வாறு உண்டாகும்?' என்ற சிந்தனையில் ஆழ்ந்தான். அதுபோழ்து வியாசனை பூசித்ததன் பயனாக காந்தாரி கருக்கொண்டால் என்பதை அறிந்தான். அறிந்த பாண்டு, தன் மனைவியும் புத்திரப்பேறு அடைய வேண்டுமென்று விரும்பினான். புத்திரபேற்றின் சிறப்பினைக் குந்தியிடம் கூறினான். அது கேட்ட குந்தி மேலும் கூறுவதைக் கேட்கும் துடிப்போடு வாளாவிருந்தாள்.

பாண்டு மேலும் கூறலானான். 'நான் முனிவருடைய சாபத்தால், உன்னைக் கூடி புத்திர பேற்றினை நல்க முடியாதவனாக உள்ளேன். நீ என் அனுமதியினால், முனிவர் மூலமாகவோ, தேவர் மூலமாகவோ சந்ததியை உருவாக்கிக் கொள்வாயாயின் நான் ஈடேறுவேன்' என்றான். 'என் கருத்தினைக் கேட்டு விருப்பத்தை நிறைவேற்ற அருள் புரிவாயாக' என்று குந்திமாதேவியை வேண்டிக் கொண்டான்.

இல்வாழ் பவர்க்கு மடவாரல தியாவரின்ப
நல்வாழ்வு தேசு புகழ்யாவு நடத்துகிற்பார்
தொல்வா னவரின் மறையோரிற் நுறக்கபூமி
செல்வார் பெறும்பே றினியருள் செய்தியென்றான்

சம்பவச்சருக்கம் - 62

தேவர் மூலமாகவோ, வேதியர் மூலமாகவோ குந்திதேவி மகப்பேற்றினைப் பெறின்,அதனால் பாண்டுவிற்கு நற்கதி சேரும் என்றும், பெறாவிடின் தீக்கதியே சேருமென்றும்

பாண்டு நம்பியிருந்தான். குந்திதேவி கணவனது சொல்லைக் கேட்டு நாணமுற்றாள். சொல்லுதற்குத் தகுதியில்லாவற்றை பாண்டு கூறியதாக உணர்ந்தாள். நதிகள் மலையில் தோன்றி நேரே கடலையடையுமே யன்றி வழியில் உள்ள சிறு சிறு குட்டைகளில் தங்குமோ? அதுபோல வீட்டிலிருந்து இல்லறத்தை மேற்கொள்ளும் மனைவிமார்க்குத் தன் கணவனையன்றி மற்றோர் மேல் மனம் செல்லுமோ? எனறெல்லாம் தன் கருத்தினைக் குந்தி பாண்டுவிற்கு எடுத்துக் கூறினாள்.

பாண்டு மன்னன் குந்தியின் கருத்தினை முழுதும் அறிந்தான். பின்னும் அவளை வற்புறுத்த, குந்தி மறுத்துரைக்க முடியாதவளாகி, முன்பு தான் துருவாச முனிவனால் அருளப் பெற்ற மந்திரத்தின் மேன்மையைப் பாண்டுவிடங் கூறினாள்.

அதனைக் கேட்ட பாண்டு மந்திரத்தால் மகப் பேறு பெறுவாய் என அனுமதி தரவே, தர்மராசனை குந்திதேவி அழைத்தாள். உடன் யமதருமராசன் வர, அவனோடு சேர்ந்து குந்திதேவி மிக்க அழகுடையவளாய், இன்பந் துய்த்து மகிழ்ந்தாள். தருமபுத்திரனைக் குந்திதேவி ஈன்றெடுத்தாள்.

குந்தி மீண்டும் தன் கணவன் விருப்பப்படி மந்திரத்தால் வாயுதேவனை வரவழைத்து நல்வேளையில் அவனோடு கூடி வீமனைப் பெற்றெடுத்தாள். மீண்டும் பாண்டுவின் ஏவல்படி மந்திரத்தால், குந்தி இந்திரனை எண்ண, இந்திரன் வர, அவனைக்கூடி அருச்சுனனைப் பெற்றாள். அர்ச்சுனன் பங்குனி யுத்திரத்தில் பிறந்தான் எனக் கூறுவர்.

பாண்டு மாத்திரிக்கும் அம்மந்திரத்தை உபதேசிக்கும்படி குந்திக்குக்கூற, அவளும் அவ்வாறே மாத்திரிக்கும் மந்திரத்தை உபதேசித்தாள். மாத்திரி அம்மந்திரத்தை உபதே

சித்து அசுவினீ தேவர்களை நினைத்தாள். உடன் சூரிய குமாரரரான அசுவினீ தேவர்கள் இருவரும் வந்தனர். அவர் கள் இரட்டையரானவர். ஒருவர் போலவே இருந்த இருவ ரையும் கூடி இன்பம் அனுபவித்த மாத்திரி, 'ஒரே சமயத்தில் இரு புத்திரர்களை யீன்றெடுத்தாள். அவ்விரு புத்திரர்களே நகுலனும், சகாதேவனுமாவார்கள்.

ஒரு வசந்த காலத்தில் சோலையழகைக்காண பாண்டு வும், மாத்திரியும் சென்றார்கள். அச்சோலையில் மாதவிப் பந்தரை யடைந்தனர். பாண்டுவும் மாத்திரியும் ஒருவரை யொருவர் கூடி இன்பந் துய்த்திட மனதிலே நினைத்தனர். இருவர் எண்ணமும் ஒன்றாயிருந்த படியால் இருவரும் கூடின் என்னவாகும் என்ற முனிவர் சாபத்தை மறந்திருந் தனர். இன்பமனுபவிக்கும் பல நாள்களை வீணே கழித்து விட்டோமே என்று வருந்திய அவர்களை மன்மத பாணம் மிக்க துளைத்தது. மாத்திரி அவசையாகிப் பாண்டுவின் மார்பிலே வீழ்ந்தாள்.

பூவிய லமளி பொங்கப் புணர்முலை புளக மேற
மேவிய கலவி யின்ப மெய்யுறு மகிழ்ச்சி முற்றிக்
காவியங் கண்ணி கேள்வன் கமழ்வரை மார்பினன் போடு
ஒவிய மென்ன வுள்ள முருகின ளயர்ந்து வீழ்ந்தாள்.

சம்பவச் சருக்கம் - 98

சிறிது மலர்ந்த கண்ணும், தொண்டையிலுள்ள நீர் வெளியே யூறுகின்ற பவழம் போன்ற வாயும், நான் விரும் பின புணர்ச்சி பற்றிச் சொல்லுகின்ற எண்ணம் புலப்படு கின்ற முகக் குறிப்பும், போர் செய்கின்ற மன்மதனுடைய அம்பினால் உயிர் நீங்கினவன் போல, மணத்திற் செல்லும் வண்டுகளின் கூட்டம் இரக்கங்கொண்டு ஒலிப்பது போல் ஒலிக்க, பாண்டுராசனும் உயிரொடுங்கி வீழ்ந்தனன், போகந் துய்த்து மயக்கந் தெளிந்த மாத்திரி, பாண்டு நித்திரையிலி ருப்பதாகவே நினைத்தாள்.

நீண்ட நேரம் உறக்கத்திலிருந்து எழவில்லை; கண் களைத் திறக்கவில்லை; மூச்சு விடவில்லை; உணர்ச்சியு மில்லை என்பதை மாத்திரி உணர்ந்தாள். இறந்து பட்டனன் என்பதையும் அறிந்தாள். கணவனுடைய இறப்புக்குத்தானே காரணம் என்பதையும் உணர்ந்தாள். ஓ, வென்றழுதாள். அரற்றொலி கேட்டு, குந்தி தன் புத்திரர்களுடன் கணவன் இறந்து கிடக்குமிடத்தை யடைந்தாள்.

குந்தியைக் கண்டதும் தன் புத்திரர்களை அவள்பால் ஒப்படைத்து விட்டு மாத்திரி கணவனுடன் உடன்கட்டை யேறினாள். கணவனிறப்பதற்குக் காரணம் தானே என்பதை அறிந்து கொண்ட மாத்திரி குந்திக்கு ஏதும் கூற இயலாத வளாய்த் திகைத்தாள், குந்திக்கும், முனிவர் சாபத்தைக் கூறி மாத்திரிக்கு கலவியின்பத்தை யனுபவிக்க வாய்ப்பளித் தும், 'நான் மங்கல நாணை இழக்கக் காரணமானாளே' என்ற வேதனை.

அவ்வனத்திலேயே குந்தி தன் தங்கை வானுலகு சென்று, கங்கையில் மூழ்கிக் கற்பகக் காவில் வாழலானாள். குந்தியும் இவ்வுலகில் கணவனுக்கு ஈமக்கடன்களைச் செய்து முடித்து கங்கையில் மூழ்கி, அவ்வனத்திலே தங்கி யிருந்தாள். சதசிருங்க முனிவர்கள் குந்தியை மக்களோடு அஸ்தினாபுரிக்கு அழைத்துச் சென்றார்கள்.

தங்கையவள் வானுலகு தலைவனுட னெய்திக்
கங்கைவள மூழ்கியுயர் கற்பவனம் வைகப்
பங்கய நெடுந்துறை படிந்து தன் மகாரான்
மங்கையிவ ளுங்கடன் முடித்தனள் வனத்தே

சம்பவச்சருக்கம் - 106

கணவனை இழந்து, மக்களோடு அஸ்தினாபுரி வந்தி ருக்கும் குந்தியைக் காண அவளது உறவினர்கள் வந்தனர். அவர்களுள் வசுதேவனும், கிருஷ்ண பகவானும் குறிப்பிடத்

தக்கவர்கள். கிருஷ்ணனும், மற்றையோரும் குந்தியைக் கண்டு, 'கணவன் சாபவசத்தால் இறந்து பட்டானாயினும் உனது புண்ணிய வசத்தால் புத்திரர்களைப் பெற்றுள்ளாய். இவர்களைக் கொண்டு நாடாளும் முறையினை மேற்கொள்வாய்' என்று கூறினர், உறவினர்கள் அனைவரும் அது கேட்டு மகிழ்ந்தனர். வந்தவர்கள் அனைவரையும் வீடுமன் விருந்து பசரித்து விடை கொடுத்தனுப்பினான்.

அத்தினாபுரியில் துரியோதினாதியரும், பாண்டவர்களும் சிறுபிராயத்தில் விளையாடிக் களித்தனர். பாண்டவர்களுள், வீமசேனன் துரியோதனாதியர்களுடன் மனவொற்றுமையின்றி இருந்தான். துரியோதனனும் வீமனிடத்தில் உட்பகை கொண்டே பழகி வந்தான். ஒருசமயம், துரியோதனாதியர் வீமனை வலிய கொடிகளைக் கொண்டு கைகால்களைக் கட்டி கங்கையில் எறிந்தனர். வீமன் அக்கட்டுக்களை விடுவித்துக் கொண்டு கரையேறினான். துரியோதனன் ஒருமுறை பாம்புகளை வீமன் மேல் ஏவிக் கடிக்க வைத்தான். பாம்புகளை அழித்து, வீமன் உயிர் தப்பினான். மீண்டுமொருமுறை கழுவில் வீழ்த்த கங்கையில் ஏற்பாடு செய்தான். வீமன் குறிப்பால் உணர்ந்து அதிலிருந்தும் தன்னை காப்பாற்றிக் கொண்டான். கடைசியாக, துரியோதனன் வீமன் உண்ணும் பல்வேறு விதமான உணவுப் பொருள்களிலும் விஷத்தைக் கலந்து அவற்றை உண்ணச் செய்தான். வீமன் உண்டதும் அவனை முன்போல் கைகால்களைக் கட்டி கங்கையாற்றில் எறிந்தான்.

பாதலஞ் சென்ற வீமன் கங்கா நதியிலுள்ள பிலத்துவாரத்தின் வழியாகப் பாதாள லோகத்திற்குச் சென்றான். அங்குள்ள பாம்புகள் வீமனைக் கடிக்க அவனுடலிலுள்ள முந்தின (துரியோதனனால் ஊட்டப்பட்ட) விஷம் நீங்கியது. பாம்புகளுக்கு உணவாக உலகெங்கும் பரந்துலாவும் காற்றின் மைந்தன் வீமனானதால் அவனை விஷம் ஒன்றுஞ் செய்யவில்லை. குந்தியின் - தாய் மரபினரோடு வாசுகிக்கு உற

வுறையும் உள்ளதனால், வாசுகி வீமனிம் அனுதாபமுடைய வளானாள். ஆர்யகன் (நாகமாதாவின் மகன்) என்ற அரசன் மொழிப்படி, வாசுகி வீமனுக்கு ஆயிரம் யானை வலிமை தர வல்ல திவ்ய ரசத்தை (அமுதினை)ப் பருகக் கொடுத்தாள். அதோடு வீமனைத் தன் மாளிகையில் எட்டு நாள் தங்கியிருக்கச் செய்தாள்,

ஆற்றிற்குச் சென்ற வீமனை விட்டு விட்டு, துரியோதனன் மட்டும் நகர் வந்து சேர்ந்ததையறிந்த குந்தி மிக்க வருந்தினாள். தருமன் முதலிய நால்வரும் வீமனைத் தேடிக் காணாது வருந்தினார்கள். துரியோதனன் வீமனிடம் பொறாமை கொண்டவன். கள்ளங்கபடமற்ற வீமனை ஆற்றுக்கழைத்துச் சென்றான். சென்றவன் வீமனை விட்டுத் தனியே வந்தான். வீமனுக்கு நேர்ந்த ஆபத்து யாதோ? யாதேயாயினும், அது துரியோதனனால்தான் ஏற்பட்டிருக்குமோ என பலவாறாகக் கருதி வருந்தினர்.

கூற்றன் சுயோதன குமர னேயிவன்
ஆற்றலின் வெரீஇயழுக் கற்றசிந்தையான்
ஏற்றதை யுணர்கில மென்று தந்தையாம்
காற்றினு மலமருங் கருத்த ராயினார்.

வாரணாவதச் சருக்கம் - **21**

குந்தி தம் மைந்தர்களை யழைத்துக் கொண்டு வீடுமன்பால் சென்றனள். தங்களுக் கேற்பட்டுள்ள வேதனைளைக் கூறி வருந்தினாள். வீடுமன் தன் ஞானக் கண்ணால் உணர்ந்து "வீமனுக்கு எவ்வித ஆபத்தும் நேரவில்லை. சுகமே வருவான்" எனக் கூறி அவர்களது துன்பத்தை நீக்கினான்.

குந்திதேவி வீமனது பிரிவால் வருந்தும் வருத்தத்தை நீக்கிக் கொள்ள முடியவில்லை. வீமன் விரைவில் வருவான் வருவான் என வீடுமனும் கூறினான். நகரத்து மக்களும்

குந்தியின் மனக்கலக்கத்தைப் போக்க எவ்வளவோ நம்பக மான நற்சொற்களைக் கூறினர். தெய்வ ஆவேசங் கொண்டு பலர் கூறினர். நல்ல சகுனங்களும், அசரீரும் கண்டவர்க ளும், கேட்டவர்களும் கூறினர். அப்போதும் குந்தி மனம் வருந்தியே யிருந்தாள்.

நாகங்கள் வீமனைச் சுமந்து கொண்டு வந்து கங்கைக் கரையில் விட்டன. வீமன் முன்னிலும் நலமுடையவனாக வும், பலமுடையவனாகவும், ஒலி பொருந்திய உடலையுடை யவனாகவும் விளங்கினான். நேரே அந்தினாபுரி நகருக்குள் நுழைந்தான். வீமனை வேண்டியவர் மகிழவும், வேண்டா தவர் அஞ்சவும் காட்சி தந்தான்.

வேதியர் குரவர் வில்விதுரன் வீடுமன்
ஆதியர் துணைவரந் நகருளார்க ளென்று
ஓதிய சனங்களுக் குவகை நல்கினான்
ஞாதியர் கிளைக்கெலா நடுக்க நல்கியே

வாரணாவதச் சருக்கம் - 27

தாயைக் கண்டான். அவளைத் தேற்றி, அவள் வருத்தத்தினைப் போக்கினான்.

திருதராட்டிரனும், விதுரனும் தருமனை இளவரசுக்கு உரியவனென மதித்தனர். தரும புத்திரனுக்கு வீடுமன் இளவரசுப் பட்டம் சூட்டி, முடி சூட்டினான். இதைக்கண்டு துரியோதனன் மிக்கப் பொறாமை கொண்டான். திருதராட் டின்ன் புரோசனன் என்பவனை தருமனுக்கு மந்திரியாக்கி, வாரணா வதத்திற்குப் பாண்டவர்களை அனுப்பி வைத் தான். குந்தியும் அவர்களோடு வாரணாவதம் சென்றாள்.

தனியரசு நடத்தி வந்த பாண்டவர்களைக் கொல்ல முன் ஏற்பாட்டுடன் அனுப்பி வைத்த அமைச்சன் புரோ சனனைப் பாண்டவர்கள் ஐயுற்றனர். முன்பே, அங்கு கட்டி வைத்திருந்த அரக்கு மாளிகையை வீமன் நுட்பமாக

ஆய்ந்து வைத்திருந்தான். அதோடு சிற்பியொருவன், 'உங்கள் பெரியப்பாவின் ஏவலினால் புரோசனன் இவ்வரக்கு மாளிகையை இங்குக் கட்டினான். அவன் இம்மாளிகையில் ஏற்பாடு செய்திருக்கும் வஞ்சனைகளை உங்கள் சிறிய தந்தையாராகிய விதுரன் அறிந்து, அவற்றை உங்களுக்குச் சொல்லி வர என்னை அனுப்பினான்'' என்று வீமனிடம் கூறினான். அச்சிற்பிக்குப் பரிசளித்த வீமன், அன்று முதல் மிக விழிப்பாக இருந்தான்.

பாண்டவர்கள், புரோசனனுடன் மிக நெருங்கிப் பழகினர். அவன்பால் ஐயங்கொண்டிருத்தலை வெளிக் காட்டிக் கொள்ளாமல், அவனைத் தங்களுடன் நெருங்கிப் பழகவும் அனுமதித்தனர். புரோசனனை ஒருநாள் தங்களருகிற் படுக்க வைத்தனர். நெடு நேரம் அரசியற் செய்திகளை ஆலோசிப்பார் போல அவனிடம் பாண்டவர்கள் பேச்சுக் கொடுத்து அவனை அயரச் செய்தனர். புரோசனன் நன்கு உறங்கும் போது வீமன் அரக்கு மாளிகைக்குத் தீ வைத்தான். அரக்கு மாளிகை தீப்பற்றி எரிந்தது. வீமன் துணைவரையும், தாயையும் அம்மாளிகையின் கண்ணுள்ள ஓர் அழகிய சித்ர வேலைப்பாடமைந்த ஒரு தூணின் கீழுள்ள சுரங்கம் வழியாக அழைத்துச் சென்றான். அவ்வழி அவர்களை ஓர் அகன்ற வனத்திற்சேர்த்தது. அவ்வனம் இடிம்ப வனம் என்பதாம்.

## இடிம்பி

இடிம்ப வனத்தில் பாண்டவர்கள் ஒரு மலைச்சாரலில் தங்கி வாழ்ந்தனர். ஒருநாளிரவு இடிம்பி என்ற ஓர் அரக்கி வீமனைச் சந்தித்தாள். அவள் அக்கினியின் சுவாலை போன்ற சிவந்த தலைமுடியை யுடையவளாகவும், அவ்வனத்தில் வாழும் ஓர் அணங்கோ எனை ஐயுறும்படி சிவந்த இதழை யுடையவளாகவும் தோன்றினாள். அவளது கூரிய பற்கள் வாயினின்றும் வெளியே தோன்றி, இருளையோட்

டும் சந்திரகாந்திபோல் ஒளி விட்டன. அவளைக் கண்ட வீமன், 'இந்நடுஇராத்திரியில் நீ இங்கு வந்த விதம் என்ன? வென்று வினாவினான்.

ஏதற்கு இடிம்பி, ''இவ்வனத்தில் இந்திரசித்தை யொத்த அரக்கன் ஒருவன் உளன். அவன் பெயர் இடிம்பன். இவ்வனத்தில் அவன் மிக்க பிரசித்தி பெற்றவன். அவனுடைய தங்கை நான். மானுடர் மணம் வீசியதையுணர்ந்து, நீங்கள் வந்திருப்பதை யறிந்தோம். என் தமயனுடைய் கட்டளைப்படி உம்மைக் கொன்று தின்பதற்காகவே நான் இங்கு வந்தேன். ஆனால் உம்மைக் கொல்லுவதால் எனக்கு என்ன பயன் விளையப் போகிறது? மலை போன்ற தோள்களையும், அகனற மார்பினையும் உடையவனே! நான் சொல்லுவதைக் கேள்! திரட்சியுள்ள விரும்பப்படும் முலைகளையுடைய பெண்களுக்கு, தங்களுக்கேற்படும் காமநோயைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதற்கு மனம கூசும் எம்மைப் போன்ற அரக்கியர்கள் வெட்கமின்றி தம காமநோயினைக் கூறுவார்கள். நான் எப்படிச் சொல்வேன்? என்றாள்.

மீண்டும் பேசினாள் 'வண்டுகள் கீதம் பாடப் பெற்ற மாலையை மார்பில் அணிந்தவனே! பெருஞ் சுழிகளுடன் கரை புரண்டோடும் ஆற்றுவெள்ளமானது கலக்கம் நீங்கி, தெளிவடைந்து, சுவை நீராகக் கடலில் கலப்பது போல நான் உன்னைக் கொல்லத்தான் வந்தேன். உன்னைக் கண்டதும் கோபந்தணிந்து உன்னை மணக்க விரும்பினேன்''

''உனது பதிலை எதிர்நோக்கி நிற்கிறேன். காலதாமதமாயின், ம்ன்மதனாகிய இராக்கதன் என்னைக் கொல்லுவான். அதற்கு முன்பாக எனது அண்ணன் இடிம்பன் இங்குவரின், என்னையும், உன்னையும் கொல்லுவான். இவற்றையெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்து பயனில்லை. நாம் உயிர் பிழைத்திட வேண்டுமெனில் நான் ஓர் உபாயம் கூறு

கின்றேன் கேள். என்னை நம்பி இன்பம் மிகத் தழுவிக் கொள்வாய். வான் வழியாக உன்னை ஒரு மலையிடத்தே சேர்ப்பிக்கின்றேன்,'' என்றாள் இடிம்பி.

இடிம்பியின் சொற்களைக் கேட்ட வீமன், ''இரக்கமில்லாமல் இவ்வனத்திலே எனது தமயன், தம்பியர், தாய் இவர்களைத் தனியே விட்டுவிட்டு நான் மட்டும் என்னைப் பாதுகாக்க ஒருத்தி வந்துள்ளாளென, ஒரு பெண்ணின் பின்னே செல்வது ஆடவருக்கு அழகா? இப்பகுதி மலையிடத்தே வாழுகின்ற உன் அண்ணன் என்முன் போர் செய்திடக் கருதி வரட்டும். அவன் இராக்கதனானாலும், அசுரனானாலும் ஒரு கணத்துள் கொன்று விடுவேன்'' என்று கூறினான்.

அதே சமயத்தில் இடிம்பனும் அங்கு வந்தான். வீமனுக்கும், இடிம்பனுக்கும் வீரப் போர் நடந்தது. வீமன் இடிம்பனைக் கொன்று குவித்தான். வீமனது ஆற்றலைக் கண்டு குந்தி மகிழ்ந்தாள். சகோதர்களும், வீமனது ஆற்றலைக் கண்டு 'இனி அரிய பெரிய பகைவரையும் தவறாது கொல்வான்'' என்று நிச்சயித்தனர். தன் முன்னவன் இறந்தால் வருத்தமும், தன்னால் கணவனாக வரிக்கப்பட்ட வீமனை இனி இடையூறின்றிச் சேரலாமெனும் ஒரு கருத்தினால் மகிழ்ச்சியும் இடிம்பிக்கு ஒருங்கே தோன்றின.

இரவு கழிந்தது. காமனாகிய தீ சுடுவதினாலே வாடிய மேனியுடைய இடிம்பியை வீமன் நோக்கினான். ஆலோசனையும், சஞ்சலமும் கொண்ட மனத்தாளாகிய இடிம்பி தன் மீது கொண்ட காதலைக் குறிப்பால் உணர்ந்தான் வீமன். ஆகவே இடிம்பியை நோக்கி, ''உனது அண்ணனைக் கொன்ற பகைவன் நான். எனது சகோதரர்களுக்கு இன்னும் மணமாகவில்லை. நாங்களோ மனிதர்கள் நீ அரக்கர் குலத்தைச் சேர்ந்தவள். நீ நினைப்பது நடக்காது. முற்காலத்தில் க்ஷத்திரிய வீரனாகிய இராமன், சூர்ப்பநகை

என்னும் இராக்கதப் பெண்ணை மணக்க மறுத்ததனை அறியாயோ'' என்றான்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த குந்தி, தனது மற்றைய புதல்வர்களிடம் தன் கருத்தைக் கூறி, அவர்களது ஒப்புதலைப் பெற்று வீமனிடம் சொன்னாள். பகைவர்களது உயிரை வாங்கும் திறம் பெற்றவனே! நம்மிடத்தில் குறை வேண்டி நிற்பவரிடத்தில் மறுத்துப் பேசுவது அழகல்ல, மனிதர்களுக்கு. எவரிடத்தும் தருமத்தின் இயல்பு பொருந்த வேண்டும். உனது தமயன் சொற்படி, இவளை நீ மணந்து கொள்வது தகுதியுடையதாகும்'' என்று குந்தி வீமனுக்குக் கூறினாள்.

தாயும், தன் முன்னவனும் சொல்லிவிட்டார்களென்றால் அதற்குத் தடை சொல்லுதல் முறையோ? அவர்கள் வாக்கு மறையன்றோ! எனத் தலை மேற் கொண்டான் வீமன். இடிம்பியை அழைத்துக் கொண்டு ஒரு நீர் நிலையை அடைந்தான் வீமன் இடிம்பியுடன் அந்நீர் நிலையில் மூழ்கி அதன் கரையில் தங்கினான்.

அன்னையுந் தம்முனு மறைந்த வாசகம்
முன்னையின் மறையென முடியிற் சூடினான்
மின்னையு முடன்கொடு போந்து மேவுநீர்
தன்னையுங் கண்டதற் றுளைந்து தங்கினார்

வேத்திரகீயச் சருக்கம் - 24

தனது மாமி, குந்தியின் சொற்கேட்டு, அவளுக்கு இரவு பகல் எப்பொழுதும் குற்றமில்லா வந்தனை வழிபாடுகளைச் செய்து இடிம்பி மகிழ்ந்தாள். வீமனும் இடிம்பியும், முருகனும் வள்ளியுமாய் இன்பந்துய்த்து மகிழ்ந்தனர். இவர்களுக்கு ஓர் ஆண் மகவு தோன்றியது அம்மகவினைக் கடோற்கசன் எனப் பெயரிட்டு அழைத்து மகிழ்ந்தனர்.

கடோற்கசன் முதுகிலே நிறைந்த ரோமம் பெற்றவனாக விளங்கினான். மலைகள் போன்ற தோள்களையும், பெருவலிமையைக் காட்டுகின்ற கர்ச்சிக்கும் ஒலியையுடைய வாயினையும் உடையவனாக வளர்ந்தான். கரிய நிறமும், பெரிய உருவமும் கொண்டவனாகத் திகழ்ந்தான்.

ஒருநாள், கடோற்கசன் பாண்டவர்களைத் தொழுது 'நல்ல அறிவும், என்பால் அன்பும் கொண்ட தலைவர்களே! நானும், என் தாய் இடிம்பியும் உங்களை விட்டுச் செல்லுகின்றோம். நீங்கள் நினைத்த போது உங்களிடம் வந்து நீங்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றிச் செல்வேன். எங்களுக்கு விடைதாருங்கள் என வேண்டினான். விடை பெற்றுக் கொண்டு கடோற்கசனும் இடிம்பியும் இடிம்ப வனத்திற்குச் சென்றனர்.

பாண்டவர்களும் பிராமண வேடங் கொண்டு இடிம்ப வனத்தைச் சார்ந்த மலைச்சாரலை விட்டு வேத்திர கீயம் என்ற ஊருக்குச் சென்றனர். அவ்வூர் அந்தணர்கள் அவர்களை வரவேற்று உபசரித்தனர். ஓரந்தணன் அவர்களைத் தம் மனையில் தங்கச் செய்தான். பாண்டவர்கள் அவ்வூரில் உள்ள அந்தணர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒவ்வொரு நாள் விருந்துண்டு நாள்களைக் கழித்து வந்தார்கள்.

ஒருதினத் தமிழ்தென வுள்ளநா ளெல்லாம்
வருமுறைப் படிவிருந் தாகி வைகினார்
அருநெறிக் கடவுளர்க் கமுத மூட்டுதல்
இருபிறப் பாளருக் கென்றுந் தன்மையே

வேத்திரகீயச் சருக்கம் - 35

ஒருநாள், பாண்டவர்கள் குடியிருந்துவந்த வீட்டுக்குரிய பார்ப்பனி அந்தணி என்பவள் துயருறுங் கணவனுடைய மடியிலிருக்கும் தம் மக்களைத் தழுவிக் கொண்டு அழுதாள். அவ்வொலிகேட்ட குந்தி தன்னுயிர் போன்ற அவ்வந்தணியை நோக்கி புலம்புதற்கான காரணத்தைக் கேட்டாள்,

அந்தணி அவ்வூரின் மலைப் பக்கத்தே வாழும் பகசூர னின் வரலாற்றைக் கூறி, அவனுக்கு உணவும், ஆளும் அனுப்பும் முறை நாள் இன்று எங்களுடையதெனக் கூறி வருந்தினாள். அதைக் கேட்ட குந்தி, 'நீ வருந்த வேண்டாம் எனக்கு ஐந்து குமாரர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவரை நான் உங்கள் முறைக்காக அனுப்பி வைக்கிறேன்'. என்றாள். பார்ப்பணி வருத்தம் நீங்கி, பகசூரனுக்கு வேண் டிய உணவு வகைகளைச் சமைத்து வைத்தாள். குந்தி வீமனைப் பகசூரனிடம் அனுப்பி வைத்தாள். வீமன் அவ்வு ணவுடன் பகசூரனைச் சந்தித்தான். அவனைக் கொன்று, அவ்வூருக்கிருந்த அச்சத்தை நீக்கினான்.

பாண்டவர்கள் பன்னிரண்டாண்டுகள் காட்டில் வாழ்ந்து, பின் ஓராண்டு அஞ்ஞாத வாசத்தை மேற்கொண் டனர். அப்போது குந்திதேவியை அத்தினாபுரத்தில் அவ ளது மாளிகையில் விட்டுச் சென்றனர் பாண்டவர்களு டைய வனவாசமும், அஞ்ஞாத வாசமும் முடிவுற்றன. தங் களுக்குச் சேரவேண்டிய இராஜ்ஜியத்தை துரியோதனன் தர மறுத்தான். போர் தொடுப்பதா? என்றறிந்துவர கண ணனைப் பாண்டவர்கள் துரியோதனன்பால் தூதனுப்பினர் கண்ணன் தூதுவனாக அத்தினாபுரி வந்தான். பாண்டவர் களுக்கு நாடு கொடாமல் துரியோதனன் போரையே விரும் பினான். கண்ணன் துரியோதனனுடைய முடிவினைத் தெரிந்து கொண்டான். பிறகு கண்ணன் குந்திதேவியின் அரண்மனைக்குச் சென்றான். தன் மாளிகையை நோக்கி வந்த கண்ணனைக் குந்திதேவி வரவேற்றாள்.

மண்டல மதிய மன்ன மாசறு முகத்தினாளுந்
திண்டிறல் மருகன் றன்னைச் சென்றெதிர் கண்டுகொண்டு
வெண்டிரை மகரவேலை விரிபுனல் முகந்து தோன்றுங்
கொண்டலை மகிழ்ந்துகாணுங் குளிர்பசுந் தோகை
போன்றாள்

கிருட்டிணன் தூதுச்சருக்கம் - 148

குந்தி கண்ணனை வந்த காரியம் யாதெனக் கேட்டாள் கண்ணன் குந்திக்கு வந்த காரியத்தையும், நடந்த வரலாற்றையும் கூறினான் அவற்றைக் கேட்டு வருந்திய குந்திக்கு கண்ணன் கர்ணனது வரலாற்றைக் கூறினான்.

குந்தி துர்வாச முனிவருக்கு ஓராண்டுகாலம் பணிவிடை செய்ததும், அம்முனிவர் குந்திக்குச் சில மந்திரங்களை உபதேசித்ததையும், குந்தி தன் அறியாமையால் சூரியனை நினைந்து மந்திரத்தைச் சொல்ல அவன் வந்து குந்தியோடு சல்லாபித்திருந்ததும் குந்தியின் நினைவுக்கு வந்தன உலகசியலுக்கு அஞ்சி அக்குழந்தையை ஆற்றில் விட்டதையும் நினைவு கூர்ந்தாள். அக் குழந்தை தான் துரியோதனன் பக்கமிருக்கும் கர்ணன் என்பதைக் கண்ணன் கூற, குந்தி அது கேட்டுத் திகைத்தாள். அப்போது கண்ணன், 'அந்த மைந்தனே அருச்சுனனோடு நடக்கப் போகும் யுத்தத்தில் போர் செய்யப் போகிறான். அவனுக்கு அர்ச்சுனன் என்ன உறவு முறை என்பது கூடத் தெரியாது. ஆகவே, அவனுக்கு நிலைமைகளை விளக்கிக் கூறி பாண்டவர் பக்கம் அழைத்து வா' என்றான்.

'தம்பியரைந்து பேரும் உனக்கு ஏவல் செய்ய, மணி மகுடம் சூட்டி, இவ்விராஜ்ஜியத்தை முழுதும் நீயே யாளலாம்வா! என அழைப்பாயாக' என்று குந்திதேவிக்குக் கண்ணன் சொல்லிக் கொடுத்தான்.

'நீ அழைக்க அவன் வர மறுத்தால், காண்டவ வனத்தை விட்டுச் சென்ற அசுவசேனன் என்னும் பாம்பை கர்ணன் அஸ்திரமாகக் கொண்டுள்ளான். அதுவே நாகாஸ்திரம். அவ்வஸ்திரத்தை இரண்டாவது முறை தொடுக்காவண்ணம் ஒரு வரத்தைக் கேட்டுப் பெற்று வருக' என்றான்.

கண்ணன் கூறியதைக் கேட்டு குந்தி வருந்தினாள், ''கண்ணபிரானே! இக்கர்ணன்தான் நான் கன்னியாக இருந்தபோது பெற்ற பிள்ளை என்பதை அறிந்த நீ அன்

றைக்கே சொல்லியிருந்தால் துரியோதனாதியர் பக்கம் அவனைச் சேர விடுவேனா? இன்று பாண்டவர்களுக்கும், துரியோதனாதியர்களுக்கும் கடும் போரை ஏற்படுத்தி விட்டு, கர்ணன் நீ பெற்ற பிள்ளை என்கிறாயே! இது நியாயமா? உன் நினைவு தான் யாதோ?'' என்று கண்ணனிடம் கூறி வேதனை பட்டாள்.

மன்றலந் தெரியல் வெய்யோன்
மதலையென் மைந்த னென்ப
தன்றெனக் குரைத்தா யாயி
னவனுட னணுக வொட்டேன்
சென்றுயி ரொழிக்கு மாறு
செருவினை விளைத்துப் பின்னை
யின்றெனக் குரைத்தா யையா
வென்னினைந் தென்செய் தாயோ

கிருட்டிணன் தூதுச்சருக்கம் - 159

''காண்டவ வனத்திலே பற்றிய அக்கினியினின்றும் பாயும் கொடிய நாகாஸ்த்திரத்தை மறுமுறை அருச்சுனன் மீது பிரயோகிக்காதே என்று கர்ணனிடத்தில் ஒரு வரத்தைப் பெற்றால் அருச்சுனன் கர்ணனைக் கொன்று விடுவான். கர்ணனிடத்தில் கண்ணன் கூறியபடி வரத்தை வாங்கவில்லை யென்றால் கர்ணன் அருச்சுனனைக் கொன்று விடுவான்.

எந்த வகையில் பார்க்கினும் நான் என் புதல்வர்களில் ஒருவரை இழக்க வேண்டியவளாக உள்ளேனே! என மனமிரங்கி புலம்பிக் கொண்டு குந்திதேவி கீழே வீழ்ந்தாள்.

கான்பட்ட கனலிற் பாயும்
கடுங்கணை விலக்கி னேனேல்
வான்பட்ட புரவித் தேரோன்
மகன்படு மகவான் மைந்தன்

நான்பட்ட மடியுஞ் சென்று
தடாதினி யிருந்தே னாகில்
யான்பட்ட கொடுமை நன்றென்
றென்பட்டா ளிரங்கி வீழ்ந்தாள்

கிருட்டிணன் தூதுச்சருக்கம் - 160

கீழே விழுந்த குந்திதேவியை நோக்கிக் கண்ணன், ''ஐந்து தலைகளையும் ஒரு சேரப் பெற்ற பாம்பை யொத்த பாண்டவர்கள் இறத்தல் நன்றோ? அல்லது போர்க்களத்திலே ஒருவன் மட்டும், கர்ணன் மட்டும் இறத்தல் நன்றோ? போரிலே இரு திறத்தினரும் வெல்லுவதென்பது இயலுவதொன்றோ? ஒருவர் போய் ஒருவர் உய்யார். ஆகையினாலே மனதைத் தேற்றிக் கொள். துயரத்தை நீக்கி இனி நடப்பதைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டும்'' என்று கூறினான்.

குந்திதேவி துயரொழிந்து மனந்தெளிந்தாள். கண்ணனது விருப்பத்தை நிறைவேற்றவே விழைந்தாள். கர்ணனுடைய மாளிகைக்குச் சென்றாள். குந்திதேவியைக் கர்ணன் எதிர்கொண்டழைத்தான். 'நான் உனக்குத் தாய்' என்று குந்திதேவி கர்ணனிடம் கூறினாள். முனிவருடைய மந்திர சக்தியாலும், சூரியனுடைய அருளாலும் கர்ணன் பிறந்ததையும் பிறந்த பின் பேழையுள் வைத்து ஆற்றிலே விட்டுவிட்டதாயும் குந்தி கர்ணனிடத்தில் கூறினாள்.

அது கேட்ட கர்ணன், ''தாயே! உன்னைப் போல பலர் என்னிடம் வந்து,'நான்தான் உன் தாய்' என்று கூறி என்னை ஏமாற்ற முயன்றனர். நான் கொடையிலும்' செல்வத்திலும் சிறந்திருப்பதால் என்னை மகனெனக் கூறி என் செல்வத்தையடைய முற்பட்டனர். இன்னாள் பெற்ற பிள்ளை நான் என்பது எனக்கும் தெரியாததால், தேவர்களை வேண்டி 'என் தாயை நான் அடையாளங் கண்டு கொள்ள வழியா' தென வேண்டினேன். அவர்கள் எனக்குக்

கொடுத்த தெய்வத் தன்மையுள்ள ஆடையொன்றுள்ளது. அவ்வாடையை உண்மையான தாயன்றி, வேறு யார் உடுத்தினாலும் தீப்பற்றி எரிந்து அழிவர் - அவ்வாடையிதோ'' எனக் கொண்டு வந்து குந்தியிடம் கொடுத்தான். குந்தியும் அதை வாங்கியவுடன் உடுத்தி மகிழ்ந்தாள். இதற்குமுன் இவ்வாடையை யணிந்த பலரும் இறந்து போனதைக் கண்ட கர்ணன், குந்தி மகிழ்ந்திப்பதைக் கண்டு அவளே தன் தாய் எனக் கொண்டான்.

குந்தியும் கர்ணனை ஈன்ற போதிருந்த உணர்வினைப் பெற்றாள்; மகிழ்ந்தாள். தனதிரு கொங்கைகளிலும் பாலைச் சொரிய விட்டாள். கர்ணனும் அப்பாலை விரும்பிப் பருகுவானைப் போல குந்தியினருகில் வந்தான். அவளிடம் ஆசை கொண்டான். உடல் புளகாங்கித மடைந்து. குந்தி அவனை இறுகத் தழுவி அவனது உச்சியை மோந்து, பெருமூச்சு விட்டாள். 'உன்னைப் பெற்ற அக்காலத்திலேயே உன்னை வளர்க்கும் நல்வினைப் பயனைப் பெறவில்லையே' என்று கூறினாள்.

இருந்ததா யீன்ற அன்றுபோ லுருகி
    யிருதடங் கொங்கைபால் சொரிந்தா
ளருந்துவான் போல விரவிசேய் விரும்பி
    யாதரத் துடன்புள கானான்
புரிந்ததா யன்போ டிறுகுறத் தழுவிப்
    பொன்முடி மோயின ளுயிராப்
பரிந்துநா னன்றே யுனைவளர்த் தெடுக்கப்
    பாக்கியஞ் செய்திலே னென்றாள்.

கிருட்டிணன் தூதுச்சருக்கம் - 252

கர்ணன், ''தாயே! என்னைப் பெற்ற அன்று, என்னைப் பெறாதவளாக உலகம் கருத வேண்டுமென நினைத்தாய். என்னை ஆற்றிலே விட்டாய். அன்று முதல் இன்று வரை என்னைப் பாதுகாத்தவன் துரியோதனன், என்னை

அங்கத நாட்டுக்கு அரசனாக்கினான். அவனது தம்பியர் என்னை வணங்க, எனக்குச் சுற்றமாயிருந்து செல்வத்தையும் புகழையும் தந்தான். அவனுடைய மனைவி, பானுமதியோடு ஏகாந்த விடத்தில் நானிருந்த போது அவளது மேகலைமணி சிந்த, அவற்றை எடுக்க அவள் திகைத்திருந்த போது கூட 'எடுக்கவோ கோக்கவோ' என்றான். அவனுக்காகப் போர்க்களத்திலே செஞ்சோற்றுக் கடன் கழிப்பேன்'' என்றான்.

அவற்றைக் கேட்ட குந்தி வருந்தினாள். ''அம்மா! யுத்தம் நடக்கத்தான் போகிறது. நான் துரியோதனனுக்குத் தான் துணையாக நிற்பேன். இனியேதும் பேசிப் பயனில்லை. நீ இங்கு வந்ததன் நோக்கம் யாது'' எனக் கேட்டான்.

கர்ணனைப் பெற்று ஆற்றிலே விட்ட நாளினும் மிக்க வருந்துபவளாய்' நாகுழறி புலம்பினாள். கர்ணன் தாயைச் சமாதானப்படுத்தினான். கண்ணீரைத் துடைத்தான். 'மூண்டவல் வினையின் பயனல்லாது, யார்க்கும் முயற்சியால் வருவது ஒன்றுண்டோ' எனக்கூறித் தேற்றினான்.

குந்தி தேவி துயரம் நீங்கி, மனத்தெளிவு பெற்று கர்ணனிடத்தில் கண்ணன் சொல்லியனுப்பிய வரத்தைக் கேட்டாள்.

பார்த்தன் வெஞ்சமரி னின்னுடன் மலைந்தாற்
    பகைப்பெரும் பாந்தளம் பகழி
கோத்நலும் பிழைத்தான் மறித்து நீ விடுத்துக்
    கோறலென் றொருவரங் குறித்தாள்
வாய்த்த மற்றவர்களிளைஞரென் றவரை
    மலையலென் றொருவரங் குறித்தாள்
மூத்தவன் காதலிளைஞர் தம் பொருட்டான்
    மொழிந்தமை கேட்டிவை மொழிவான்.

கிருஷ்ணன் தூதுச் சருக்கம் - 258

நல்லாண்மகன் ஒருமுறை எய்த அம்பினை மறுமுறை ஏவ மாட்டான். அவ்வாறின்றி மறுமுறை எய்வது அறமன்று அருச்சுனனன்றி மற்றய தம்பிமாருடன் போர் செய்ய மாட்டேன் என்ற இருவரங்களையும் கர்ணன் குந்திக்குக்கொடுத் தருளினான்.

இருவரங்களையும் பெற்ற தன் தாய் குந்திதேவி யிடம் கர்ணன் இருவரங்களைக் கேட்டான். ஒன்று போர்க் களத்திலே பார்த்திபனால் அடியேன் வீழ்ந்தேனாகில், உலகறிய உன் மகன் என்று என்னை உன் மடிமீதிருத்தித் தாய்ப்பாலைச் சொரிய வேண்டும். இரண்டாவது நீ இங்கு வந்ததையும், நான் உன்னைச் சந்தித்தையும் இரகசிய மாகப் பாதுகாத்தல் வேண்டும். பாண்டவர்கள் அறிந்தால் இராஜ்ஜியத்தை எனக்கே நல்குவர். நான் அதனை ஆளாமல் துரியோதனனுக்கே ஈவேன் ஆகவே, இரகசியம் காக்கப்பட வேண்டும் என வற்புறுத்திக் கூறி இரண்டு வரங்களைக் குந்திபால் கர்ணன் பெற்றான்.

பதினேழாம் நாட் போரிலே கிருஷ்ணன் சொறபடி, அருச்சுனன் எய்த அம்பால் கர்ணன் போர்க்களத்தே வீழ்ந் தான். திருமாலுடைய திவ்விய சொரூபம் தன் கண் முன் னிலும், நெஞ்சிலும் நீங்காதிருக்கவும், அக்கடவுளின் திரு நாமம நாவிலிருந்து நீங்காதிருக்கவும் கர்ணன் குற்றுயிரா கத் தேர் மீது கிடந்தான். அம்புகளெல்லாம் அவனுடலைக் குளிர்வித்திருந்தன. அரசர்கள் யாவரும் அவனைச் சூழ்ந் திருந்தனர். திருதராட்டிரன் துன்ப மிகுதியால் கர்ணனைக் கணடவனாகப் பக்கத்திலே யிருந்தான்.

கர்ணன் இவ்வாறு குற்றுயிராகக் கிடக்கின்றான் என அசிரீரி கூறியதைக்கேட்ட குந்தி மாதேவி போர்க்களத்திற்கு ஓடி வந்தாள்.

முந்தியெதிர் பொருவிசயன் றொடுத்த கோவான்
முடிசாய்ந்தின் றைவருக்கு முன்னோன் வீழ்ந்தா

னந்திபடு வதன்முன்னே யாவி போமென்

றசரீரி யெடுத்துரைப்ப வன்னை யான

குந்திதன துளமுருகக் கண்ணீர் சோரக்

குழல்சரியப் போர்க்களத்துக் கோகோ வென்று

வந்திருகை தலைப்புடைத்துக் தலைநா வீன்ற

மகவின்மேல் வீழ்ந்தழுதாள் மன்னோ மன்னோ

பதினேழாம் போர்ச் சருக்கம் - 254

''என் தந்தையின் மனையிலே கன்னிமாடத்திருந்த போது சூரியனுடைய கருணையினாலே உன்னை அருளில்லாமல் பெட்டியுள் வைத்து, அப்பெட்டியை கங்கையாற்றிலே விட்டேன். பின்பு, சூதினால் இராஜ்ஜியத்தைக் கவர்ந்து கொண்ட துரியோதனனுக்கு நெருங்கிய நண்பனானது கேட்டு, உனது வீரம், தானம், இவைகளால் உயர்ந்த உன்னை நான் பெற்றது என் முன்னைய தவப் பயனே என்று எண்ணி மகிழ்ந்தேன். இப்போது இவ் அங்க நாட்டை ஆண்டது போதாதென சுவர்க்கத்தையும் ஆளச் செல்லுகின்றாயோ? கைம்மாறுகருதாமல் மேகத்தைக்காட்டிலும் விரைந்து பயனளிக்கும் கைகளை யுடையவனே! அறந்தவறாது உனது ஐந்து சகோதரர்களும் இருக்கின்றனர். துரியோதனாதிகள் நூறு பேர் உள்ளனர் இவர்களெல்லாம் உன் குறிப்பறிந்து உனக்கு ஏவல் செய்ய, யாவரும் அஞ்சும் படியாக, இவ்வுலகையெல்லாம் ஒருகுடைக்கீழ் ஆளும் நிலைமையைப் பெற்றிருந்தும், நீ ஊழ் வினையின் பயனால் அவ்வாறு வாழாது தேவர்களின் வஞ்சனையால் மரணமடைந்தாய். ஐயோ! ஐயோ!! ''என்று கூறிப் புலம்பினாள்.

களத்தே இருந்தவர்களெல்லாம் புலம்புகின்ற இவள் குந்திதேவி போலும் என்று திகைத்தனர். அவர்கள் கேட்கும் படியாகப் புலம்பிய குந்திதேவி, கர்ணனைத் தன் இருகரங்களினாலும் எடுத்து மடி மீதிருத்தி முலைக் கண் ஊறிய

பாலை அவனுக்கு ஊட்டினாள். பாலைப் பருகியவனாகவே தன்னுயிர் நீத்தான் கர்ணன். கன்றை இழந்த பசுவினைப் போல மிகவும் வருந்தினாள். குந்திதேவி.

என்றென்றே யமர்க்களத்தி னின்ற வேந்தர்
யாவருங்கேட் டதிசயிப்ப வேங்கி யேங்கி
யன்றன்போ டெடுத்தணைத்து முலைக்க ணூற
லமுதூட்டி நேயமுட னணித்தா வீன்ற
கன் றெஞ்ச வினைந்தினைந்து மறுகா நின்ற
கபிலையைப்போ லென்பட்டாள் கபாலம் வீசிக்
குன்றெங்கு மிளஞ்சாயல் மயில்க ளாடுங்
குருநாடன் றிருத்தேவி குந்தி தேவி

பதினேழாம் போர் சருக்கம் -257

குந்தியின் மடியிலும், கைகளிலும் கர்ணனுடைய உடல் பொருந்தியிருக்க, அங்க நாட்டிற்குத் தலைவனான கர்ணனுடைய ஆவி தடுமாறாமல் பொற்றூண் போல் சூரியனிடஞ் சேர்ந்து மேலுலகத்தில் மேல்நிலையை அடையச் சென்றது.

பெருமை பெற்ற தருமபுத்திரன் முதலாக. குந்தி தேவி பெற்ற ஐவரும், தம்மைப் பெற்ற தாய் குந்தி தேவி கண்ணீர் சோர, இப்போர்க்களத்தே வந்து அழுவது போன்ற குரல் கேட்கின்றதே. இதற்குக் காரணம் யாதென கிருஷ்ணனைக் கேட்டார்கள் கிருஷ்ணனும் ஒரு நொடியில் நடந்ததை நடந்தபடி கூற, அதனைக் கேட்ட பாண்டவர்கள், இடியேறுண்ட நாகம் போல நடுநடுங்கி தாமிருந்த இடத்தினின்றும் கர்ணனிடஞ் சென்று புலம்பினார்கள்.

## ஊர்வசியும் இந்திராணியும்

அருச்சுனன் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான் சிவபெருமான் அருச்சுனனுக்கு அவன் வேண்டியபடியே பாசுபதத்தை ஈந்தான். இந்திரன் அருச்சுனனை

அழைத்துக் கொண்டு தேவலோகத்திற்குச் சென்றான். இந்திராணி இருவரையும் எதிர்கொண்டழைத்தாள். அருச்சுனனை வாழ்த்தி விட்டுத் தன்னிருப்பிடஞ் சென்றாள்.

ஊர்வசி நாட்டிய மாட,அருச்சுனன் அதனைக் கண்டு களித்தான். ஊர்வசி அருச்சுனன் தவத்திலிருக்கும் போது, பூலோகம் சென்று தவத்தைக் கெடுக்க முயன்றாள். தவ நிலையிலிருந்து அருச்சுனன் வழுவாதிருப்பதைக் கண்டு வந்து இந்திரனுக்குச் சொன்னாள். பின்பு, இந்திரன் அருச்சுனனது தவவலிமையைக் காண பூலோகம் சென்றான். தவம் முடிந்ததும் இருவருமாக இந்திராபுரிக்கு வந்தார்கள்.

அருச்சுனன் ஊர்வசியின் நாட்டியத்தை நன்கு வியந்து பாராட்டினான்.தேவேந்திரன் அருச்சுனனுக்கு அமுதளித்து இருவரும் இனிதிருந்தனர். அருச்சுனனுக்குத் தனியே தேவலோகத்தில் தங்குவதற்காக ஒரு மாளிகை யமைத்துக் கொடுத்தான் இந்திரன்

உருப்பசி,அருச்சுனன் மீது காதல் வேட்கை கொண்டு அவன் தங்கியுள்ள மாளிகையை யடைந்தாள். அவளை எதிர் கொண்டழைத்து, '' நீ வந்த காரணம் யாதென'க் கேட்டான். ஊர்வசி தான் வந்த காரியத்தைக் குறிப்பால் உணர்த்தினாள். அருச்சுனன் அவளுடைய கால்களில் வீழ்ந்து,அவளைத் தாயாக நினைத்து அவளைத்துதித்தான்.

ஏகாந்த இரவில் அவனது இருதோள்களையும் தழுவ வந்த ஊர்வசியைத் தொழுது தாய் முறையிலே வைத்து அவளை இகழ்ந்தான் என்று அருச்சுனனை ஊர்வசி கோபித்தாள் சிவந்த வாயின் உதட்டை மடித்துக் கொண்டு கண்கள் சிவக்கக் கடுஞ்சொற்களால் அருச்சுனனைச் சபித்தாள்.

'' வீரத்தில் சிறந்த ஆண்மகன்; உன்போல் பேராற்றல் மிக்கவர் பூவுலகில் யாருமில்லை. இவ்வேகாந்த இரவில் உன்னை நாடி வந்துள்ள என்னை நீ தகாத முறையில்

தாயாகக் கருதிப் பேசுகின்றாய். ஆண்மைத் தன்மையுடைய வர்கள் பேசுகின்ற பேச்சல்ல. நீ கருணை மிக்கவனா? வீர முடையவனா? அல்லது புகழ் மிக்கவனா? நீ ஆண்மைத் தன்மையை இழந்து பேடியா வாயாக'' என்றாள்.

சாபத்தை ஏற்ற அருச்சுனன் பேடியாகி வருந்திக் கொண்டிருந்தான். விடிந்ததும், அருச்சுனனை அழைத்து வருமாறு ஒருகந்தருவனை இந்திரன் ஏவினான். அக்கந்தரு வன் அருச்சுனனை யடைந்து அவனுக் குற்றதை யுணர்ந்து, அதனை இந்திரனிடம் தெரிவித்தான்.

இந்திரன் தேவர்கள் சூழ அருச்சுனனை யடைந்து, ''உனது சாபம் விரைவில் நீங்கும்'' எனக் கூறி அவனைத் தேற்றினான். தேவர்களுடன் இந்திரன் உருப்பசியினிடம் சென்றான். தேவர்கள், '' நீ அருச்சுனனுக்குக் கொடுந்த சாபத்தை அவன் வேண்டும் போது பெற அருள் புரிய வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டனர். அவளும் அவர்கள் விருப்பத்திற்கு இசைந்தாள்.

[அருச்சுனன் ஊர்வசியின் விருப்பத்தை ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம்:- அருச்சுனனுடைய வம்சத் தில் வந்த புரூரவச் சக்ரவர்த்திக்கு ஊர்வசி மனைவியாயி ருந்தாள். அன்றியும் தந்தையாகிய இந்திரனுக்கு வைப்பாட் டியாகவுமிருப்பதால், ஊர்வசி அருச்சுனனுக்குத் தாய் முறையாக வேண்டும்]

இந்திரன், தம் பகைவர்களாகிய நிவாத கவசர் கால கேயரை யொழிக்க வல்லவன் இவனே என்று அருச்சுனனை தேவர்களுக்குக் காட்டினான்.

இந்திரன், அருச்சுனனை சுதர்மை என்னும் தேவ சபா மண்டபத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு அவனை வீற்றிருக்கச் செய்தான். தேவர்கள் அருச்சுனனை வேதங் களைச் சொல்லி வாழ்த்தி, சன்மானங்கள் பலவும் கொடுத்துச் சிறப்பித்தனர். தேவேந்திரன் தன் குமாரனான

அருச்சுனனுக்குத் தன்னாசனத்தில் அருத்தாசனங்கொடுத்து அவனைக் கூட வைத்துக் கொண்டு 'அமிருதபானம் பண்ணி அவனையும் அமுது செய்வித்து, அ வ னை த் தேவர்களுக்கு இளவரசனாக்கினான்.

இந்திரன் அருச்சுனனுக்குச் செ ய் யு ம் சிறப்புகளை யெல்லாம் கண்டு வந்த இந்திராணி, 'ஒரு மானிடனை இவ் வாறெல்லாம் தனக்குச் சமமாக வைத்துச் சிறப்புச்செய்தல், ஒக்க உண்ணுதல் தகுமோ?' எனக்கூறி சினந்து கொண்டாள். இந்திரன் அருச்சுனனை இகழலாகாது என்பதற்கான காரணங்களைக் கூறி, அவனது பெருமைகளையெல்லாம் இந்திராணிக்குச் சுட்டிக் காட்டினான்.

## உலூபி

தீர்த்த யாத்திரையை மேற்கொண்ட அருச்சுனன் கங்கையில் நீராடினான். அப்போது அங்கு நீராட வ ந் த நாக கன்னியர்களும் நீராட வந்தனர். அவர்களுள் ஒருத்தி உலூபி என்பவள். அவளிடத்துக் காதல்கொண்ட அருச்சுனன் அவள்பின் சென்றான். பிலத்துவாரத்தின் வழியாக நாக லோகம் சென்றான். உலூபியை ம ண ந் து கொண்டான். அவளுடன் கொஞ்ச நாள் அங்குத் தங்கினான். உலூபிக்கு இராவான் என்ற ஆண் மகவு பிறந்தது.

## சித்திராங்கதை

அருச்சுனன் தன் தீர்த்த யாத்திரையில் மதுரைமா நகரை யடைந்தான். பாண்டியன் அருச்சுனனை வரவேற்று உபசரித்தான். ஒருநாள் அருச்சுனன் பொழில் நலங்கண்டு கொண்டிருக்கும் போது அங்குப் பூக்கொய்திட வந்த பெண் கள் கூட்டத்தினைக் கண்டான். அக்கூட்டத்தில் அப் பாண்டிய மன்னன் சித்திரவாகனன் மகள் சித்திராங்கதை யும் இருந்தாள். அவளைக் கண்டு அருச்சுனன் காதல் கொண

டான்.சித்திராங்கதை பூக்கொய்த பின் ஒரு செய்குன்றினை யடைந்தாள். அங்கு அருச்சுனன் தனியே சென்றான். சித்திராங்கதையும் அருச்சுனன் பால் அன்பு கொண்டவளாயினாள். தனித்து வந்து அருச்சுனனைக் கண்டாள். கந்தருவ முறையாற் கூடி இருவரும் இன்பந்துய்த்தனர்.

செந்திருவை யனையாளுந் திருமாலை யனையானுஞ்
சிந்தை யொன்றாய்
வந்திருவர் விலோசனமுந் தடையின்றி யுறவாடி
மகிழ்ச்சி கூர்ந்து
வெந்துருவ மிழந்தமதன் மீளவும்வந் திரதியுடன்
மேவு மாபோற்
கந்தருவ முறைமையினாற் கடவுளர்க்குங் கிடையாத
காமந் துய்த்தார்

அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் - 29

தான் அருச்சுனனுடன் அனுபவித்த இன்ப நிகழ்ச்சிகளை யெல்லாம் சித்திராங்கதை தன் தோழியர்கட்கெல்லாம் கூறி மகிழ்ந்தாள். பின்னிகழ்ந்த சித்திராங்கதையின் விரக தாபத்தையும்,அதனால் அவள் அடைந்த துன்பத்தையும் கண்ட தோழியர்கள் அவளைத் தேற்றினர். அச்செய்தியைத் தோழியர்கள் செவிலித்தாயாருக்கும் உரைத்தனர். செவிலித்தாய் அரசியிடங் கூறினாள். அரசனும் செய்தி கேட்டு மகிழ்ந்தான். அருச்சுனன் தீர்த்தயாத்திரையினை மேற்கொண்டதும், அதன் பயனாக இங்கு வந்ததும் நாம் செய்த நல்வினைப் பயனே என்று நினைத்து மகிழ்ந்தான்.

அருச்சுனன் மன்னனைக் காண வந்தான். அவனை நல்லாசனத் திருத்தி எல்லா உபசாரங்களும் செய்து தன் தன் கருத்தினைக் கூறினான். 'என் மகள் சித்திராங்கதையை உனக்கு மணஞ்செய்து கொடுப்பேன்' என்றான்.

பஞ்சவரி னடுப்பிறந்தோன் பஞ்சவன்பே
    ரவையெய்திப் பஞ்ச பாண

வஞ்சகன்செய் வஞ்சனையான் மதிமயங்கி
    யிருந்துழியம் மதுரை வேந்தன்

சஞ்சரிக நறுமலர்த்தார்த் தனஞ்சயனென்
    றறிந்தெழுந்து தழீஇக்கொண் டாங்கண்

அஞ்சலினி யுனக்குரியள் யான்பயந்த
    கடற்பிறவா வமுத மென்றான்.

அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் - 36

''முன்னொரு காலத்தில் பாண்டியர் குலத்தில் தோன்றிய பிரபஞ்சநன் என்ற அரசன் தனக்குப் புத்திரப்பேறு இல்லாமையால் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். சிவ பெருமான் அவனுக்குக் காட்சி கொடுத்து 'பாண்டிய மன்னனே! உன் வேண்டுகோளின்படி உனக்கும், இனி உங்கள் குலத்துதிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறந்த நல்ல குழந்தை பிறக்கும்' என வரமும் கொடுத்தார் அதன்படி பாண்டியர் குலத்தில் ஒவ்வொரு அரசருக்கும் ஒவ்வொரு ஒப்பற்ற குழந்தை பிறந்தது. எனக்குத் தோன்றிய பெண் குழந்தை தான் சித்திராங்கதை. இவளை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறினான் சித்திரவாகனன். இவ்வரலாற்றைக் கூறிய மன்னன் அருச்சுனனிடம் ஒருவரமும் கேட்டான். 'சித்திராங்கதைக்குப் பிறக்கும் ஒரே குழந்தையையும் எனக்கே என் குலம் விளங்க அபிமான புத்திரனாக அளிக்க வேண்டும்' என்றான்.

தன் மகளுக்குத் திருமணம் என அனைவருக்கும் செய்தியனுப்பினான். சேர, சோழ நாட்டரசர்களும் வந்து கூடினர். முனிவர்களும் தேவர்களது தலைவனான இந்திரன் பெற்ற அருச்சுனனை, வில்வீரனை அலங்காரம் அனைத்தும் செய்தனர். ஒருதனி மண்டபத்தில் ஆறு கால்களையுடைய, அழகிய இரத்தினமயமானபீடத்தின் மேல் அமரச்செய்தனர்

சித்திராங்கதையை, ராஜலட்சமி, கீர்த்தி லட்சுமி, வெற்றியுடைய வீரலட்சுமி ஆகியோர் மகிழ்ச்சியடைய ஒப்பனை செய்தார்கள். இலட்சுமியிலும் அழகுமிக்க பெண்கள் அவளை முத்துக்களாலும், வேறு இரத்தினங்களாலுமாகிய ஆபரணங்களினால் கலைமகளைப் போல அழகுபடுத்தினார்கள். அருச்சுனனுடைய வலப்பக்கத்தில் சித்திராங்கதையை இருக்கச் செய்தார்கள்.

பேரிகைகள் ஒலித்தன. சங்குகள் முழங்கின. இந்திரனும் சசியும் போல, சிவனும் உமையும் போல திருமாலும் இலக்குமியும் போல, மன்மதனும் இரதியும் போல, விற்றொழிலில் வல்லவனாக அருச்சுனனும், சந்தனத்தையணிந்து ஆபரணங்களைப் பூண்ட, முலை நலஞ் சிறந்த சித்திராங்கதையும் மணமேடையில் அமர்ந்திருந்தனர். நான்கு வேதங்களிலும் வல்லவர்களான அந்தணர்கள் விவாகச் சடங்குகளை முறைப்படி செய்விக்க அக்கினி சாட்சியாக இருவருக்கும் விவாகம் நடைபெற்றது,

இந்திரனுஞ் சசியுமென இறையோனு
　　முமையுமென வெம்பிரானும்
செந்திருவு மெனக்காம தேவுமிரதியுமென
　　வெஞ்சிலை வலோனும்
சந்தணி பூண் முலையாளும் சதுர்மறையோர்
　　சடங்கியற்றத் தழல்சான் றாகத்
துந்துபியின் குலம் முழங்கச் சுரிசங்கின்
　　குழாந் தழங்கத் துலங்க வேட்டார்

அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் – 41

இருவரும் கூடிஇன்பமனுபவித்தனர். பப்புருவாகனன் என்னும் மகவினை ஈன்றெடுத்தார்கள். குழந்தையைப் பெற்ற பொழுதே அருச்சுனன் மகிழ்ச்சியோடு, முன்பு குறித்

தபடி சித்திரவாகன பாண்டியனுக்கே பப்புரு வாகனனை வளர்ப்பு மகனாக ஈந்தான். மன்னனும் தன் துயர் நீங்கிக் குலம் தழைத்ததே என மகிழ்ச்சி யடைந்தான்.

அருச்சுனன் சித்திராங்கதையை விட்டுப் பிரிந்து. மீண்டும் தன் யாத்திரையை மேற்கொண்டான். திருமா லிருஞ்சோலை, சேது தரிசனங்களை முடித்துக் கொண்டு மேல்கடலை யடைந்தான்.அக்கடலோரப் பகுதிகளில் நீராடி வரும் போது, ஓரிடத்தில் சேர்ந்தாற்போல ஐந்து குளங் களிருந்தன. அவை, ஸௌபத்ர தீர்த்தம், பௌலோம தீர்த்தம், காரந்தம தீர்த்தம், அசுவமேதபல தீர்த்தம், பாரத்வாஜ தீர்த்தம் என்பன.

## வர்க்கை

அந்த ஐந்து புண்ணிய தீர்த்தங்களிலும் எவரும் நீராடுவதில்லை. ஒவ்வொரு தீர்த்தத்திலும் ஒவ்வொரு முதலை இருந்து கொண்டு வருவோரையெல்லாம் கவர்தலி னால் அவை எவராலும் நீராடப்பட வில்லை என்பதை அறிந்த அருச்சுனன், அம்முதலைகளைத் தொலைக்கக் கருதினான். ஆகவே. முதலில் அகஸ்திய தீர்த்தமான ஸௌபத்ர தீர்த்தத்தில் இறங்கி நீராடப் புகுந்தான். அக் குளத்திலிருந்த முதலை அருச்சுனனுடைய காலைப்பிடித்துக் கொண்டது. அருச்சுனன்,தன் வலிமையால் அம்முதலையை இழுத்துக் கரையிற் போட்டான். கரையையடைந்த அளவில் அம்முதலை அழகுமிக்க தேவமாதாக மாறியது.

அதுகண்டு வியந்த அருச்சுனன், '' நீ, யார்? உன் வரலாறு என்ன? '' என்று கேட்டான். '' குபேரனுக்குப் பிரியமான வர்க்கை என்னும் அப்சரப் பெண் யான். ஸௌரபேயீ, ஸமீசீ,புத்ததா, லதா என்ற எனது தோழியர் நால்வருடன், யான் ஒருகால் சென்று கொண்டிருக்கையில் அழகிய முனிவரொருவர் பெருந்தவஞ் செய்து கொண்டிருந் தார். அவரது தவத்திற்கு இடையூறு செய்யக்கருதி நாங்கள் ஐவரும் ஆடல், பாடல் முதலிய விநோதங்களினால் அவரது

மனதைக் கலக்கத் தொடங்கினோம். நிலை கலங்காத அம் முனிவர் எங்களை முதலைகளாகும்படி சபித்தார். நாங்கள் அவரையே சரணடைந்து எங்கள் பிழைகளைப் பொறுக்கும் படி வேண்டினோம். 'நூறு வருஷம் கழிந்த பின் ஓர் உத்தம புருஷனால் நீங்கள் நீரிலிருந்து அகற்றப்படுவீர்கள். அப் போது இச்சாப வடிவம் ஒழியும்' என்றருளினார். அதுமுதல் நாங்கள் முதலைகளாய் இந்த ஐந்து தீர்த்தங்களிலும் வசிக் கின்றோம். என்னைப் போலவே மற்றை நால்வரையும் நீ சாபந்தீர்த்தருள வேண்டுமென்று வேண்ட, அருச்சுனனும் மற்றைத் தீர்த்தங்களிலும் இறங்கி அம்முதலைகளையும் இழுத்து வெளியே விட, அவையும் சாப மொழிந்து தேவ மாதர்களாய்ச் சென்றனர்.

## சுபத்திரை

பின், அருச்சுனன் துவாரகையை யடைந்தான். சந் நியாசி வேடங் கொண்டான். ரைவதக் கிரியில் ஓர் ஆலமரத் தடியில் தங்கினான். கண்ணனை மனத்தே எண்ணினான். அப்பெருமான் அருச்சுனன் முன் தோன்றி வந்த காரியம் யாதெனக் கேட்டு, அவனை அழைத்துக் கொண்டு துவார கைக்குச் சென்றான். அடுத்தநாள் மலைமீது இந்திரவிழாவிற் கென பல வேந்தர்கள் சூழ, பலராமன் சென்றான். அவனது தங்கை சுபத்திரையும் சென்றாள். அனைவரும் கபட சந்நி யாசி யாகிய அருச்சுனனை வணங்கினர். பிறகு வந்த கண்ணனும், மற்றவர்காண அருச்சுனனை வணங்கினான்.

அருச்சுனனும் கண்ணனும் ஒருவருமறியாமல் ஏகாந் தத்தின் செய்த முடிவுப்படி சுபத்திரையை மாறு வேடத் திலிருந்த அருச்சுனனுக்கு நான்கு மாத காலம் பணிவிடை செய்யும்படி கண்ணன் ஏற்பாடு செய்தான். சுபத்திரையும் அருச்சுனனுடைய கள்ள வேடத்தையறியாமல் அவனுக்குப் பணிவிடை செய்து வந்தாள்.

இரவில் அருச்சுனன் ஓர் அறையில் துயில, சுபத்திரை தன் பாங்கியருடன் வேறு ஒரு அறையில் துயின்றாள். கடந்த பல நாள்களாக அச்சந்நியாசி வேடத்திலிருக்கும் அருச்சுனனைக் கூர்ந்து கவனித்து வந்த சுபத்திரைக்குப் பல சந்தேகங்கள் எழுந்தன. 'ஓர் அரச குமாரனுக்குள்ள யுத்த லக்ஷணங்களுடைய உறுப்புக்களை யுடையவனாக இருக்கின்றான். நல்லிலக்கணமுடைய வில்லின் தழும்புகளைத் தோளிலும் கைகளிலும் பெற்றவனாக உள்ளான். இவன் யாராக விருக்கலாம்' என நினைத்தாள்.

துணிந்து ஒருநாள், அம்முனிவருடைய திருவடிகளைப் பணிந்து, 'ஐயனே! தீர்த்தயாத்திரையை மேற்கொண்டு நீங்கள் எல்லா விடங்களுக்கும் சென்று வருவதாயினும் உங்களுடைய சொந்த வூர் யாது?' என்றாள். அம்முனிவரும், 'எங்கள் மாநகர் இந்திரப் பிரஸ்தம்' என்று விடை கூறினார் அது கேட்ட சுபத்திரை, 'தருமன், வீமன், நகுல, சகாதேவர்கள் அனைவரும் அங்கு நலமாக உள்ளார்களா?' என்று வினாவினாள். அருச்சுனன், 'பாண்டவரில் நால்வர் நலம் பற்றிக் கேட்ட நீ அருச்சுனனைப் பற்றிக் கேளாதது ஏன்? என்றான்.

அதற்குத் தோழிகளுள் ஒருத்தி, ''சுவாமி! இவளுக்குப் பாண்டவர்களுள் அருச்சுனன் பால் அன்பதிகம். அவனையே மணந்து கொள்ள வேண்டும் என்ற நாணத்தால், அவனை, யொழிந்த மற்றவர்களை மட்டும் விசாரித்தாள்' என்றாள். 'இந்திரப் பிரஸ்தத்திலிருந்து வந்தவர்கள் சொன்னார்கள். அருச்சுனன் இப்போது தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு உலகை வலமாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றான் என்றும், அவன் இன்று எவ்வூரில், எங்கு, எவ்வாறு? இருக்கிறானோ, என்று தோழி அந்தக் கபட சந்நியாசியைக் கேட்டாள்.

இதுவே தன்னைக் குறிப்பால் சுபத்திரைக்கு அறிவித்துக் கொள்ளும் நல்ல வேளையெனக் கருதிய அருச்சுனன், 'அருச்சுனன் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடிவிட்டு

இடையூறு ஏதுமின்றி சுபத்திரையின் பொருட்டாக இந்தப் பதியில் இவ்வீட்டில் தான் தங்கியுள்ளான்' என்றான்.

இதனைச் செவி மடுத்த சுபத்திரைக்குச் ச ந் நி யா சி வேடத்திலிருப்பவன் அருச்சுனனே என்பது தெளிவாயிற்று. காமக்குறிப்புத் தோன்ற நின்று கொணடிருந்த சுபத்தி ரையை அருச்சுனன் கைப்பற்றினான். உடன், நாணத்தால் சுபத்திரை அஞ்சினாள். அயலே யிருந்த ஒரு மாதவிப் பந்த ரில்அருச்சுனனும் சுபத்திரையும் ஒளிந்தனர்.இச் செய்தியைத் தோழியர் சுபத்திரையின் தாயார் தேவகியிடத்தில் கூறினர். கண்ணன், அருச்சுனனுக்கும் சுபத்திரைக்குமிடையே நடந்த செயல்களைப் பிறர் அறியாமுன் அவ்வூரிலிருந்தஅனைவரை யும் தன்னோடு அழைத்துக் கொண்டு மகாத்வீபம் என் ற இடத்திற்குச் சென்றான்.உடன் பலராமனையும் அழைத்துச் சென்றான். சிவபெருமானுக்கு நடைபெறும் வி ழா வை க் காண அனைவரும் துவாரகையை விட்டு மகாத்வீபம் என்ற விடத்திற்குச் சென்றனர்.

அருச்சுனன் தன் தந்தையைத் தியானித்தான்.இந்திரன் வந்து சேர்ந்தான். சுபத்திரையும் தன் அண்ணனை நினைத் தாள். கிருஷ்ணனும் வந்து சேர்ந்தான். இந்திரனும் கண்ண னும் ஒருவரையொருவர் எதிர் கொண்டழைத்துக் கொண்ட னர். இந்திரனும் இந்திராணியும் த ம் ஆபரணங்களினால் அருச்சுனனையும் சுபத்திரையையும் அலங்கரித்தனர்.கண்ண னுடைய அருளினால் வசிஷ்டன் மு த லி ய முனிவர்களும் வந்தனர்.

முரசங்கள் முழங்க, சங்க வாத்தியங்கள் ஒ லி க் க திருமணச் சடங்குகளோடு, அன்பில் சாட்சியாக அழகுமிக்க அருச்சுனன் அன்பில் நிறைந்த சுபத்திரையைத் திருமணம் செய்து கொண்டான்.

தொடங்கி நாதவெம் முரசுடன்
சுரிமுகத் தழங்கச்
சடங்கி னாலுயரா குதித்
தழலவன் சான்றா
விடங்கி னான்மிரு விசயனக்
கன்னியை வேட்டான்
மடங்கி னார்தம் பதிதொறு
மவ்வழி வந்தார்

அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் - 77

கண்ணனுடைய கட்டளையின்படி சுபத்திரை தேர் ஓட்ட, அருச்சுனன் அத்தேரில் துவாரகா புரியினின்றும் இந்திரப் பிரஸ்த்தத்திற்குப் பயணமானான். இச்செய்தியை கண்ணபிரானே, 'அண்ணா! இந்திரகுமாரனான அருச்சுனன் நமது தங்கை சுபத்திரையை பலாத்காரமாக எடுத்துச் செல்லுகிறான்' என்று பலராமனுக்குக் கூறினான்.

உடனே, பலராமன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு அருச்சுனனைத் தொடர்ந்து சென்றான். சுபத்திரைக்குத் தேறுதல் கூறி அருச்சுனன் தேரை விட்டிறங்கிப் போர் செய்து அனைவரையும் வென்றான். பின் கண்ணன் பலராமனுடன் இந்திரப் பிரஸ்த்தம் சென்று பலபடியாகப் பேசி வருத்தம் நீக்கி விவாகத்திற்குக் கொடுக்கும் காணிக்கைப் பொருள்களையெல்லாம் பலராமன் அன்போடு கொடுத்து வந்தான். கண்ணன் இந்திரப் பிரஸ்த்தத்தில் சில நாள்கள் தங்கியிருந்தான். சுபத்திரைக்கு அபிமன்யு என்ற புத்திரன் நன்னாளிலே பிறந்தான்.

## ஜாநபதீ, கிருபி, கிருதாசி

கோதமன் என்றொரு முனிவன். அவனது குமாரன் சரத்வாந் என்பவன். அவன் பிறக்கும் பொழுது அம்புகளுடனே பிறந்ததனால் சரத்வாந் என்ற பெயர் பெற்றவனானான்.

இவன் வேத மோதுவதிலும், வில்வித்தை தேர்தலிலும் மிக்க விருப்பமுடையவன். அவற்றில் தேர்ந்து, பின்பு பெருந்தவம் செய்து வருகையில் அவன் தவத்தைக் கெடுக்க இந்திரன் விரும்பினான். ஆகவே, இந்திரன் 'ஜாநபதீ' என்னும் தேவ கன்னிகையைச் சரத்வாந் இடம் அனுப்பினான். அவளைக் கண்டு காமுற்ற சரத்வாந்அவளோடு கூடிஇன்பந்துய்த்தான் அருகிலிருந்த நாணற் கட்டையில் ஓர் ஆண்மகவையும், ஒரு பெண் மகவையும் உண்டாக்கினர்.

தனது தவநிலை குழைந்ததற்குக் கழிவிரக்கங் கொண்ட அம்முனிவன் உடனே அக்குழந்தைகளையும், தனது வில், அம்புகளையும் அங்கேயே போட்டு விட்டு அவ் விடத்தை விட்டகன்றான்.

வேட்டைக்குச் சென்ற சந்தனு மகாராஜன் அக்குழந் தைகளை கிருபையோடு எடுத்து வந்து வளர்த்ததனால் அவர்களுக்கு முறையே கிருபன், கிருபி என்ற பெயர்கள் உண்டாயின. பிறகு ஒருகால் அச்சரத்வாந் என்ற முனிவன் அத்தினாபுரிக்குவந்து தன் மகனான கிருபனுக்கு வில்வித்தை முழுதும் கற்பித்துக் கொடுத்துச் சென்றான். ஆகவே கிருபன் சிறந்த வில்லாசிரியனாய் விளங்கினான். இவனே பின், கிருபாச்சாரியார் என எல்லோராலும் போற்றப்பட்டனாக விளங்கினான்.

அங்கிரஸ் என்னும் முனிவனது குலத்திற் தோன்றிய வர் பரத்துவாச மகரிஷி. இவர் கங்கைத் தலைப்பில் யாகஞ் செய்து செய்து கொண்டிருக்கையில், அங்கு நீராட வந்த ஒரு தேவமாதின் கட்டழகில் ஈடுபட்ட பரத்துவாசர், அவ ளிடம் காதல் கொண்டு மன முருகியதால் அவனது விருப்பப் படி ஒரு துரோண கலசத்திலிருந்து ஒரு குமாரன் பிறந்தான் அக்குமாரன் பெயர் துரோணன். அவன் பிறப்பதற்குக் காரணமாயிருந்த அத்தேவ மாதின் பெயர் கிருதாசி.

## திரௌபதி

பாஞ்சால நாட்டு மன்னன் துருபதன் மகள் திரௌபதி. அருச்சுனன் துருபதனைப் போரில் வென்று தன் குருவிற்குக் காணிக்கையாகக் கைதாக்கிக் கொண்டு வந்து துரோணன் முன் நிறுத்தினான். துரோணன் தன்னைப் பரிகசித்துப் பேசியதால் மனவேதனையுற்ற யாகசேனன் துரோணனைக் கொல்லுவதற்காக ஓர் ஆண் மகவையும், தன்னை வெற்றி கொண்ட பேராற்றல் மிக்க அருச்சுனனை மணந்து கொள்ள ஒரு பெண் மகவையும் பெற ஆசைப்பட்டான். அதற்காக துருபதன் உபயாசன், யாசன் ஆகிய இரு முனிவர்களைக் கொண்டு புத்திரகாம யாகத்தைச் செய்தான். அந்த யாகத்தின் பயனாகத் திருஷ்டத்யும்நனும், திரௌபதியும் தோன்றினார்கள். திரௌபதி யாகத்தீயிலிருந்து தோன்றியவள். அவள் தீயினின்று வெளிப்பட்டபோது அசரீரி ஒன்று ஒலித்தது. ''பூமியிலிருந்து அன்று ஒருத்தி தோன்றினாள். அரக்கர் குலம் அழிந்தது இன்று தீயிலிருந்து இப்பெண் தோன்றியுள்ளாள். வீரக்கழலணிந்த மன்னர் குலம் அழியும் வேறென்ன கூற உளது'' இதுவே அசுரீரி ஒலித்ததாகும்.

மண்மே லொருத்தி யரக்கர் குலம்மாளப்
பிறந்தாள் வாம நுதல்
கண்மே லின்று மிவள்பிறந்தாள் கழற்கா
வலர்தங் குலமுடிப் பாள்
எண்மே லென்கொ லினியென்றாங் கெவருங்
கேட்ப வொருவார்த்தை
விண்மே லெழுந்த தவன்புரிந்த வேள்விக்
களத்னிதிடை யம்மா

வாரணாவதச் சருக்கம் - 91

திரௌபதி மங்கைப் பருவமெய்தினாள். துருபதன் சுயம்வர நாள் குறித்தான். பாண்டவர்கள் அச்சுயம்வர மண்டபத்தை நாடிச் சென்றனர். வழியில் வியாச முனிவர்

தோன்றி, 'என் முன் வந்திர்கள்; ஆகவே நல்வாழ்வு பெறு வீர்கள். துருபதன் உங்களை விரும்பி அன்பால் ஏற்றுக் கொள்வான் உங்களுக்காக வேள்வி செய்து பெற்ற திரௌபதி நாளை உங்களுக்கு மாலை சூட்டுவாள்' என்று கூறினான்.

சந்திரதத்தன் என்னும் கந்தருவனை வென்று, அவனது உதவியால் பாண்டவர்கள் கடத்தற் கரிய நீர் நிலைகளையும், நதிகளையும் நீந்திச் சென்றார்கள். அப்பால், தௌமியன் 'என்னும் முனிவர் துணை கொண்டு மீதியுள்ள வழியையும் கடந்து பாஞ்சாலநகரத்தின் எல்லையை அடைந்தனர். வழியில், மலருந் தாமரை மலர் ஒன்றினைப் பல வண்டுகள் சூழ்ந்து ரீங்காரம் பாடிக் கொண்டிருக்க, ஒரு வண்டு மட்டும் இதழ்களைக் கிண்டி, மலரினுள் நுழைந்து தேனைப் பருகியது. இந்தக் காட்சியினைப் பாண்டவர்கள் கண்டனர். அடுத்த ஒரு நீர்த்துறையின் ஓரத்திலே ஒரு மாமரம் இருந்தது. அம்மரத்திலிருந்து ஒரு மாங்கனி அந் நீரில் விழுந்தது. உடனே, பல மீன்கள் அக்கனியைச் சுற்றிச் சுற்றித் தத்தமக்கு இரையாகுமென எண்ணிக்கொண்டிருந்த போது ஒரு வாளை மீன் திடுமெனப் பாய்ந்து அக்கனியை வாயாற் கவ்விச் சென்றது. இக்காட்சியினையும் கண்ட பாண்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நன்னிமித்தமாகக் கருதினர்'

நகரத்திற்குள் நுழைந்தனர். அந்நகரத்து வீதிகளில் கட்டப்பட்டிருந்த கொடிகளெல்லாம், 'காதின் புறத்தைக் கடந்து சென்ற சிவந்த கண்களையும், புன் சிரிப்பையும், கொவ்வைப் பழம் போல் சிவந்த வாயையும், தம்மிடத்து விளங்குகின்ற ஆபரணங்கள் சிறக்கத்திகழுகின்ற தனங்களையுமுடைய திரௌபதிக்கு இன்று வதுவை நாள்; அனைவரும் வாருங்கள்' என்று மலர்க்கையால் அழைப்பன போல் விளங்கின. நகருக்குள் நுழைந்த பாண்டவர்கள் பார்க்கவன் என்னும் ஒரு குயவன் வீட்டில் தங்கினார்கள்.

குந்தியை வீட்டிலிருத்தி விட்டு, பாண்டவர்கள் தௌமிய முனிவருடன் சுயம்வர மண்டபத்தை யடைந்தனர் பாண்டவர்களுக்காக ஏங்கிக் கொண்டிருந்த திரௌபதியை தாதியர் தேற்றினார்கள்.

ஆதியிற் குந்தி மைந்த ரைவர்க்கு முரியளா மென்று
ஓதிய விதியி னாலெனுஞ் சுலப்புறா வுவகை கூர்வாள்
சோதிடம் பொய்யா தென்றுந் தோன்றுவ ருரியோ
ரென்றுந்
தாதியர் தேற்றத் தேற்றத் தன்மனத் தளர்வு தீர்வாள்.

திரௌபதி மாலையிட்ட சருக்கம் - 23

திரௌபதி அருச்சுனனையே மனத்துள் எண்ணியவளாய், வ்ளைந்த வில்லையும், கொடி கட்டிய தேரையும் அன்றி, வேறேதும் நினையாதவளாய் இருந்தாள். 'அன்று நான் எரியில் தோன்றிய போதே என் தந்தை அன்புடன் நிச்சயித்தவாறு, இந்த அழகிய சுயம்வர மண்டபத்துள் அருச்சுனனைக் கண்டு, எரிசாட்சியாக அவரையே மணப் பேன். அவ்வாறு நிகழ அவர் வாராராயின் நான் தோன்றிய எரியினை மூட்டி அதிற் புகுவேன்' என்று கூறினாள்.

ஆண்டெரிப் பிறந்தபோதே யன்பினா லெந்தை நேர்ந்த
பூண்டெரி மார்பனின்றிப் பொன்னவை பொலியத் தோன்றி
ஈண்டெரி முன்னர் மன்னரிழிவுற வேட்டி லானேல்
மீண்டெரி புகுவ னென்னு மெண்ணமே விளையு நீராள்.

திரௌபதி மாலையிட்ட சருக்கம் - 25

தோழியர்கள் திரௌபதியை ஆடையணிகளால் அழகு படுத்தினர். செவிலித்தாயர் திரௌபதியைச் சுயம்வர மண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். மண்டபத்தை யடைந்ததும், திரௌபதி பாண்டவர்களை அம்மண்டபத்துள் காண முற்பட்டாள். பாண்டவர்கள் தங்களுடைய உண்மை யான உருவம் மாறி அந்தணர் வடிவில் வீற்றிருந்தனர்.

மேகக் கூட்டங்களால் சூரியனுடைய கிரணங்கள் மறைக்கப்பட்டிருந்தாலும், அச்சூரியனைக் கண்டு தாமரை மலர்வதைப் போல, திரௌபதியின் முகத்தாமரை மலர்ந்தது. மண்டபத்தின் ஒருபுறத்தே வீற்றிருந்த பாண்டவர்களைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட திரௌபதி உள்ளத்தே மிக்கமகிழ்ச்சிகொண்டாள். அப்போது, திருஷ்டத்யும்நன் சுயம்வர மண்டபத்துள் வீற்றிருக்கும் மன்னர்களை நோக்கி, ''கலை ஞானங்களில் வல்லவர்களே! இதோ இங்கு வில் இருக்கிறது; அம்புகளும் இருக்கின்றன. கூரிய நுனியமைந்த ஆரங்களுடைய சக்கரம் ஒன்று இதோ வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. அச்சக்கரத்தின் மீது நடுவில் நிலையிலா இலக்கு ஒன்று இருக்கிறது. அவ்விலக்கினை மனம் விரும்பி எவர் அம்பினால் வீழ்த்துகின்றாரோ அவருக்கே திரௌபதி உரியவளாவாள்'' என்றனன்.

செவிலித்தாயர் மண்டபத்துள் வீற்றிருந்த ஒவ்வொரு அரசரையும் திரௌபதிக்கு அறிமுகப் படுத்தினார்கள். துரியோதனன், அவனது தம்பியர், சகுனி, அசுவத்தாமன், கர்ணன், பலராமன், கண்ணபிரான், சாத்தகி, சராசந்தன், பகதத்தன், சல்லியன், நீலன் போன்ற பல அரசர்களும் திரௌபதிக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.

ஒவ்வொரு அரசராக இலக்கினை வீழ்த்த முயன்றனர். பலர் தோற்றனர் பலர் எப்படியும் நாம் வீழ்த்தி விடுவோம் என எழுச்சியுற்றனர் எல்லாரும் தோற்றனர். அந்தனர் வடிவிலிருந்த அருச்சுனன் எழுந்தான். 'அரசர்கள் மட்டுமே இவ்விலக்கினை வீழ்த்த அனுமதிப்பார்களா? அன்றி, வீழ்த்தும் எவருக்கும் திரௌபதி உரியவளா?' என அருச்சுனன் திட்டத்துய்மனிடம் கேட்டான். 'எவர் வீழ்த்தினாலும் அவருக்கிவள் உரியள்' என்று கூறி, அருச்சுனனுக்கு இலக்கினை எய்ய அனுமதி கொடுத்தான் திட்டத்துய்மன். அருச்சுனன் இலக்கினை எய்தி வீழ்த்தினான்.

கிளர் மகுட வயவேந்தர் நாண்க ளெல்லாம்
கீழாகத் தனிநெடுநாண் கிளர வேற்றித்
தளர்வறுசா யகந்தொடுத்துக் கற்றோர் யாருந்
தனுநூலுக் காசிரியன் றானே யென்ன
உளர்திகிரி சுழலிலக்கை யவையோர் தங்க
ளூக்கமுடன் விழவெய்தா னுரவுத் தோளான்
வளருமருந் தவவேள்வி முனிவ ரார்த்தர்
வாசநறு மலர்சொரிந்து வானோ ரார்த்தார்.

திரௌபதி மாலையிட்ட சருக்கம் - 56

இலக்கினை வீழ்த்தி, அழகிய நீலமலை போல நின்ற அவ்வந்தணனை பாஞ்சால மன்னனுடைய மகள் திரௌபதி 'இவன் அந்த அருச்சுனனே யாவான்' எனக்கருதி அவனுக்கு மாலை சூட்டினாள்.

அந்தச் சபையில் வீற்றிருந்த அனைவரும் தன்னை இன்னார் என அறியாராதலினால், அருச்சுனன் எவரையும் மதியாது திரௌபதியுடன் அவ்விடம் விட்டகலத் தொடங்கினான். துரியோதனனுடைய தூண்டுதலால் அரசர்கள் அனைவரும் போருக்கு எழுந்தனர். வீமனுக்கும் அருச்சுனனுக்கும் முன்பாகவே அந்தணர்கள், எதிர்த்து வந்த அரசர்களுடன் போர் செய்தனர். அந்தணர்களை விலக்கி விட்டு கர்ணனுடன் அருச்சுனன் போர் செய்தான். வீமன் சல்லியனுடன் போர் செய்தான். முடிவில் அருச்சுனனும் வீமனும் வெற்றி பெற்றனர். கண்ணன் விலக்கி விட அரசர்கள் அவரவர்களுடைய ஊருக்குச் சென்றனர்.

ஐவரும் திரௌபதியுடன் தாங்கள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றனர். குந்தியிடம், 'அம்மா' இன்று நாங்கள் ஒரு பிச்சை பெற்றோம்' என்றனர் வழக்கம் போல கேட்கின்ற செய்திதானென்ன நினைத்த குந்தி 'அதனை அனைவரும் உண்ணுங்கள்' என்று கூறிய பின் திரௌபதியைப் பார்த்தாள்.

'எதையோ நினைத்துக் கொண்டு, சொல்லி விட்டேனே' என்று வருந்திய குந்திக்கு தருமன், 'நீங்கள் வருந்த வேண்டாம். எங்கள் உள்ளத்திலும் அப்படிப்பட்டநினைவே யிருந்தது' என்று கூறி குந்தியைத் தேற்றினான்.

அன்றிலக் கெய்த கோவுந்
துணைவரு மான வெம்போர்
வென்றுகொற் றவையோ டொக்கு
மின்னிடைப் பொன்னுந் தாமும்
சென்றுமட் கலஞ்செய் கம்மி
செழுமனை முன்றி லெய்தி
இன்றுபெற் றனமோ ரைய
மென்செய்வ திதனை யென்றார்

உள்ளிருந் தன்னை மைந்த
ருரைத்தசொற் கேட்டுத் தேவர்
தெள்ளமு தென்ன மக்காள்
சேரநீ ரருந்து மென்னாப்
புள்ளின மொடுங்கு மாலைப்
பொழுதவள் புறம்ப ரெய்திக்
கள்ளவிழ் கூந்தலாளைக்
கரும்பென விரும்பிக் கண்டாள்

என்னினைந் தென்சொன் னேன்மற்
றென்செய்தே னென்று சோரும்
அன்னையை வணங்கி நின்சொ
லாரணப் படிய தாகும்
நின்னினை வன்றா லெங்க
ணெஞ்சிலு நினைவுண் டென்றான்
தன்னிக ரிலாத கேள்வி
சான்றசீர்த் தரும னென்பான்.

திரௌபதி மாலையிட்ட சருக்கம் - 64, 65, 66

குந்தி ஒருவாறு தேறுதலடைந்தாள். இரவு கழிந்தது. நடந்த செய்திகளைத் துருபதன் தன் ஒற்றர்களாலறிந்து பாண்டவர்களைத் தம் மனைக்கு அழைத்துச் சென்றான். அவர்களுடைய உடல், நடையுடை பாவனைகளின் அடையாளங்களைக் கொண்டு அந்தணர்களல்ல, இவர்கள் பாண்டவர்களே என துருபதன் உணர்ந்தான். அவர்களை முறையாக உபசரித்தான்.

தன் வில்லாற்றலினால் மற்ற மன்னர்களைக் கீழ்ப்படுத்திய அருச்சுனனுக்கே திரௌபதியை இன்றே மணமுடித்துத் தருவேனென்று துருபதன் கூறினான். அதற்கு அறத்திலின்று வழுவாத தருமன், 'நாங்கள் ஐவருமே இவளை மணந்து கொள்ளுவோ' மென்றான். அதற்கு உடன்படாத துருபதனனுக்குவியாசர் காரணங்காட்டி பாண்டவர் விருப்பத்திற்கு துருபதனனை இசையும்படிச் செய்தார்: திரௌபதியின் முற்பிறப்பின் வரலாறு:-

## நாளாயணி, இந்திரசேனை

அந்தணர்குலத் தலைவனாக மௌத்தகல்யன் என்னும் முனிவனுக்கு நாளாயணி என்பாள் மனைவியாக விளங்கினாள். அவளது கற்பின் திறத்தினைச் சோதிக்க வேண்டி அவன் எபபோதும் குட்ட நோயுடையவனாகக் காட்சியளித்தான். குட்ட நோயால் சிதைந்த வடிவ முடையவனாகவும், மிக்கக் கிழத்தனமும், எப்பொழுதும் பெருங் கோபமும், உடம்பில் துர்நாற்ற முடையவனாகவும் நாளாயணிக்குக் காட்சி தந்து வந்தான். அதோடு அவளை மிக்க வருத்தியும் வந்தான்.

நாளாயணி தான் விரும்பிய இன்ப சுகத்தினை தன் கணவன்பால் பெறாதிருப்பினும், அவனிடத்துக் கொண்ட அன்பில் குறையாத வளாய் விளங்கினாள். ஒருசமயம் தன் கணவனுண்ட எச்சிலுணவில் அவனுடைய கைவிரல் ஒன்று இற்று விழுந்து கிடந்தது. அதையும் அவள் பொருட்படுத்தாமல், அருவெறுப்பின்றி அவ்வுணவை யுட்கொண்டாள்.

அங்ஙனம் அவள் நிலை குலையாது, கணவனை மதித்து வழிபட்டு வந்ததைக் கண்ட மௌதகல்யன் மிகுந்த திருப்தி கொண்டு தனது நோய் வடிவத்தை யொழித்து, காமனினுஞ் சிறந்த கட்டழகுடையவனானான். "மின்னல் போன்றவளே! மிகக்கற்புடையபதிவிரதா தருமத்தையுடைய அருந்ததியினும் உயர்ந்தவளே! நீ விரும்பும் வரங்களை என்னிடம் இப்போதே கேட்டுப் பெற்றுக் கொள்" என்றான் அதற்கு நாளாயணி, "உனது அன்பு எந்நாளும் நீங்காமை யாகிய நல்ல வரத்தை எனக்கு உடன்பட்டுத் தருவாயாக" எனக் கணவனை வேண்டினாள்.

மின்னே யுனக்கு மிகுகற்புடை மீனு மொவ்வாள்
இன்னே வரம் வேண்டுவ வேண்டுக வீண்டை யென்ன
நின்னேய மென்றும் பிரியாநல நேர்க வென்றாள்
தன்னே ரிலாத மனைவாழ்விற் றவத்தின் மிக்காள்.

திரௌபதி மாலையிட்ட சருக்கம் - 77

மௌத கல்யன் அவள் வேண்டிய வாறே வரங்கொடுத்தான். "இருவரும் (கணவனும் மனைவியுமாகிய நாம்) மனமொத்து, மலையும் அதனைச் சார்ந்து பெருகுகிற நதியும் போல, மரமும் அதன்மேற்படரும் பசிய கொடியும் போல, துன்றும் துணையுமாய், பலவகை உருவங்களில், ஓரிடத்து நின்றும், பலவிடங்களில் சஞ்சரித்தும் ஒருவரை யொருவர் பிரியாது ஒன்றாயிருந்து இன்பந்துய்ப்போமாக"

## இந்திரசேனை

இப்பிறவியில் அனுபவித்த இன்பங்களுக்குப் பின் நாளாயணி நினைத்தபடியே அடுத்த பிறவியில் இந்திர சேனையாகி முற்பிறவியில் தனக்குக் கணவனாயிருந்த மௌதகல்யனை யடைந்தாள். அவனோ முத்திப் பேரின்பத்தில் விருப்பமுடையவனாகி இந்திர சேனையைக் கண்டஞ்சினான். தன் கருத்திற்கு இணங்காமல் அந்த மௌதகல்யன்

விலகிச் செல்லுமளவில் 'உன்னை விட்டுப் பிரிந்து நான் எவ்வாறு வாழ்வேன்' எனக்கேட்டாள். 'என் தவத்தைக் கெடுப்பதற்காக நீ முயற்சிக்கின்றாய். ஆகவே நீ துருபதன் புத்திரியாய்ப் பிறக்க, உன்னை ஐவர் மணப்பார்' என்று சபிக்கின்றான். பின் இந்திரசேனை சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தாள்.

இந்திரசேனையின் முன் காட்சியளித்த சிவபெருமானை,'எனக்கு ஏற்றகணவனைத்தருக'என்று ஆதரத்தால் ஐந்து முறை அடுக்கிச் சொல்லி வேண்டினாள். சிவபெருமானும் 'அப்படியே ஆகுக' என ஐந்து தரம் கூறி அவள் ஐந்து கொழுநரைப் பெறும்படி அனுகிரகித்தனன். நாளாயணியாக மௌத கல்யனிடத்தில் வேண்டிய வரமும் ''ஐந்து வடிவு கொண்டு கிரீடிப்பாய்'' என்பதாம். சிவபெருமானும் தன் ஐந்து முகங்களோடு தோன்றி வரந்தந்தான் என்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

சிவபெருமானுடைய வரத்தை ஏற்க மகிழாமல் தனக்கு ஒரு நாயகனைத் தரும்படி பரமசிவனை இந்திரச்சேனை பிரார்த்தித்தாள். 'நீ ஐந்து தரம் வேண்டியபடி நான் உனக்கு ஐந்து தரம் அருளியது தவறாது' என்றான்.

ஐந்தான னத்தோன் அருள்செய்ய வழகின் மிக்காள்
ஐந்தான சொல்லால் கணவற்றரு கைய வென்றாள்
ஐந்தான சொல்லா னளித்தான் மற்றவனு முன்னாள்
ஐந்தான போக மிவளெய்திய வாற றிந்தே.

திரௌபதி மாலையிட்ட சருக்கம் - 81

சிவனருளால் இந்திரர் ஐவருக்கு முன்னேற்பட்ட சாபத்தால் பூலோகத்தில் அவ்வைவரும் பஞ்ச பாண்டவர்களாகப் பிறந்தனர். அவர்களைச் சார்ந்த இந்திரசேனை திரௌபதியாகவும் பிறவியெடுத்துள்ளாளென வியாசர்

துருபதனுனுக்குச் சொல்லி அவனைத் தெளிவு படுத்தினார். துருபதன் தன்மகளை ஐவருக்கும் தனித்தனியாகத் திருமணம் செய்து கொடுத்தான்.

பாஞ்சால நகரிற் சில நாள்கள் தங்கிய பின் பாண்டவர்கள் திரெளபதியுடன் அத்தினாபுரம் சென்றனர். திருதராட்டிரன் தருமனுக்குப்பட்டாபிஷேகம் செய்துவைத்தான். பின்பு காண்டவப் பிரத்தம் செல்லும்படி திருதராட்டிரன் தருமனிடம் கூற, பாண்டவர்கள் காண்டவப் பிரத்தம் சென்றனர். அங்குக் கண்ணன் ஆலோசனைப்படி இந்திரன் அனுப்பிய விசுவகர்மனைக் கொண்டு ஓரழகிய நகரம் அமைக்க தருமன் ஏற்பாடு செய்தான். அந்நகரமே இந்திரப் பிரஸ்தம் என்று அழைக்கப்பட்டது. தருமன் அதனை ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் போது, பாண்டவரிடத்து நாரதன் வந்தான். பாண்டவர்களுக்கு சுந்தோப சுந்தர் வரலாற்றைக் கதையாகக் கூறி, பாண்டவர்கள் திரெளபதியிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் விளக்கிக்கூறினான.

நீவிரும் விதியால் வேட்ட நேயமுண் டேனு மன்றல்
ஓவிய மனையாள் தன்னை யோரோரா ராண்டொருவ ராக
மேவினிர் புரியுமங்ஙன் மேவு நா ளேனை யோரிக்
காவியங் கண்ணி னாளைக் கண்ணுறல் கடன தன்றே.

இந்திர பிரத்தச் சருக்கம் - 45

தருமபுத்திரன் இராஜ சூய யாகம் நடத்தினான். துரியோதனாதியர்கள் அதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திரெளபதி தருமனுடன் யாகபத்தினியாக வீற்றிருந்து இருவருமாக யாகத்தை முறைப்படி நடத்தி வைத்தனர்.

துரியோதனன் தருமபுத்திரனைப் போல ஒரு மண்டபங் கட்டினான். அதனைக் கண்டு களித்து விருந்தயர்ந்து செல்லப் பாண்டவர்களை அழைத்தான். துரியோதனனு

டைய உள்நோக்கம் பாண்டவர்களுடன் சூதாடி, அவர்களது நாடு நகரங்களைக் கவர்ந்து கொண்டு அவர்களை இழிவு படுத்த வேண்டுமென்பதே யாம். அதற்குக் காரணம் பாண்டவர்களது இராஜசூய யாகத்திற்கு துரியோதனன் சென்றிருந்த போது வீமனும், திரௌபதியும் துரியோதனனைக் கண்டு சிரித்தார்கள். துரியோதனன் மயனால் கட்டப்பட்ட சபா மண்டபத்தின் அழகு வேலைப்பாடுகளைக் கண்டு கண்டு வியந்தான். விதானத்தில் எழுதப் பட்ட குளம் போன்ற ஓவியம் கீழே புதைக்கப்பட்ட நிலக் கண்ணாடியில் பிரதிபலிக்கும். அதனைக் கண்ட துரியோதனன் உண்மையான குளம் வெட்டி வைத்துள்ளார்கள் என நினைந்து தன்னை நன்றாக ஆயத்தப்படுத்திக் கொண்டு ஆடைகள் நீரில் நனையா வண்ணம் அதில் இறங்கப் புகுவான். பின் உண்மையான குளத்தைக் கண்ட போது 'இது பிம்பம்' எனக் கருதி வீழ்ந்து ஆடைகளை நனைத்துக் கொள்வான். இது போல, சுவரில் அமைக்கப் பெற்றிருக்கும் வேலைப் பாடமைந்த வாயிற்படியினைக் கடக்க முயற்சிக்கும் போது சுவரில் முட்டிக் கொள்ளுவான். அது ஓவியமாக இருக்கும் உண்மை வாயிற் படியினைக் கையால் தடவி சுவரல்லாமையால் கீழே விழச் சென்று தடுமாறுவான். இவ்வாறெல்லாம் திகைத்துத் தடுமாறும் துரியோதனனைக் கண்டுதான் திரௌபதி சிரித்தாள் சிரித்ததற்குக் காரணம் மைத்துனர் முறையாதலும் விளையாடுதற்குரிய வருமான தன்றி வேறு காரணங்களில்லை. துரியோதனன் இதனைத் தவறாகக் கருதினான். 'ஒரு பெண் தன்னை இழிவு படுத்துகிறாளே' என உரிமையை மறந்து சினங் கொண்டான். முன்னிருந்த தீராப் பகையுணர்ச்சியும் இச்சினத்தீக்கு எண்ணெய் வார்த்தது.

தனது தந்தை, திருதராட்டிரனை வற்புறுத்தி விதுரன்பால் பாண்டவர்களுக்கு ஓலை கொடுத்து அழைத்து வர துரியோதனன் ஏற்பாடு செய்தான். விதுரன் எவ்வளவு நல்லுரைகளைக் கூறியும் ஏற்றுக் சொள்ளுவாரில்லை யாகை

யால் விதுரன் பாண்டவர்களை அழைத்துவர இந்திரப் பிரஸ்தம் சென்றான்.

விதுரனைப் பாண்டவர்கள் எதிர்கொண்டழைத் தனர்; முறையாக உபசரித்தனர். விதுரன் வந்த காரியத் தைச் சொன்னான். துரியோதனனுடைய உட்கருத்தினையும் வஞ்ச எண்ணத்தையும் தெளிவு படுத்தினான்.

பாண்டவர்கள், 'இவ் வழைப்புக்குச் செல்லுவோமா? வேண்டாமா?' என்பதை நன்கு ஆய்ந்தனர். தருமபுத்திரன் விதுரனைக் கேட்டான். 'நான் உங்களை அழைத்துவர ஏவப் பட்டவன்; ஓலை கொண்டு வந்த தூதுவன். உன் மனம் விரும்பியதைச் செய்வாயாக' என்று கூறினான். வீமனைக் கேட்டான்; அருச்சுனனைக் கேட்டான்; நகுல சகாதேவர் களையும் கேட்டான். அனைவரும் அத்தினாபுரம் செல்ல வேண்டாமெனத் தருமனது கருத்தை மறுத்துக் கூறினர். திரௌபதியையும், குந்தியையும் தருமபுத்திரன் ஆலோசனை கேட்க வில்லை என்பதை ஈண்டு நன்குணர்தல் வேண்டும்.

பாண்டவர்களை திருதராட்டிரன் எதிர்பார்த்தபடி, அவர்களும் அஸ்தினாபுரம் சென்றனர். திருதராட்டிரன் பாண்டவர்களை அன்புடன் வரவேற்றான் பாண்டவர்களும் அவனை வணங்கினார்கள். திரௌபதியைத் திருதராட்டிரன் வாழ்த்தி, காந்தாரியின் அரண்மனைக்கு அனுப்பினான். பாண்டவர்களும் காந்தாரியைக் கண்டு அவளைவணங்கினர் பின் துரோணன் முதலிய அந்தணர்களிடத்து ஆசி பெற்று, பாண்டவர்கள் விதுரனுடைய மாளிகையில் தங்கினர். தருமன் திரௌபதியையும் விதுரன் மாளிகையில் வந்து தங்கிடச் செய்தான். அடுத்த நாள் துரியோதனனுடைய சபா மண்டபத்தில் எல்லாரும் திரண்டனர். தருமனும் தன் பத்தினியைக் காந்தாரியின் மாளிகைக் கனுப்பி விட்டுத் தான் தன் தம்பியரோடு மன்னர்கள் கூடியிருந்த சபா மண்ட

பத்தை யடைந்தான். மண்டபத்தின் வேலைப் பாடுகளைக் கண்டு களித்தனர். பின் தருமனைச் சூதாட அழைத்தனர். சூதாடுதலை இழிவு எனத் தருமபுத்திரன் தெளிவு படுத்தினான். சகுனியின் தூண்டலில் துலங்கிய நிகழ்ச்சி இடம் பெற, முடிவில் தருமன் இடங் கொடுத்தான். இதனையறிந்த தம்பியர் மறுவுரை கூறினர். அவை பயனற்றுப் போயின. சூதில் தருமன் தனதுடைமைகள் அனைத்தையும் இழந்தான். தன்னையும், தன் தம்பிமார்களையும் பணையமாக வைத்துத் தோற்றான்.

சகுனி, 'நீங்கள் அனைவரும் உங்கள் உடைமைகளை இழந்து, உங்களையும் பணயம் வைத்துத் தோற்று எங்கள் அடிமைகளாகி விட்டீர்கள். மையெழுதிய அகன்ற கண்களையுடைய வேள்வி மாதினை வைத்து ஆடுங்கள்' எனத் தருமனுக்குச் சகுனி கூறினான்.

மெய்வருந் திறத்தி னும்மை வெல்லு மாறு வேறலால்
ஐவருந் திருந்த வெங்க ளடிமை யின்ன ராயினர்
மைவருந் தடங்கண் வேள்வி மாது தன்னை யொட்டி நீ
கைவருங் கவற்றி னின்ன மெறிக வென்று கழறினான்.

சூதுபோர்ச் சருக்கம் - 182

தருமன், 'தருமபத்தினியால் நமக்கும் விமோசனம் கிடைக்கும், இழந்த பொருட்களை மீண்டும் பெறலாகும்' என்ற ஆசை உந்த திரௌபதியைச் சூதுப்பணயமாக வைத்து ஆடினான். வெற்றி சகுனிக்கே கிடைத்தது. இதனைக் கண்ட துரியோதனன் செருக்குற்றான், தனது தேர்ப்பாகனான பிராதிகாமிக்கு, திரௌபதியை அழைத்து வருமாறு துரியோதனன் கட்டளையிட்டான்.

பிராதிகாமி திரௌபதியிடம் செல்லாமலே, திரௌபதியைக் கண்டதாகவும், அவள் கூறியதாகவும் தனது கற்

பனைச் சொற்களைத் துரியோதனனிடம் பலரும் அறிய சபையிற் கூறினான். 'தருமபுத்திரன் தன்னைத் தானே தோற்பதற்கு முன்னே என்னைப் பந்தயமாக வைத்துத் தோற்றிழந்தானா? அல்லது தன்னைப் பணயப் பொருளாக வைத்துத் தோற்றிழந்த பிறகு, மனந்தளர்ந்து என்னைப் பந்தயப் பொருளாக வைத்து இழந்தானா? என்று கேள். 'முதலில் சூதாட்டத்தில் தோல்வியடைந்து இழந்த பொருள் களை யெல்லாம் வென்றவர்கள் கவர்ந்து கொள்ளும் முறைமையல்லாமல், தன்னைத் தோற்றுவிட்ட பின் பு. இழந்த பொருளைக் கைப்பற்ற வேண்டுமென்பது தகுதி அன்றே' என்றாள்.

இதனைக் கேட்டதும் துரியோதனன் வெகுண்டெழுந் தான். 'துச்சாதனா! செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, செல்வத்திலே புகுந்து வாழும் திரெளபதியை நீ போய் அழைத்து வா ஐவருக்குப் பத்தினியாயிருக்கின்ற அவள் அரசர்கள் பலர் கூடியிருக்கும் சபைக்கு வர நாணப் படுவானேன்?'' என்று கூறினான்.

உடனே துச்சாதனன், 'தோன்றா நயனந் துணை வனைப் போற்றுணைக் கண் டுகிலிற் சூழ்ந்திருந்த, ஈன்றா ளில்லத்திருந்தாளை யீகலோ டெய்தியிவை சொல்வான்' கணவன் பிறவிக் குருடனானதினால், தானும்'இவ்வுலகைக் காண விரும்பேன்' என்ற முடிவுடன் தனதிரண்டு கண்களை யும் துகிலால் மறைத்துக் கட்டிக் கொண்டிருக்கும் காந்தாரி யின் மாளிகையை யடைந்தான் துச்சாதனன். அங்கிருந்த திரெளபதியைக் கண்டு துச்சாதனன் கூறினான்.

'தானாகவே சூதாடி எல்லாப் பொருளையும் தரும புத்திரன் இழந்தான். பிறகு பாண்டவர்களில் மூத்தவளான தன்னை முதலிலும், வீமனை அடுத்தும், தொடர்ந்து அருச் சுனன், நகுல சகாதேவர்களையும் பணயமாக வைத்துச் சூதில் தோற்றான். இறுதியாக,யாவரினும் இளையாயாகிய

உன்னையும் சூதில் தோற்றான். ஆகவே,பாண்டவர்களைப் போல நீயும் எங்களுக்கு அடிமையாகி விட்டாய்.என்னுடன் அரசரவைக்கு வருவாயாக' என அழைத்தான்.

'' இந்திரப் பிரஸ்தத்திலே எங்கள் தலைவனான துரியோதனன் அன்று நீங்கள் கட்டிய சபா மண்டபத்தைக் கண்டு, அதன் சிற்ப, ஓவிய, கட்டடக் கலையினை ரசித்து வந்த போது, அவனை இகழ்ந்து சிரித்தீர்களே அந்த வாய் இன்றழுவதேன்? ஐவரையும் தனித்தனியே தழுவித் தழுவி இன்பம் அனுபவித்த நீ இன்று பல மன்னர்கள் நிறைந்துள்ள சபைக்கு வர நாணுபவளாக நடிக்கிறாயே! நீ பிறந்த குலத் துக்குரிய மாயையை யெல்லாம் நான் அறிவேன். கூசாது என்பின் வருவாயாக'' எனக் கூறி, பலாத்காரமாக அவளது செந்தாமரை போன்ற கையைப் பிடித்திழுத்தான்.

சூழுங் கனல்வாயுரு மன்றித் துளிவாய்
முகிலு மகிதலத்து
வீழுங் கொல்லோ வுற்பாதம் விரவிற்
றென்றே வெரூஉக் கொள்ள
தாழும் பெரியறா ரோடலையத்
தழீஇக் கொண்டு
வாழும் சுரும்பு சுழன் றரற்ற
மண்மே லிழுத்து வருகின்றான்.

சூதுபோர்ச் சருக்கம் - 220

திரௌபதி வேடருடைய வலையிற் சிக்கிய மான் போல வெருண்டு பிழைக்கும் வழியின்றி திகைத்துப் பெரு மூச்சு விட்டு, மாமி முறையான காந்தாரிபால் ஓடி ஒதுங்கினாள்.

தன்பால் வந்த திரௌபதியை காந்தாரி பாதுகாத்து துச்சாதனனை விரட்டாமல், 'நீ துச்சாதனன் பின் செல்வா

யாக! உன்னை அழைத்தது யார்? உன் சுற்றத்தார் தானே! அஞ்சாமல் செல். உன் கருத்தினை அவர்களிடம் கூறு'' என்றாள்.

துச்சாதனன் மேற்கொண்ட செயலுக்கு ஆக்கந்தருவ தாக அமைந்தன காந்தாரியின் சொல்லும் செயலும். துச்சா தனன் திரௌபதியின் கூந்தலைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றான்.

திரௌபதி, 'தன் கணவன்மார்கள் சபையில் இருப் பார்கள் என்றும், அவர்கள் தன்னைக் காக்கக் கூடும்' என்ற நம்பிக்கையுடன் அவைக்குச் சென்றாள். அவளை இழுத்துக் கொண்டு துச்சாதனன் செல்லும் போது நகர மக்கள் திரௌபதின் நிலையினைக் கண்டு மிக வருந்தினார்கள். திரௌபதி அரசரவையை யடைந்தாள்.

நெடுமா நகரிற் சனமனைத்தும்
நேயம் பெறக்கண் டிவை கூற
வடுமா மரபிற் குறத்தேடு
மன்பே ரவையின் முன்புக்காள்
கொடுமா மலர்க்கண் புனல்சோரக்
குலைந்தே கிடந்த குழல் சோரத்
தடுமா றுள்ளந் தனிசோரத்
தலைநாளளித்த தழல் போல்வாள்.

தூதுபோர்ச் சருக்கம் - 226

அவளுடைய மனத்துயரையும், அதனாலவள் கொண்ட வேதனை படர்ந்த முகத்தையும். துச்சாதனனால் கலைக்கப் பட்ட கூந்தலையும் கண்டு, அவையிலிருந்த மன்னர்கள் அனைவரும் இரங்கித்தலை கவித்தனர். ஆனால் திருதராட்டிரன் மட்டும் வாளாவிருந்தான். துரியோதனன், துச்சாதனன், கர்ணன், சகுனி ஆகிய துஷ்ட சதுஷ்டர்கள் தவிர மற்ற யாவரும் திரௌபதியின் நிலை கண்டு

வருந்தினர். கண்ணீர் சோர அரச சபையிலே 'கோ'வென அழுத திரெளபதியை நோக்கித் துச்சாதனன், 'நுண்ணிடையாளே! பல அரசர்கள் கூடியுள்ள இச்சபையில் உன் மாமனாராகிய திருதராட்டிரன் இருக்கிறான். முறையாகத் திருமணம் செய்து கொண்ட, உன்னைத் தழுவும் பாண்டவரைவரும் உள்ளனர். உன்னைச் சார்ந்த அனைவரும் இருக்கும் பொழுது இச்சபையில் உனக்கென்ன கதியின்மையேற்பட்டது. நீ உடல் மெலிய அழுவானேன். பலருக்கும் இன்பந்தர, தான் பொதுவாயிருக்கிற வேசையர்க் கன்றோ நினைத்ததும் கண்ணீர் பெருகும்'' எனக்கேட்டான்.

அவனுடைய கடுஞ்சொல்லைக் கேட்டுப் பொறாளாய் திரெளபதி, 'பொல்லாத பழியையே ஆபரணமாகப் பூண்டிருக்கும் அற்பனான துச்சாதனன் என்னை இகழ்ந்து பேசும் சொற்களைக் கேட்டுக் கொண்டு, பதிலொன்றும் பேசாமல் இருக்கின்றீர்களே!' என்று கேட்டு அப்பேரவையைத் தொழுதாள்; அவ்வவையில் அழுதாள்; சோர்வுற்றாள்.

வீடுமன் துச்சாதனனை நோக்கி, '' நீ செய்த காரியம் நல்லதல்ல. திரெளபதியைப் பார்த்து பேசியதும் முறையல்ல;'' என்றான். திரெளபதி சபையில் உள்ள அனைவரையும் நோக்கி தனக்கு நீதி கூறுமாறு கேட்டாள் திரெளபதியைக் காணாமலே அவள் கூறியதாக பிராதிகாமி துரியோதனனிடம் கூறிய அதே வாசகத்தைத் திரெளபதி மீண்டும் சபையில் நிறைந்துள்ள மன்னர்களை பார்த்துக் கேட்டாள்.

மன்னோற் றனன்வெஞ் சூதாகில்
வழக்காற் கொண்மின் மன்னவையின்
முன்னோற் றனனோ வென்னையுந்தான்
முன்னே இசைந்து தனைத்தோற்ற
பின்னோற் றனனோ கரியாகப்
பெரியோர் உண்மை பேசுகென

மின்னோற் றனைய நுண்ணிடையாள்
விழிநீர் வெள்ள மிசை வீழ்ந்தாள்

- சூது போர்ச் சருக்கம் - 235

சபையில் யாரும் பேசவில்லை. மழை பெய்ந்தோய்ந் தாற் போலிருந்தது விகர்ணன் எழுந்தான் 'கரிய கூந்தலை விரிய விட்டு மயிலனையாள் இச்சபையில் கதறியழ, ஊமைக் கூட்டம் போல் ஒன்றும் சொல்லாமல் இருக்கின்றீர்களே! வாள் வீரர்களே! பொல்லாத நெறியில் அனைவரும் போகாமல் நீதியைப் பேசுங்கள்' என்றான். யாரும் பேச-வில்லை. திரௌபதியின் வினாவிற்கு உரிய விடை கூறின் துரியோதனனுடைய பகை, வரும் என அஞ்சுகின்றீர்களா? எனச் சபையோரைக் கேட்டான். பிறகு தன் கருத்தை அனைவர் கருத்தாகக் கூறினான். 'முதலில் தன்னைப் பணயப் பொருளாக வைத்துத் தன்னைத்தானே இழந்த, உங்களுக்கு அடிமையான தருமபுத்திரனுக்கு திரௌபதியை மீண்டும் பணயப் பொருளாக வைத்துச் சூதாடும் உரிமையில்லை யாகையால் அத்திரௌபதியைத் துரியோதனன் கைக்கொள்ள உரிமையில்லை' என்றான்.

தன் கருத்தை அவை எவ்வாறு வரவேற்றுள்ளது என்பதையும் தெரிந்து கொண்டான். மன்னர்கள் அனைவரையும் விகர்ணன் தன் பேச்சால் சிந்திக்க வைத்தான். சபையோர் விகர்ணனுடைய முடிவே சரியான தென்றனர். அவனுக்குத் 'தக்கோன்' என்ற பெயரையும் அவையோர் சூட்டினர்.

ஆனாலும், கர்ணன் இச்சபையில் துரியோதனனுக்கு மாறான கருத்தை இவன் எப்படிக் கூறலாம் என நினைந்து விகர்ணனைக் கேட்டான். " இச்சபையிலிருக்கின்ற அரசர்கள் எல்லாரைக் காட்டிலும் நீ அறிவிற் சிறந்தவனோ? அரச நீதியில் நீதான் முதிர்ந்தவனோ? உன்னை விட்டால் நீதியைக் கூறவேறெவரும் இல்லை என நினைத்துக் கொண்டி

ருக்கின்றாயோ! நீதான் நீதியை எடுத்துக் கூறவேண்டு மென்று உன்னை யாராவது வந்து கேட்டுக் கொண்டார் களோ! நீதியைச் சொல்ல விரும்பினால் பலரோடும் ஆலோ சித்தல்லவா உன் கருத்தைச் சொல்லியிருக்க வேண்டும்''

இவ்வாறாகக் கர்ணன் விகர்ணனுடைய முடிவிற்கு மறுப்புத் தெரிவித்தான். 'தருமபுத்திரன் தன்னைத்தோற்ற பின் திரௌபதியைப்பந்தயம் வைப்பதற்கு உரிமையில்லான் என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவதாக இருப் பினும் எல்லாப் பொருளையும் தோற்ற பின்பு தருமனுக்குத் திரௌபதி என்ற பொருளில்லை. 'எனது நகரத்தையும் இல்லையும் பந்தயம் வைத்தேன்' என்று தருமன் சொல்லிய போதே நகரத்தில் உள்ள வீடும் அடங்குமாயின் தனியே கூறப்பட்ட 'இல்' என்ற சொல் எதனைக் குறிக்கும்! அது தன் மனைவியாகிய திரௌபதியைத்தான் குறிக்கும் 'இல்' என்ற சொல் மனைவியைக் குறிக்கும் என்பது நான் வலிந்து கூறும் பொருளன்று இச்சபையில் இதனை யாவரும் உணர்வர். ஆகவே, திரௌபதி வெல்லப்படாதவள் என்னும் கூற்று தவறானதே'' எனக் கர்ணன் விகர்ணனை நோக்கிக் கூறினான்.

மேலும் வளருகின்ற பேச்சில் நாட்டங்கொள்ளாத துரியோதனன் பாண்டவர், திரௌபதி ஆகியோரின் துகிலை யுரியுமாறு துச்சாதனனுக்குக் கட்டளையிட்டான். பாண்ட வர்கள் தங்களுடைய அணிகலன்களையும், உத்தரீயங்களை யும் தாமே களைந்து கொடுத்தனர்.

துச்சாதனன் திரௌபதியை நெருங்கினான். திரௌ பதி திகைத்தாள். 'இருகை நறு மலர்குவிய எம்பெருமானி ணையடிக்கே யிதயம் வைத்தாள்' தன்னாடைகளைப் பிறர் கவருமுன் தாமே யொழித்தல் அரச கௌரவமெனப் பாண் வர்கள் கருதினர். திரௌபதி அவ்வாறு தானே களைந்து கொடுக்க மாற்றாடை யர்து மில்லாதவள். அரச சபையில்

ஆடைகளைக் களைதல் என்பது நியாயமா? என்றெலாம்ல் எண்ணிக் கொண்டிருந்த திரௌபதியைத் துச்சாதனன் நெருங்கினான் அவள் துகிலையும் உரியத் தொடங்கினான்.

தன்னைப் பாதுகாக்க வேண்டிய கணவர் ஒருவர்க்கு ஐவரிருந்தும் மாற்றார்க்கு அடிமைப் பட்டு பரதந்திரராய்த் தன் திறத்தில் துணை புரிய வலியற்று வாளாக் கிடப்பதை யும் கண்டு வருந்தினாள். தனக்கேற்பட விருக்கும் அவல நிலையிலிருந்து தன்னைக் காப்பாற்றுவார் எவரும் இச்சபை யில் இல்லை என்பதை யுணர்ந்தாள். திரௌபதி, கண் களில் ஆறாக நீர் சொரிய, கூந்தல் அவிழ்ந்து புரள, துச் சாதனன் தன் துகிலை இழுக்க, அது நெகிழாதிருக்கும் பொருட்டுத் தானும் தன் துகிலை இறுகப் பிடித்துக் கைகள் சோர, உடலும் தளர்ச்சியடைய. யாதும் கூற இயலாத வளாய் 'கோவிந்தா! கோவிந்தா!' என்று பலதரம் கூறி முறையிட்டாள். அதனால் அவள் உடல் குளிர்ந்தது. நாவில் எப்போதும் ஊறாத அமிர்தம் சுரந்தது. உடல் புளகாங் கிதம் அடைந்தது. உள்ளமெல்லாம் உருகினாள்.

ஆறாகி யிருதடங்க ணஞ்சனவெம்
　　புனல் சோர வளகஞ் சோர
வேறான துகிறகைந்த கைசோர
　　மெய்சோர வேறோர் சொல்லுங்
கூறாமற் கோவிந்தா கோவிந்தா
　　வென்றரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறர்த வமிழ்தூற உடல் புளகித்
　　துள்ளமெல்லாம் முருகி னாளே

சூதுபோர்ச் சருக்கம் - 247

அரிய வேதங்களில் சொல்லப்படும் ஆயிரந் திருநாமங் களுடைய தேவர்களால் அர்ச்சிக்கப்படுகிற,அழகிய தாமரை மலர் போன்ற திருவடிகளையுடைய கண்ணபிரானுடைய

செவிகளில் திரௌபதியின் 'கோவிந்தா' என்ற அபயக்குரல் வீழ்ந்தது. அக்கண்ணபிரானும் திரௌபதியின் மனங்கலங் காதவாறு பிறரெவருக்கும் தெரியாமல் அவளுக்குக் காட்சி கொடுத்து அருள் செய்தான்.

அருமறை சொல்லிய நாம மாயிர முரைத்தழைக்க
அமரர் போற்றுந்
திருமலர்ச் செஞ்சீ றடியோன் றிருச்செவி யிலிவண்
மொழி சென் றிசைந்த காலை
மருமலர்மென் குழன்மானின் மனநடுங்கா வகைமனத்தே
வந்து தோன்றிக்
கரியமுகி லனையானும் பிறரெவர்க்குந் தெரியாமற்
கருணை செய்தான்

சூதுபோர்ச் சருக்கம் - 248

அறிவில்லா துச்சாதனன் விடாமல்அவிழ்த்துக்கொண் டிருக்க, திரௌபதி ஆடையானது முடிவுறாமல் ஒன்றொற் கொன்று வெவ்வேறாகப் பொருந்திய பல நிறங்களைப் பெற்று; ஆயிரங்கோடி வஸ்திரங்களாக வளர்ந்தது.

எம்பெருமானுடைய அனுக்கிரகத்தினால் உண்டான ஆடை களைத் துச்சாதனன் களைந்து களைந்து அம்மண்டபத்தே நிறைத்தான். வீரர் பலர் அவ்வாடைகளைஅப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர். துச்சாதனனுடைய கைகள் சோர்ந்து போயின.

வீடுமன் முதலியோர் திரௌபதியை நன்கு மதித் தனர். வானவர்கள் பூமாரி பொழிந்தனர். துரியோதனன் மீண்டும் துச்சாதனனை நோக்கி, 'திரௌபதியை என்மடி மீது இருத்துக' எனக் கட்டளையிட்டான்.

கொடிய வார்த்தைகளைக் கேட்ட திரௌபதி, இடி யோசை கேட்ட நாகம் போல் பதை பதைத்தாள். கிருஷ்ண பகவானை மனத்தே த்யானம் செய்பவளாய், துரியோத னன் சுட்டிக்காட்டிய அத்தொடை வாயிலாகவே தன்னுயிர் நீப்பானாக எனத் திரௌபதி துரியோதனனைச் சபித்தாள்.

திரௌபதி சபையை நோக்கினாள். ''இச்சபைக்கு அஞ்சாமல் என் கூந்தலைப் பிடித்து இழுத்து வந்தவனும், இத்தனை அரசர்களுக்கு மத்தியில் என் துகிலைக் களைந்து என்னை அவமானப் படுத்தியவனும், என்னைத் தகாத கொடுஞ்சொற்களால் வேதனைப் படுத்தியவர்களும் வரும் போரிலே அழிவர். அவர்கள் அழிந்தொழியும் முன் என் விரிந்தகூந்தலை முடிக்க மாட்டேன்''எனக்கூறி பிரதிக்ஞை செய்தாள்.

அரசவையி லெனையேற்றி யஞ்சாமற்
றுகிறீண்டி யளகந் தீண்டி
விரைசெயளி யினம்படிதார் வேந்தரெதிர்
தகாதனவே விளம்பு வோரைப்
பொருசமரின் முடிதுணித்துப் புலானாறு
வெங்குருதி யொழிய வெற்றி
முரசறையும் பொழுதல்லால் விரித்தகுழ
னியெடுத்து முடியே னென்றாள்.

சூதுபோர்ச் சருக்கம் - 255

திரௌபதி தன் சபதத்தைக் கூறி முடித்துப் புலம் பினாள்.ஆகாயத்தில் மேகங்களே யில்லாத அந்தச்சமயத்தில் வானம் இடித்தது. ஊர்கோள் சூரியனைச் சுற்றி மண்டல மிட்டது. பூமி நடுங்கியது. நட்சத்திரங்கள் கடும் பகற் பொழுதிலேயே உதிர்ந்தன. குளங்களிலுள்ள நீர் வற்றியது. யாகங்களைச் செய்கின்ற பெரிய யாகசாலை யோரங்களில்

சிவந்த இரத்த வெள்ளம் ஓடியது. அவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அரசர்களதுஉடலொளி குன்றியது பின் வரும் நிகழ்ச்சிகளுக்கு இவை உற்பாதங்களாகத் தோன்றின.

அஞ்சிய திருதராட்டிரன், கற்பில் சிறந்தவளாகிய திரௌபதியை வணங்கி, 'என்மக்கள் உன்பாற் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்துக் கொள்வாயாக' என வேண்டினான். 'உத்தமமாங்குல மயிலே! என் குழந்தைகள் அறியாமல் மைத்துனர்களர்ன முறையால் உலக வழக்கில் இல்லாத விளையாட்டுகளை அறிவில்லாத காரணத்தால் உன்பால் செய்து விட்டனர். அவர்கள் எத்தனை செய்திருந் தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் பித்தர் மொழி எனக் கருதி மறந்தருள்க' என்றான்.

சூதில் தோற்ற பொருட்களை யெல்லாம் மீண்டும் பெறுமாறு பாண்டவர்களுக்குத் திருதராட்டிரன் அனுமதி கொடுத்தான். சகுனி அதை விரும்பாமல்துரியோதனனுக்குத் துர்போதனை செய்தான் துரியோதனன் கட்டளையிட துச் சாதனன்' 'முறைப்படி நீங்கள் தோற்று இழந்தவற்றை மீண்டும் பெறலாகாது' என்றான். அது கேட்ட திருதராட் டிரன் செய்வதறியாது திகைப்பவனைப் போல ஆலோசித் தான் துரோணன். விதுரன், மற்ற அமைச்சர்கள் அனை வரையும் ஏதேர் கேட்டு, பின் தருமபுத்திரனுக்கு. ''நீயே உண்மையறிவு முதிர்ந்துள்ளவனாதலர்ல் பெரியோர் மொழிப்படியே நடப்பாயாக, எனது மக்கள் நர்ன் விரும் பியவாறு, உனக்கு நீ இழந்த இராஜ்ஜியத்தை மீண்டும் கொடுப்பதற்குச் சம்மதிக்கவில்லை. ஆகவே இதற்கு முன் பெரியவர்கள் நடந்து கொண்ட முறையினையே மேற் கொள்க'' என்று திருதராட்டிரன் தருமபுத்திரனுக்குக் கூறினான்.

திருதராட்டிரனது கருத்தைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட துரோணன் தருமனுக்கு அதனைத் தெளிவாகக் கூறினான். அதாவது அயோத்திமா நகரில் நடந்த ஸ்ரீஇராம பிரானுடைய வரலாற்றைக் கூறி, இராம பிரானைப்போல நீங்களும் கொஞ்ச காலம் உங்கள் இராஜ்ஜியத்தை விட்டு விட்டு மலைகள் நிறைந்த காடுகளில் வாழ்ந்து வாருங்கள். இதுவே முன்னையோர் நடந்து கொண்ட முறை. இதனையே நீங்களும் மேற்கொள்ள வேண்டும் என்பது தான் திருதராட்டிரன் கருத்து என்றும் கூறினான். '' உனது மனைவியுடன் நீங்கள் ஐவரும் பன்னிரண்டாண்டுகள் வனவாசம் செய்து, பின் ஓராண்டு நாட்டில் யாரும் அறியாதவாறு அஞ்ஞாத வாசம் செய்து பதின்மூன்றாண்டுகட்குப் பின் வந்தால் உங்கள் நாடு நகரங்களையும், இழந்த பொருட்களையும் பெறலாம்'' என்றான்.

அரிவையோ டகன்று நீவி ரைவரு மடவி யெய்திச்
சுரர்தின மீரா றங்கட் டுன்னுதிர் மன்னு நாட்டின்
ஒருவரு மறியா வண்ண மொருதின முறைதி ருங்கள்
பெருவிற லரசும் வாழ்வும் பின்னுறப் பெறுதி ரென்றான்

சூதுபோர்ச் சருக்கம்-276

அடிமைத் தன்மையிலிருந்து மீள மறுசூதாட வேண்டுமென திரௌபதி கூறினாள். காரணம் தன்னையும், தன் கணவன்மார்களையும், தன் குழந்தைகளையும் அடிமைத்தன்மையிலிருந்து விடுவித்துக் கொள்ளாமல் வனவாசம், அஞ்ஞாத வாசமெல்லாம் புரிந்து பதின்மூன்றாண்டுகள் கழித்து வந்தாலும் துரியோதனன் நாடு நகரங்களைத் தரவில்லையென்றால் அவனுக்கு அடிமைகளாகத்தானே பணிவிடை செய்து வாழ வேண்டும். இவனுடைய மனம் அப்போது எப்படியிருக்குமோ? அப்போதும் மனந்திருந்தாமல் நம்மை மீண்டுந் துன்புறுத்த எண்ணலாமன்றோ!.

ஆகவே இப்போதே அடிமைத் தனத்திலிருந்து நீங்கினால், பின் நாம் உரிமைக்காகப் போராட இயலும். என்று திரௌபதி கருதியதேயாகும்.

திரௌபதி கூறியபடியே தருமன் மறுசூதாடினான். திரௌபதி சொல்லி வைத்தபடி, தருமன் திருமாலின் திருநாமங்களைச் சொல்லியே மறுசூதாடினான். தன் புண்ணியங்களைப் பந்தயமாக வைத்தான். தருமன் மறு சூதில் வென்றான். அடிமைத்தனத்தினின்றும் நீங்கி பாண்டவர்கள் சுதந்திரப் புருஷர்களாக திரௌபதியுடன் காட்டிற்குச் சென்றார்கள்.

அவர்கள் மேற்கொண்ட வனவாசத்தில் காந்தர்ப்ப கிரியின் வனத்திற்கு வந்தனர். அங்கு தங்கி வாழ்ந்து வரும் போது ஒருநாள் இந்திரனுடைய கிரீடத்தை அலங்கரிப்ப தற்குத் தகுதியான பொன்மயமான தாமரைப்பூ வொன்று திரௌபதியின் எதிரில் வீழ்ந்தது. அம்மலரை திரௌபதி தனது சிவந்த தாமரை மலர் போன்ற கையினால் எடுத்துக் கொண்டு சிந்திக்கத் தொடங்கினாள்.

இந்த மலர், உலகமெல்லாம் ஈன்ற திருமாலின் நாபிக்கமலமோ? சூரியனுடைய கரத்தில் வாடாதிருக்கும் மலரோ? அல்லது திருமகளுறைகின்ற தாமரைதானோ! என திரௌபதி அதிசயித்தாள் அதனை வீமன் கையிற்கொடுத்து இதுபோன்ற மலரொன்றை எனக்குப் பெற்றுத் தருக வெனக் கேட்டாள்.

வீமன் அம்மலரைப் பற்றி அருகிருந்த உரோமசனைக் கேட்டான். உரோமசன் குபேரனுடைய அளகாபுரியில் இம் மலர் உள்ளது. இது தெய்வலோகத்தில் உள்ள பூக்களை யொத்தது. இதனை உன்னால் கொண்டுவர இயலுமென்று கூறினான். உடன் வீமன் அளகாபுரிக்குச் சென்றான். வாசனை மலருள்ள இடத்தையும், அவ்விடஞ் செல்லும்

நெறியையும் அநுமன் கூறினான். அதன்படி வீமன் பொழிலை யடைந்தான். பொற்காவலர் வீமனுடன் போர் தொடுத்தனர். இதனையறிந்த வேறு சில காவலர் குபேர னிடங் கூற, அவனுடைய மைந்தன் உருத்திரசேனன் போர் நிகழும் இடத்திற்குச் சென்றான். வீமனை வந்த காரணம் யாதெனக் கேட்டான். வீமன் தான் வந்த காரணத்தைக் கூறினான். உருத்திரசேனன் வீமன் வேண்டிய மலர்களை வீமனுக்குக் கொடுத்தனுப்பினான்.

இதற்குள், வீமனைக் காணாது தருமபுத்திரன் வருந்தினான். திரௌபதியைக் கேட்டான். திரௌபதி நிகழ்ந்ததைக் கூறி, வீமன் மலர் கொணர அளகாபுரிக்குச் சென்றுளான் என்று தருமபுத்திரனிடம் கூறினாள். அருச்சுனனுடைய பிரிவால் வருந்திக் கொண்டிருந்த தருமனுக்கு வீமனுடைய பிரிவு மேலும் துன்பத்தைத் தந்தது.

தருமன் கடோற்கசனை நினைத்தான். கடோற்கசன் உடன் தருமன் முன் தோன்றினான் இருவருமாக வீமனைத் தேடிக்கொண்டு ஆகாய வழியாக குபேரனுடைய அளகாபுரிக்குச் சென்றனர். வழியில் வீமன் மலரோடு வருதலைக் கண்டு, மூவரும் திரும்பினர். தன் கட்டளையின்றி பெண் வார்த்தையால் தனித்து வந்து இப்படிப்போர் புரியலாமா என தருமன் வீமனைச் சினந்து பல பேசினான்· பின் சினமாறி,மூவரும் காந்தர்ப்பகிரி வனத்திற்கு வந்தனர். திரௌபதிக்கு மலர் கொடுத்து வீமன் கடோற்கசனை வழியனுப்பி வைத்தான்.

அருந்தவ முனிவர்கள் பலர் தருமபுத்திரனையடைந்து கொடிய மிருகங்களினின்றும் எங்களைப் பாதுகாத்தருள வேண்டும் என அபயங் கேட்டனர். முனிவர்களுடைய இடுக்கணைத் தீர்க்குமாறு வீமனை ஏவி விட்டு, தருமபுத்திரன் மட்டும் அக்காட்டில் திரௌபதியுடன் வசித்து வந்தான். அப்போது ஓரரக்கன் தருமனிடம் வந்தான். அவன்

மலை போன்ற இரண்டு தோள்களையுடையவன். இரண்டு கால்களைப் பெற்ற ஒரு குன்று வருவது போல நடப்பவன் இராகு கேதுவாகிய இருகோள்களுக்குஅஞ்சி பிறைச்சந்திரன் மலைக் குகைக்குள் நுழைவது போன்ற இருகோர தந்தங் களையுடைவன். இவன் நாள்தோறும் தருமனிடத்து வந்தான். சடாசுரன் என்பது அவ்வரக்கனுடைய பெயர். முருக்கம் பூவைப் போன்ற சிவந்த கண்களையுடையவன். அரக்கை வார்த்தாற் போன்ற சிவந்த சடா முடிகளையு டைவன். வஞ்சனையால் தருமத்தையழிக்கும் கொடுமை மிகுந்தவன்.

முன்பு ஓர் அரக்கன் சீதையை யெடுத்துச் செல்ல. தன் உண்மை உருவத்தை மறைத்து, கபட சந்நியாசி வேடங் கொண்டு சென்றாற் போல் சடாசுரன் அந்தண வடிவங் சொண்டு பாண்டவர்கள் யாருமில்லாத நேரம் பார்த்து திரௌபதியை வான்வழியாகத் தூக்கிச் சென்றான்.

அதனையறிந்த நகுல சகாதேவர்கள் வில்லேந்தி அச் சடாசுரனை நெருங்கினர். அதனை முனிவர் இடுக்கண் தீர்த்துத் திரும்பி வந்து கொண்டிருந்த வீமன் கண்ணு ற்றான். சடாசுரனை நெருங்கினான். இருவருக்கும் போர் நிகழ்ந்தது. சடாசுரனிடமிருந்து திரௌபதியை வீமன் மீட்டுக் கொண்டு வந்தான். அனைவரும் திரௌபதியுடன் தருமபுத்திரனையடைந்னர். வீமன் நடந்த வரலாற்றைக் கூறினான். பின் அனைவரும் அங்கிருந்து பதரிகாச்சிரமத் தையடைநதனர். மலைவழிகள் பல கடந்து அஷ்டகோண மகரிஷியின் வனத்தையடைந்தனர். அவ்வனத்தில் தான் பாண்டவர்கள் ஒன்பதாண்டுகள் தங்கியிருந்தனர்.

ஒருநாள், திரௌபதி ரிஷிபத்தினி மார்களுடன் ஒரு பெரிய நதியிலே புதிய வெள்ளப் பெருக்கில் நீராடினாள்.

அந்தப் புதிய வெள்ளத்தில் ஒரு பதுமமலர் மிதந்து வந்தது. அதை திரௌபதி கண்ணுற்றாள். உடன் தன் மெல்லிய கரத்தால் அம்மலரை எடுத்தாள்.

அடுத்த நொடியில் அம்மலரை வீமன் கையிற் கொடுத்து இது போன்ற மலர்கள் எங்குள்ளனவெனக் கேட்டாள். வீமனும் இப்படிப்பட்ட மலர்கள் எங்கிருப்பினும் உனக்குக் கொண்டு வந்து தருவேன் எனக் கூறித் தன் தம்பி மார்களறியா வண்ணம் புறப்பட்டான்.

வீமன் இரத்தினகிரியை அடைந்தான். அங்கிருந்து அளகாபுரியின் வாயில்களைக் கடந்து அதற்கு வடமேற்றி சையில் நின்று கொண்டு சங்கநாதஞ் செய்தான். குபேரனு டைய சேனைத் தலைவனான மணிமான் என்பவன் வீமனைக் கண்டு குபேரன் அறியாவண்ணம் 'உன்னைக் கொல்வே' னென்று வீமனுடன் போர் செய்தான். அவனுக் குத் துணையாக வீமனை வளைத்துக் ;கொள்ள எண்ணா யிரம் சேனாதிபதிகள் வந்தனர். வீமன் அனைவரையும் போரில் வென்று, பின் சாலேந்திரன் என்ற படைத்தலை வனை வளைத்துக் கொண்டான். மீண்டும் தாமரைப் பூவைக் கொடுத்தால் உங்களை உயிரோடு விடுவேனென வீமன் கூறினான்.

சாலேந்திரன் வீமனது வேண்டுகோளைக் கேட்டுச் சினங் கொண்டான். அரக்கரும் இயக்கருமாகச் சேர்ந்து வீமனுடன் கடும் போர் செய்தனர். அனைவரும் அழிந்துபட மணிமான் வீமனுடன் மாயப்போர் செய்தான்.

இது இவ்வாறிருக்க, தருமன் வீமனைக் காணாது மனம் வருந்தியவனாய் திரௌபதியை விசாரித்தான். திரௌபதி, தான் விரும்பிய மலர் கொண்டு வருவதறகாக வீமன் சென்றுள்ளானெனக் கூறினாள். தருமன் மிக வருந்தி உரோமேசர் காலில் வீழ்ந்து வணங்க உரோமேசர், 'வான் வழியே அளகாபுரிக்குச் செல்ல கடோற்கசளன நினைப்பா

யாக' என்று கூறினான். தருமனும் அவ்வாறே நினைத்தான். கடோற்கசன் தன் முன் தோன்றினான். அனைவரும் தேரேறினர். கடோற்கசன் விரைவில் அளகாபுரிக்கு அனைவரையும் அழைத்துச் சென்றான்.

வீமனிருக்கும் போர்க்களத்தையடைந்தனர். அவர்களைக் கண்ட வீமன் மலர் தூவி தருமனை வணங்கினான். வீமனைத் தருமன் சினந்து சில கூறினான். இந்நிகழ்ச்சி குபேரனுக்கு ஒரு தூதுவன் மூலம் எட்டியது. அவனும் சீற்றத்துடன் வீமனோடு போருக்கு வந்தான். குபேரனுடைய மகன் உருத்திரசேனன் என்பவன் பாண்டவர்களது வரலாற்றைக் கூறினான். இருப்பினும் குபேரன் வீமனுடன் கடும் போர் தொடுத்தான். தருமன் குபேரனது சினமடங்க அவனைத் துதித்தான்.

தருமனுடைய துதியினால் சினந்தணிந்த குபேரன், தருமபுத்திரனுடன் உரிமை பாராட்டித் தம்பியருடன் தன் நகருக்குத் திரும்பினான். அளகாபுரியையும், அங்குள்ள சிறப்புக்களையும், நவநிதிகளையும், கற்பகச் சோலைக் கொப்பான சோலைகளையும், நீர்நிலைகளையும் காட்டினான், தருமபுத்திரனும் மனமும், கண்களும் குளிர அவற்றைக் கண்டு களித்தான்.

குபேரன், தான் தேவலோகத்தில் தேவேந்திரனுடைய மாளிகையில் அர்ச்சுனனைக் கண்டதாகக் கூறினான் அர்ச்சுனன் இந்திரனால் உபசரிக்கப்பட்ட சிறப்புகளையும் தருமனிடத்தில் கூறி மகிழ்ந்தர்ன். ' அருச்சுனன் நாளை இந்திரனோடு இவ்வுலகிற்கும் பூலோகத்திற்கும் வருவார்கள். அருச்சுனனால் உங்கள் துன்பம் தீரும் உங்களுக்குப் புகழும் நல்வாழ்வும் அவனால் உண்டாகும்' எனக்கூறி வீமன் விரும்பிய மலர்களைக் கொடுத்தனுப்பினான்.

என் தம்பி இளமையாற் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுமென தருமபுத்திரன் குபேரனைக்கேட்டுக்

கொண்டு, அவ்விடத்தை விட்டகன்றான். அனைவரும் நந்தி சேன வனத்திற்கு வந்தனர், அருச்சுனனும் வானினிறுன் அங்கு வந்து சேர்ந்தான்.

சின்னாட்களுக்குப் பிறகு ஒருநாள் திரௌபதி அவ் வனத்திலுள்ள நெல்லி மரத்தில் சுவைமிக்க, பழுத்த கனி யொன்றைக் கண்டாள். அந்நெல்லிக்கனி, அவ்வனத்தில் வாழும் அமித்திர முனிவர்க்கென்றே யாவரும் பறிக்காமல் விட்டு வைந்திருந்தனர். இதனையறியாத திரௌபதி அருச் சுனனிடத்தில் அக்கனியைப் பறித்துத் தருமாறு கேட்டாள். உடனே அருச்சுனன் தன் அம்பால் அதைக் கீழே வீழ்த்தி திரௌபதி கையிற் கொடுத்தான்.அதைப்பார்த்துக் கொண் டிருந்தவர்கள், 'இதனை வீழ்த்தியவருக்கு என்ன ஆபத்து நேருமோ?' என வியந்து பேசினார்கள். அருச்சுனன் அக் கனியைத் தருமன் முன்னே வைத்து அவன் அறியாது செய்த தவறினைக் கூறினான்.

தருமன், 'காய், கனி, கிழங்குகளையுண்டு காட்டில் பிறர் துன்பமின்றி இன்பமாக வாழவும் முடியாதபடி ஏதே னும் துன்பம் வந்தபடியே உளது எனக்கூறி வருந்தினான். வீமன், 'அம்முனிவர் நம்மைச் சபிக்காமுன்பே அவரது சினந்தோன்றாதவாறு அவரை வேண்டிக் கொள்வோம்' என்றான். அருச்சுனன், 'அப்படியே அவர் சினந்து சாபமிட் டாலும் என்னைத்தானே சபிப்பார். நீங்கள் வருந்து வதேன்?' எனக் கேட்டான். "யார் வருந்ினாலும் யாருக்குச் சாபமிட்டாலும் நாம் அனைவரும் அதனால் துன்பப்படு வோம் என்பதையறியாமல் பேசிக் கொள்ளுகிறீர்களே" எனத் தருமன் கூறினான்.முடிவில் நகுலன்,'நமக்கு ஆபத்தில் உதவும் மூர்த்தி கிருஷ்ணனே யாகையால் அவனையே நினைப்போம்' எனக்கூற, தருமன் கிருஷ்ணனை நினைத் தான்.

உடனே அங்கு கிருஷ்ணன் தோன்றினான். அனை வரும் அவனைத் தொழுது தங்களுக்கேற்பட்டுள்ள இடர்ப் பாட்டினைக் கூறினார்கள்.

கிருஷ்ணன், ''நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மனத்தில் இதுநாள் வரை வெளிப்படுத்தாமல் வைத்திருக்கும் இரகசியத்தைக் கூறுங்கள்.பழம் முன் போல் அதுவிருந்த விடத்தில் போய் ஒட்டிக் கொள்ளும்'' என்று கூறினான்.

ஒவ்வொருவராகத் தங்களுடைய மனத்தில் உள்ள இரகசியத்தைக் கூறினார்கள். திரௌபதி தன் மனத்திருந்த மறைக் கருத்தினைக் கூறினாள். ''இறைவனே! ஐம்புலன்களைப் போல இன்பத்தைத் தரும் ஐவரை நான் கணவன்மார்களாகப் பெற்றிருக்கினும் ஆறாவதாக இன்னுமொரு கணவனைப் பெற வேண்டுமென என்னிதயம் வருந்தி ஆசை மிகுதியால் உருகியதுண்டு. ஐவரிருந்தும்' நான் விரும்புகின்ற போது இன்பம் துய்த்தற்கு ஆளில்லாமல் வருந்தியிருக்கிறேனே'' என்று திரௌபதி கூறினாள்.

ஐம்புலன்களும் போலைவரும் பதிகளாகவு
மின்னம்வே றொருவன்

எம்பெருங்கொழு நனாவதற் குருகுமிறை
வனேயெனது பேரிதயம்

அம்புவிதனிற் பெண்பிறந்தவ ரெவர்க்குமா
டவரிலாமை யினல்லால்

நம்புதற்குள ரேர்வென்றனள் வசிட்டநல்
லற மனைவி யேயனையாள்

பழம்பொருந்து சருக்கம் - 21

அறுவரும் உண்மையை யுரைத்ததால் கனி முறையாக மேலேறிக் கொம்பில் பொருந்தியது.

பன்னிரண்டாண்டுகளையும் வனத்தில் வாழ்ந்து கழித்த பாண்டவர்கள் பதின்மூன்றாம் ஆண்டு அஞ்ஞாத வாசத்தை மேற்கொள்ள மச்ச நாட்டைத் தேர்ந்தெடுத்தனர். திரௌபதையுடன் பாண்டவர்கள் அந்நாட்டின்

எல்லையை யடைந்தனர். மயானத்திருந்த காளி கோயிலின் அருகேயிருந்த ஒரு வன்னி மரத்தில் தங்கள் படைக் கலங் களை ஒளித்து வைத்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாற்றுருக் கொண்டு விராட மன்னரவைக்குச் சென்றனர். அவரவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒவ்வொரு பணி யில் அமர்ந்தனர்.

## பிருகந்நளை

அருச்சுனன் தனக்கு ஊர்வசி கொடுத்த சாபத்தை இப்போது நிறைவேற்றிக் கொள்ளுகின்றான் பேடியாகி பிருகந்நளை என்ற பெயரை வைத்துக் கொண்டு, அருச் சுனன் விராடனுடைய அரண்மனையை அடைகின்றான். பாண்டவர்கள் விராட நகரில் தான் மறைந்து வாழ்கின் றார்கள் என்று நினைத்த துரியோதனன் ஒற்றர்களை அங்கு அனுப்புகின்றான். ஆநிரைகளை யோட்டி வருமாறு செய்து போருக்கு வித்திடுகின்றான். விராட மன்னன் துரியோதன னுடன் போருக்குப் புறப்படுகின்றான். விராட மன்னனின் மகன் உத்தரன் 'யான் சென்று வருவே'னெனக்கூறிப் போருக்குப் புறப்படுகின்றான். தேர் செலுத்துவதில் பிருகந் நளை வல்லவளென்று விரத சாரணி கூற சுதேஷ்டிணை பேடியை நோக்கி,'நீ உத்தரனுக்குத் தேரோட்ட வேண்டும், என்று கேட்டுக் கொண்டாள். பிருகந்நளை தேரோட்ட உத்தரன் போருக்குச் சென்றான். நகரின் வட புறத்தே துரியோதனனுடைய சேனைகளைக் கண்டான். அச்சத்தி னால் மயங்கி மூர்ச்சித்து வீழ்ந்தான் உத்தரன். பிருகந்நளை உத்தரனைத் தேற்றிப் போருக்கு ஆயத்தமாகச் சொன் னாள். உத்தரன் தேறாது போருக்கு அஞ்சி ஓடிவிடப் பார்த்தான்.

பிருகந்நளை உத்தரனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து அச்சத்தைப் போக்கினாள். 'நான் பகை வெல்லு கிறேன்; அஞ்சாதே; எனக்கூறி போர்க்களஞ் சென்றாள்.

உத்திரன், தனக்கு பிருந்நளை என்ன உபசாரஞ் செய்து, தேறுதல் கூறியும் அச்சம் நீங்காதவனாய் தேரி னின்றுங் குதித்து ஓடினான். பிருகந்நளை உத்தரனைப் பிடித்துத் தேர்க்காலில் கட்டினான்.

காளி கோயிலினருகில் வன்னி மரத்தில் மறைத்து வைத்திருந்த தனது வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு போர் செய்யச் சென்றாள். அவளை உத்தரன் '' நீ இப்போது வன்னிமரத்திலிருந்து எடுத்து வந்த படை யாருடையவை ?'' எனக் கேட்டான். அதற்குப் பிருகந்நளை 'இவை அர்ச்சுனனுடையவை.' என்று பதில் கூறினாள். உத்தரன் ' அவ்வருச்சுனன் இப்போது எங்குறைகின்றான்? எனக்கேட்டான். 'உன்னுடைய சபா மண்டபத்திற்கு அன்றொரு நாள் கங்கபட்ட னென்ற முனிவர் வந்தாரல்லவா அன்றே இவ்வூருக்கு அருச்சுனனும் வந்தான். அவன் ஓர் விதியினால் பேடியாக மாறினான். இன்னும் நான்கு நாழிகை கழிந்தால் பாண்டவர்கள் மேற்கொண்டுள்ள அஞ்ஞாத வாசம் கழிகிறது. உடன் இங்கேயே அருச்சுனன் தோன்றுவான். நீ புறமுதுகு காட்டி ஓடாமல் போர் செய்வாயக!' எனக்கூறிக்கொண்டே உத்தரனது கட்டுக்களைபிருகந்நளை அவிழ்த்து விட்டாள்.

பிறகு, உத்தரன் இரதத்தினைச் செலுத்த தாமரை மலர் போன்ற கைகளையுடைய கரிய மேனியனான அருச்சுனன் வில்லேந்தினான்; பகைவர்களை எதிர்த்து நின்றான். அக்காட்சி, பொன்மயமான ஒரு குன்றின் மீது மரகத மலை விளங்கியது போல இருந்தது. அருச்சுனன் பேடிவடிவ மொழிந்து நிஜ ரூபத்துடன் வெளிப்பட்டான்.

படுங்குறும் பனிபுதைத்தலிற் பரிதிதன் னுருவம்
ஒடுங்குமா றெனஒளித்ததன் பேட்டுரு வொழித்து
நெடுங்கொடுங் கணைநிருபன் வெஞ்சேனையின் வேந்தர்
நடுங்குமாறு முன்றோன்றின னரனெனு நாமன்

நிரைமீட்சிச் சருக்கம் - 60

நிஜரூபத்துடன் போரில் அனைவரையும் வென்று உத்தரனுடன் திரும்பினான் பிருகந்நளையாக இருந்த அருச்சுனன் வழியில் ஆயுதங்களை முன்போலவே வன்னி

மரத்தில் வைத்து விட்டு, மீண்டும் பேடி வடிவத்தை தான் விரும்பிப் பெற்றுக் கொண்டு உத்தரனுடன் விராட நகரை யடைந்தான்.

போருக்குச் சென்ற தன் மகன் வாராதது கண்டு வருந்திய விராட மன்னனுக்குக் கங்கபட்டன் பிருகந்நளை தேரோட்டிச் சென்றதால் உத்தரன் வெற்றியுடன்வருவான் நீ அஞ்சாதே' எனத் தேறுதல் கூறினான். வெற்றிக்குரிய வனாக உத்தரன் வருவதற்குக் காரணம் பிருகந்நளையே என்று கங்கபட்டன் கூறியதை விராடன் ஏற்றுக் கொள்ள வில்லை. 'கோடிக்கணக்கான குருகுலத்தவரது சேனைகளை என்மகன் ஒருவனே தனித்து நின்று போர் புரிந்தான்' மிகுதியான பசுக்களையும் மீட்டு வந்தான். பேடியாகிய பிருக்ந்நளையை நீ போரிற் சிறந்தவனெனப் பாராட்டிப் பேசுகிறாயே!' என்றான் விராட மன்னன்.

கோடியின் கோடி யான
குருக்கள்வெஞ் சேனை தன்னை
ஓடியென் புதல்வன் றானே
யொருதனிப் பொருது வென்று
நீடிய நிரையு மீட்டு
மீண்டன னென்ன நீயப்
பேடியை விறல்கொண் டாடிப்
பேசுதி பிரம மூர்த்தி

நிரைமீட்சிச் சருக்கம் - 122

விராடனின் கூற்றை மறுத்தே மீண்டும் கங்கபட்டன் பேசினான். சூதாடிக் கொண்டிருந்த விராட மன்னன் தன் மகனது வீரத்தைப் பாராட்டாமல், கங்கபட்டன் பிருகந் நளையினுடைய வீரத்தைப் பாராட்டுகின்றானே எனச் சினங் கொண்டான். கையிலிருந்த சூதாட்டக் காய்களினால் ஓங்கி யடித்தான். அக்காய்களில் ஒன்று கங்கப்பட்டனது

நெற்றியிற்பட்டது.பட்ட இடத்திலிருந்து இரத்தம் கசிந்தது அதனைக் கண்ட விரதசாரணி கங்கப்பட்டனது நெற்றியில் வடிந்த இரத்தத்தைத் துடைத்தாள். விராடன் தன் செயலுக்காக மிக்க வருந்தினான்.

மாலையில் உத்தரன் வெற்றியோடு வந்தான். தன் மகனை விராடன் மார்புறத் தழுவி, எதிர்கொண்டழைத்து வந்தான். உத்தரன் அரண்மனையிற் புகுந்ததும் கங்கப்பட்டனது நெற்றியிலிருந்த வடுவினைக் கண்டான். காரணங் கேட்டறிந்த பின் உத்தரன் உள்ளம் மிக வருந்தினான். உத்தரனைக்கண்டு சுதேஷ்டிணை மகிழ்ந்தாள்.உத்தரனுக்கு வெற்றி தேடித் தந்த பிருகந்நளையும் சுதேஷ்டிணையின் பின் வந்து நின்றாள்.

போர்க்களத்தே நிகழ்ந்த செய்திகளை உத்தரன் தன் தந்தையிடம் ஒன்றும் ஒளிக்காமல் கூறினான். அவற்றைக் கேட்ட விராடன் மகிழ்ந்தான்.

அடுத்த நாள் பாண்டவர்கள் அனைவரும் திரௌபதியும் உண்மை வடிவத்தோடிருந்தனர். அருச்சுனன் தருமனுடைய நெற்றியில் வடுவொன்றினைக் கண்டு அதற்கான காரணத்தையும் கேட்டான். திரௌபதி நிகழ்ந்ததைக் கூறினாள். அருச்சுனனும் வீமனும் விராடன் மீது கோபங் கொண்டனர். உடன், தருமன்,

'ஒன்றுதவி செய்யினுமவ் உதவிமற வாமல்
பின்றையவர் செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர்'
நன்றி பல வாகவொரு நவைபுரிவ ரேனும்
கன்றிடுவ தன்றிமுது கயவர்நினை யாரே

வெளிப்பாட்டுச் சருக்கம் - 6

''பெரியவர்கள், ஒருவர் ஒருதவி செய்தாலும் அந்த உபகாரத்தை மறவாமல் அவர் பின் செய்யும் பல குறைகளையும் பொறுப்பர். கயவர்களோ ஒருவர் தமக்குப் பல நன்மைகளைச் செய்தாலும், ஒருகுறை செய்து விட்டால் அவர் செய்த நன்மைகளை மறந்து குறையை யெண்ணி அவரைக் கோபிப்பார்கள்'' என்று கூறி வீமனையும் அருச்சுனனையும் சினம் தவிர்க்குமாறு செய்தான்,

பாண்டவர்களின் வெளிப்பாட்டையறிந்த விராடன் தன் மைந்தனோடும், திறைப் பொருளோடும் பாண்டவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்றான். தருமன் விராடனைத் தழுவினான். விராடன், தன்னிடத்து வாழ்ந்த போது நேர்ந்திருந்த குறைகளைப் பொறுக்குமாறு வேண்டினான். தான் தம்பிமார்களுடனும் திரௌபதியுடனும் இனிதே வாழ்ந்ததாக விராடனிடம் தருமன் கூறினான். 'உன்னுடைய புத்திரரும், வலிமையுடைய சேனையும் என்னுடைய தோளென இனி நேரப் போகும் போரில் எனக்குத் துணையாக நின்றால் வஞ்சனைமிக்க துரியோதனனையும், அவனோடு சேர்ந்த பகையரசர்களையும் நான் மேலுலகத்திற்கனுப்பி வெற்றி பெறுவது உறுதி! என்றான்.

தருமனுடைய சொற்களைக் கேட்ட உத்தரன், 'எல்லா உலகிற்கும் நிழல் செய்கின்ற வெண்கொற்றக்குடைய ஒத்தவேன! என் தந்தை போன்றவனே! இம்மச்ச தேசமும், நாங்களும் எங்களுடைய அறுவகைப்படையும் உன்னுடையதே' என்றான்.

## உத்தரை

விராட மன்னனுடைய மகள் உத்தரை என்பவள். அவளுக்குத் தோழியாகப் பிருகந்நளையை இருக்கச்செய்கின்றான் உத்தரையின் தந்தையாகிய விராட மன்னன். பேடி வடிவில் பிருகந்நளை என்ற பெயரோடு இருந்த அருச்சுனன்

உத்தரனுக்குத் தேரோட்டியாகவும் இருந்தான். உத்தரன் மேற்கொண்ட போரில் அருச்சுனன், உத்தரனுக்கு ரதசாரதியாக விருந்து வெற்றி பெற உதவி செய்தான். தனது தந்தையினுடைய அரண்மனையில் வேற்றுருக் கொண்டு பணி புரிய வந்தவர்கள் பாண்டவர்கள் என்பதை விராட மன்னனும், அவனது குமாரன் உத்தரனும் தெரிந்து கொண்டார்கள். உத்தரன், தனது தங்கை உத்தரையை அருச்சுனனுக்குக்கே மணமுடித்துத் தருவதாகக் கூறினான், அது கேட்ட அருச்சுனன் உத்தரை எனது குமாரன் அபிமனுக்கே உரியவள் எனக் கூறினான். அவ்வாறே உத்தரை அபிமனுக்கே மனைவியாகின்றாள்.

ஓமஞ்செய் தீயிற் பொரிசிந்தலி னுற்ற வாசத்
தூமங் கமழப் பலவாசத் தொடையல் சூட்டிக்
காமன் றிருமைத்துனற் கன்பொடக் கன்னி தன்னை
மாமன் றலங்கே புரிவித்தனன் மச்சர் கோமான்

வெளிப்பாட்டுச் சருக்கம் - *28*

## சுதேஷ்ணை

சுதேஷ்ணை என்பவள் விராட மன்னனுடைய பட்டத்தரசி. இவளுக்கு உத்தரன் என்ற மகனும், உத்தரை என்ற மகளும் இருந்தார்கள். உத்தரை என்பாளை அருச்சுனனுடைய மகன் அபிமனுக்குத் திருமணம் செய்து கொடுத்தாள்' சுதேஷ்ணைக்கு கீசகன் என்ற தம்பியொருவன் இருந்தான். சுதேஷ்ணைக்குத் தோழியாகவும், அவளை ஒப்பனை செய்யும் வண்ணமகளாகவும் விரதசாரணி என்பவளை மன்னன் ஏற்பாடு செய்திருந்தான்.

## விரதசாரணி

அஞ்ஞாத வாசத்தை மேற்கொண்ட பாண்டவர்கள் திரௌபதியுடன் விராட நகரை அடைந்தனர். ஒவ்வொருவரும்,ஒவ்வொரு பெயரைப் புனைந்து கொண்டு ஒவ்வொரு

தொழிலை மன்னனவையில் பெற்றுக் கொண்டனர். திரௌபதி, விரதசாரணி என்ற பெயரைப் பூண்டு மகளிர் ஒப்பனைக்கலையில் வல்லவள் என்று தன்னை விராடனிடத்தில் அறிமுகப்படுத்திக் கொண்டாள். விராட மன்னன் விரதசாரணியைத் தன் மனைவி சுதேஷ்ணைக்குத் துணையாகவும், அவளை ஒப்பனை செய்யும் வண்ண மகளாகவும் தன் அரண்மனையில் இருக்கச் செய்தான்.

ஒருநாள் சுதேஷ்ணையைக் காண அவளது தம்பி கீசகன் என்பவன் அரண்மனையின் அந்தப் புரத்திற்கு வந்தான். தன் தமக்கையைக் கண்டு பேசித் திரும்பும் போது அங்குப் பூக்கொய்து கொண்டு வந்த விரத சாரணியைக் கண்டான். அவளிடத்துக் காதல் கொண்டான்.

கீசகன் அவளது அழகில் ஈடுபட்டவனாய் அருகிருந்தோரைக் கேட்டு, விரதசாரணி யாரென்பதைத் தெரிந்து கொண்டான். விரதசாரணியின் திருவடிகளில் வீழ்ந்து தன் காதலை அவளிடம் வெளிப்படுத்திக் கொண்டான். விரதசாரணி, 'பிறனில்லாளை விரும்புவது பாவமும் பழியும் சேர இடமாகு' மென்று வற்புறுத்திக் கூறி கீசகனைத் தெளிவு படுத்தினாள். அவள் என்ன கூறியும் அவன் திருந்தினானில்லை விரதசாரணி கூறக் கேட்ட சுதேஷ்ணை கீசகனை நோக்கி, 'இனி நீ இத்தீய எண்ணத்துடன் என் அரண்மனைக்கு வாராதே; போ! என விரட்டினாள். கீசகன் வண்ணமகளை நினைந்து படும் வேதனைகளை சுதேஷ்ணையின் சேடியர் சுதேஷ்ணையிடம் கூறினார்கள். விரதசாரணியன்றி கீசகன் உயிர் வாழான் என்பதை அறிந்த சுதேஷ்ணை விரதசாரணியை யடைந்தாள். 'நின் கற்புக் குலையாமல் கீசகனுடைய ஆவியை நீ காத்தருள வேண்டும்' என வேண்டினாள். 'இந்த மாலையை அவனிடம் கொடுத்து மீள்வாயாக' என்று வேண்டினாள்.

விரதசாரணி, அரசி கூறிய சொற்களைக் கண்டித்தாள்; வெறுத்தாள். முடிவாக, வேறு வழியில்லாமல்

அவளது சொற்படி மலர் மாலையைக் கீசகனிடத்துக் கொண்டு சென்றாள். விரதசாரணியைக் கண்டதும் கீசகன் தகாத வார்த்தைகளைக் கூறினான். அவற்றைக் கேட்டுக் கொள்ளுவதற்குச் சகியாத விரதசாரணி சூரியனைத் தியானம் செய்து தன்னிடரைப் போக்குமாறு வேண்டினாள். மலர் மாலையைக் கொடுத்து விட்டுத்தன்னருகில் நின்ற விரதசாரணியைக் கீசகன் கண்ணுற்றான். 'என்னுடைய மாதவப்பயனால் இங்கு வந்தாள்; என்னுடைய வழிபடுந் தெய்வம் இங்கு வந்தது. எனதுயிர் நிலைபெற வண்ண மங்கை இங்கு வந்தனள்; என்றெல்லாம் கீசகன் கூறிக் கொண்டு அவளைப் பற்றச் சென்றான். விரதசாரணி அவ்விடத்தை விட்டோடினாள்.கீசகனும் அவளைப் பின் தொடர்ந் தோடினான்.

விரதசாரணி அரண்மனை யெல்லாம் ஓடி, அரசர் காண, கீழே வீழ்ந்தாள். கீசகன் அதுவே தருணமெனக் கருத அவளைத் தனது இருகைகளினாலும் தொட்டு வாரி யெடுத்துக் கொள்ளச் சென்றான். அப்போது சூரியனுடைய ஏவலால் ஒரு கிங்கரன் விரைவாக வந்து அவளைத் தீண்டா தவாறு கீசகனை அப்பால் வீசித்தள்ளினான்.

விராட மன்னன் கீசகனது செயல்களைக் கண்டும் அறியாதானைப் போல அச்சத்தினால் வாளாவிருந்தான். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பலாயனன் கீசகனை யழிக்க ஒரு மரத்தைப் பிடுங்க ஓடினான்.அதனைக் கண்ட கங்க முனிவர் வேண்டாமெனக் குறிப்பால் உணர்த்த பலாயனன் வாளா விருந்தான்.

விரதசாரணி விராடன் முன்னிலையில் அழுது கொண்டு, ''என்னைத் தீண்டுதல் தகாதெனக் கூறியும், நற்புத்திச் சிறிதுமின்றி கீசகன் என்னை விரும்புவது சரிதானா? மன்னனாகிய நீ கீசகனைக் கண்டிக்க வேண்டும். இல்லையேல், அவன் செய்வது சரியென்றாலும் கூற வேண்டும். இவ்விரண்டில் ஒன்றுஞ் செய்யாது இருப்பது முறையோ?

அதிக வலிமை பெற்றிருப்பதினாலும், உன்மனைக்குத் தோழியாய் இருப்பதினாலும் அவன் என்னைத் தழுவ முற்படுகின்றான்'' என்று கூறினாள்.

சுதேஷ்ணையிடமும் தன் அவல நிலையினைக் கூறி விரதசாரணி வருந்தினாள். சுதேஷ்ணை நல்லறிவினைக் கீசகனுக்குக் கூறுவதாக விரதசாரணியிடம் சொன்னாள். விரதசாரணிநள்ளிரவில்பலாயனனிடத்தில்சென்றுகீசகனால் உண்டான துன்பத்தையும், பகையையும் முடிக்குமாறு வேண்டிக் கொண்டாள். 'கீசகனை அப்போதே ஒழித்திருப் பேன். தருமபுத்திரன் தடுத்தார். அன்று துரியோதனன் அரச சபையில் துச்சாதனனைக் கொண்டு உன்னைத் துயிலி ரியச் செய்த போதே என்பராக்கிரமத்தை வெளியில் காட்டிக் கொள்ள முடியாதபடி தருமபுத்திரன் தடுத்தார். இன்று கீசகன் உடலை இரண்டாகப் பிளந்தெறிவேன்.'' என்றான்.

'கங்கன்என்ற பெயரோடிருந்த முனிவர்தான் தரும புத்திரன் என்பதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருப் பதற்காகவே அவ்வாறுன்னைத் தடுத்தார் மரத்தைப் பிடுங்கி வந்து கீசகனைஅன்று நீ தாக்கியிருப்பின்,பலாயனன் என்பது வீமன்தான் என்பது வெளிப்படுமென அஞ்சித்தான் தருமன் தடுத்தர்''ரென திரௌபதி கூறினாள்.

வீமன் கீசகனை இரண்டொரு நாள்களில் கொன்று விடலாமெனக் கூறினான். இரவில் அவனை ஓரிடத்திற்கு வரவழைத்துக் கொன்று விட்டு, யாரோ கந்தர்வர்கள் கொன்று விட்டார்கள் எனப்பிறர் நம்பும்படி செய்து விட லாம் என முடிவு செய்தான்.

அதற்கு, இனி நிகழ வேண்டிய காரியங்களை எவ் வாறு மேற்கொள்ள வேண்டுமென்பதை திரௌபதியிடங் கூறி,அவ்விரவினைக்கழித்தனர். அடுத்த நாளிரவு சுதஷ்ணை யின் அரண்மனையில், விரதசாரணி தனது படுக்கையறை

யில் புழுதி படிந்த விரிந்த கூந்தலுடனும், கண்ணீரால் நனைந்த கொங்கைகளைத் தாங்கிக் கொண்டும், மென் கொடி போல கீசகன் அங்கு வரும் போது காட்சியளித்தாள். விரதசாரணியை அந்த நிலையிற்கண்ட கீசகன் விஞ்சிய காதலுணர்வோடு அவளிடம் சென்றான். 'இந்த விராட புரத்திலே எனக்கிணையான வீரமுடையவர்கள்யாருமில்லை மன்னவனுடைய வாழ்வும் இந்த வளநாடும் என்னால்தான் பாதுகாக்கப்படுகிறது. அன்று நீ முறையிட்டுக் கொண்ட போது விராடன் என்னை ஏதும் கேளாததிலிருந்து இதனை நீ நம்புதல் வேண்டும். ஆகவே என்னையேற்றுக் கொள்ளு வாயாக'' எனக் கை கூப்பி அவளைத் தொழுதான்.

திரௌபதி, 'உனது உரைகளைப் பொருட்டாகக் கொள்ளாமல் நான் தவறு செய்தேன். என்னைக் காக்க எவருமில்லை. கடந்தவற்றை மனதில் வைத்துக் கொள்ளாமல்,'ஆரிருட் பொழுதில் இன்று சந்தணிக் குவவுத் தோளாய் தனித்து நீ வருதி' என்றாள்.

அவளது பேச்சினைக் கேட்டு மகிழ்ந்த கீசகனுக்கு ஒரு குறியிடமும் கூறினாள்.

குருட்டியின் மதியினானைக் கோதிலா வறிவின் மிக்காள்
மருட்டின ளாகியந்த வளர்தடம் பொழிலினோர் சார்
இருட்டிடை நிலவு காட்டுமின்ப மண்டபத்தில் வம்மின்
உருட்டடந் தேரோ யென்றா ளவனுமஃதொருப்பட் டானே

கீசகன் வதைச் சருக்கம் - 60

கீசகனிடம் குறியிடங் கூறி, அவன் வருவதாக அவனிடம் உறுதியும் பெற்றுக் கொண்ட திரௌபதி வீமனிடம் நடந்தவற்றைக் கூறினாள். அன்று பகற்பொழுது நீங்கியதும் எங்கும் இருள் சூழ்ந்த நள்ளிரவில் கீசகன் குறியிடஞ் சேர்ந்தான். அவ்விடத்தில் வீமன் முன் கூட்டியே பெண் கோலந் தரித்துக் கீசகனை எதிர்பார்த்திருந்தான். திரௌப

தியை ஒரு புறத்தே மறைத்து வைத்து விட்டு கீசகனருகில் வீமன் சென்றான். அப்பொழிலின் ஒரு புறத்தே யிருந்த மாளிகையில் தூணின் புறத்தே பெண் கோலத்துடன் வீமன் நின்றிருந்தான். கீசகன் அன்பால் சில வார்த்தைகளைக் கூறி அவளது காலில் வீழ்ந்து வேண்டினான்.

வழிபடு தெய்வமு மற்றும் முற்று நீ
இழிபடு பிறர்முக மென்று நோக்கலென்
கழிபட ருற்றதென் காம நோயெனா
மொழிபல கூறினான் முகம்பு குந்துளான்

கீசகன் வதைச் சருச்கம் - 70

தன்முன் தூணத்தில் ஒதுங்கியிருப்பது, மாறு வேடத்துடனிருக்கும் வீமன் என்பது கீசகனுக்குத் தெரியாது.விரத சாரணி என்று நம்பி அவளிடம் இவ்வாறெல்லாம் பேசிக் கொண்டே அவளருகில் சென்றான். பெண் வேடத்திலிருந்த வீமன் கீசகனை இருகைகளினாலும் தழுவினான். தான் நினைத்ததைச் செய்ய வீமன் தொடங்கினான், கீசகன் நம் மைத் தழுவ வந்தது விரதசாரணி அல்லவென்பதையும், பெண் வடிவில் உள்ள ஓராடவனே என்பதையும் உணர்ந்தான்.

இருவருக்கும் போர் தொடங்கியது. நெடுநேரத்திற்குப் பிறகு வீமன் கீசகனது ஆவியைப் போக்கினான்.

மன்னவன் மைத்துனன் மர்பொ டிந்திடச்
சென்னியுந் தாள்களுஞ் சேர வொன்றிடத்
தன்னிரு செங்கையாற் றாக்கி வான்றசை
துனிய மலையெனச் சுருக்கி னானரோ

கீசகன் வதைச் சருக்கம் - 81

கீசகனுடலைக் கால்தலை தெரியாதமடி சிதைத்துப் பின்பு திரெளபதியை அழைத்து வந்தான். அவளது பாதத்தில் அச்சதைப் பிண்டத்தை வைத்தான், அருகிலிருந்த ஒரு

மரத்தைப் பிடுங்கி கைகளாற் பிசைந்து தீ யெழச்செய்தான் அத்தீயொளியில் கீசகனுடலைத் திரௌபதிக்குக் காட்டி னான். உன்னைக் காதலிப்போருக்கு இக்கதிதான் நேரு மெனச்சொல்லித் திரௌபதியைஅனுப்பி விட்டுத் தானுமவ் விடத்தை விட்ட கன்றான்.

வாசமென் குழன் மாதுநல் லாயுனை
ஆசை கொண்டவ ரிப்படி யாவர் காண்
ஏசின் மங்கை நல் லாயினி யேகெனு
மாசி லானு மடைப்பளி யெய்தினான்

கீசகன் வதைச் சருக்கம் - 87

கீசகன் மாண்டனன் என்ற செய்தியை அவனது தம்பி மார் சுதேஷ்ணையிடம் கூறினர். பெரும் பாதகத்தைச் செய்ய விரும்பிய அவனுடலைப் பிறர் அறியா வண்ணம் தீ யிலிட்டு எரிப்போம் எனக் கூறினர். உபகீசகர் தனது அண்ண னுடைய மரணத்திற்குக் காரணமாக இருந்தவள் வண்ண மகள் விரதசாரணியே ஆகவே அவளையும் ஈமவெரியில் வைத்து எரிப்போம் என விரதசாரணியைப் பற்றினர். விரதசாரணி தன்னைக் காக்குமாறு தன் மெய்காக்கும் கடவுளரை எண்ணி அரற்றினாள். அரற்றொலி கேட்டு, பெரும் போர் புரிய வீமன் அங்கு வந்தான். வீமன் மரங்க ளைப் பிடுங்கி உபகீசகர்களைத் துரத்தியடித்தான். முடிவில் அவர்களைக் கொன்று முடித்தனன். வீமனும், திரௌபதி யும் அவரவர்களிருப்பிடம் சென்றனர். விடிந்ததும் இரவில் நடந்த போர் எங்கும் பிரசித்தமாயிற்று.

விராட மன்னனும் தன் மைத்துனன்மார்கள் கந்தரு வர்களால் இறந்து பட்டனர் எனக் கேட்டு வருந்தினான்.

பாண்டவர்களும், துரியோதனனுடன் போர் தொடுப்பதன்றி தாங்கள் இழந்த நாடு நகரங்களைத் திரும் பப் பெற வேறு வழியில்லை என்பதை அறிந்து அதற்கான முடிவினை மேற்கொள்ள கண்ணனை உபாயங் கேட்டனர். கண்ணனும் ஒவ்வொருவராகத் தனித்தனியே பாண்டவர்

களை அபிப்பிராயங் கூறக் கேட்டான். முடிவில் சகாதேவன் திரௌபதியை நோக்கிக் கண்ணனிடம் தன் கருத்தினைச் சொன்னான். 'இவள் தன் கூந்தலை முடிவதற்கான சமா தானத்தையே துரியோதனனிடம் உண்டு பண்ணுவாயாக' என்றான். அவ்வாறே செய்து வருவதாகக் கண்ணன் கூறி னான். அதைக் கேட்டு வருந்திய திரௌபதி கண்ணனு டைய திருவடிகளில் வீழ்ந்து புலம்பினாள்.

''இரணியன், தன் மகன் பிரகலாதனைக் கோபித்த போது அவன் அறைந்த தூணிலிருந்து வெளியே வந்தாய். ஆதிமூலமே! என அழைத்த கஜேந்திரன் முன் நீலகிரி போல முன்வந்த நெடுமாலே!

என்னுடைய கற்றைக் குழல் பிடித்துக் கண்ணில்லாத வன் பெற்றெடுத்த துச்சாதனன் என்னைப் பற்றி துகில் உரிய, பாண்டவர்கள் பார்த்திருந்தனர். கொற்றத் தனித் திகிரி கோவித்தா! நீயன்றி அற்றைக்கு என் மானம் காத்த வர் யார்? நீயல்லவா?

மன்றில் அழைத்து மாசு கற்பித்த துரியோதனன் பால் நீ தூது சென்று ஐந்தூர் பெற பாண்டவர்கள் விரும்பி னால், அன்று விரித்த கூந்தலை நான் என்று முடிப்பதினி? என் பெருமானே!''

தன் பாதங்களைப் பிடித்துப் புலம்பி எழுந்த திரௌ பதியிடம், 'பாண்டவர்களுக்காகத் தூது போய் வந்ததற் குப்பின், நல்லாய்! உன்து பைங்கூந்தலை நானே முடிக்கின் றேன். எல்லாருங் காண, அளவிலடங்காத அப்புல்லர் தம் அந்தப்புர மகளிரின் கூந்தலே இனி விரிந்து கிடப்பன' என்று கண்ணன் கூறினான்.

''மைக்குழலாய்!கேள்.உனது மகன் அபிமன் பகைவர் கூட்டத்தையும், உன் கூந்தலையும் ஒரு சேர முடிப்பான்.'' என்று கண்ணன் மீண்டும் திரௌபதிக்கு உறுதி கூறினான்.

## பிற்சேர்க்கை

ஓரிடத்திற்குச் செல்லும்போது அவ்விடத்தின் வரலாறு தெரிந்திருக்க வேண்டும். தெரிய இயலாதெனின் பிறர் வாயிலாக வேனும் இடவிசேடங்களைக்கேட்டு அறிந்து செல்லுவதே சிறப்பு. 'துறை கண்டு கால் விட வேண்டும்,' என்ற பழமொழி மேற்கூறிய கூற்றினை வலியுறுத்தும் மனுவின் புதல்வன் இளன் என்பவன் பார்வதி தேவியால் 'இங்கு வருவோர் பெண்ணாகி விடுவர்' எனச் சபிக்கப்பட்ட இடத்திற்குச் சென்றான். அவனுக்கு அச் சாப வரலாறு தெரியாது. ஆகவே இளன் 'இளை' என்ற பெண்ணாக மாறினான் ஆண் மகனுக்கே இக்கதி என்றால் பெண்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் முன் பின் அறிமுகமில்லாத புதிய இடத்திற்குத் துணையின்றிச் செல்லுதலை அறவே தவிர்த்தல் வேண்டும்.

உருப்பசி என்பவள் தவத்திலிருந்து நாராயண மூர்த்தியால் படைக்கப்பட்டவள். நாராயணமூர்த்தியின் தவத்தை அழிக்க வந்த மேனகை, திலோத்தமை, ரம்பை போன்ற பெண்களைத் தன்னழகால் தோற்றோடச் செய்தவள் உருப்பசி. அழகுமிக்க பெண்கள் தாங்கள் மட்டுமே பிரம்ம தேவனால் அழகுடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளோம் என நினைந்து இறுமாப்படைதல் கூடாது. அவ்வாறு அழகுடையவர்களைப் புறக்கணித்து ஒதுக்கி விடாமல் நம்மோடு .அவர்களைச் சேர்த்துக்கொள்ளுத மிக்க பயனை விளைவிப்பதாகும். ஊருவி என்றால் தொடை என்று பொருள். நாராயண முனிவரின் தொடையில் பிறந்தவளானதால் ஊர்வசியானாள் இவளே நெற்றி அல்லது நாராயண முனிவரின் கண்ணின் வழியாகப் பிறந்திருந்தால் எத்தனை அழகு இன்னும் மிக்கவளாக விளங்கியிருப்பாள்?

சில பெண்கள் மற்ற பெண்களைப்பார்த்து,'அவ்வளவு அழகுடையவர்களாக நம்மை இறைவன் படைக்கவில்

லையே' என மன வேதனையடைவார்கள். அது வேண்டா ததொரு சஞ்சலம்.அவரவர்களுக்கிடைத்த அழகே அவரவர் கள் பெறத்தகுந்ததாகும். மிக்க அழகு வாழ்வில் மிக்க துன்பத்தைத் தரும். ஊர்வசி அழகாக இருந்ததால் அவளை ஓர் அரக்கன் தூக்கிச் சென்றான். இவள் சாப விமோச னத்திற்குப் பின் இந்திரனுடன் தேவலோகத்தில் வாழ் கின்றான். வாழும் பொழுது ஒரு நாள் அர்ச்சுனனைத் தனித்தனியே சந்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது. அவனைத் தன் காம விச்சயினைப் பூர்த்தி செய்து கொள்ள ஒரு நாள் மணாளனாகப் பெற ஆசைப்படுகிறாள். அவன் முறை கூறி இசையா தொழியவே அவனைப் பேடியாக ஆகும்படி சபிக்கிறாள். அச்சாபம் அவனுக்குப் பின்னாளில் நலம் விளைவிக்கின்றது. இவளது வரலாற்றால் நாம் பெற வேண்டிய நற்பண்புகள் ;- 'வல்லவனுக்கு வல்லவன் இவ்வுலகில் உண்டு' என்ற மூதுரைக்கு ஏற்ப அழகுள்ள ஒருவரைக்காட்டிலும் மிக்க அழகுள்ளவர்களை யும் உலகம் பெற்றுள்ளது. அழகுள்ளவர்கள் ' தாங்களே மிக்க அழகுடையவர்கள் ' என கருவம் கொள்ளுதல் கூடாது. அழகுடையவர்களுக்கு வாழ்வில் ஆபத்துக்கள் காத்திருக்கும்.காரைக்கால் அம்மையார் தான் கணவனோடு சேர்ந்து வாழ இயலாத நிலையினை உணர்ந்தபின் இறைவனை வேண்டிப் பேய் வடிவினைப்பெற்றாள். என்பதனை நினைவு கூர்க.

தேவயாநி என்வபவள் சுக்கிராச்சாரியாரின் புதல்வி சுக்கிராச்சாரியார் அசுரர்களின் குரு. தன் குல குருவின் புதல்வியான தேவயாநிக்கு விடபன்மன் என்ற அசுரன் தன் புதல்வி சன்மிட்டையைத் தோழியாக்கினான் அசுரர் களின் குருவின் மகள் நான் ' என்ற கருவத்தால் சன் மிட்டையை தேவயாநி எளிமையாக நினைத்தாள். ஏற்றத் தாழ்வினடிப்படையில் உணர்ச்சிவயப்பட்ட சன்மிட்டை ஏதும் செய்ய இயலாதவளாய்தேவயாநியைப் பாழுங்கிணற் றில் தள்ளினாள், யயாதியால் காப்பாற்றப்பட்ட தேவயாநி

சன்மிட்டையை யாரும் மணக்க முன் வராதபடி சாபமிடு கிறாள். குரு, குருவினுடைய மகள் ஆகிய இருவராலும் தனக்குக் கேடு நேராதபடியிருக்க சன்மிட்டையை அவளு டைய தந்தை தேவயாநிக்கு அடிமையாக்கி விடுகின்றான். தேவயாநி இட்ட சாபத்தால் தேவயாநி, தன் கணவனைத் தானும் அறியா வண்ணம் சன்மிட்டை கூடி இன்பம் துய்க்க நேருகிறது. பின் தானும் தன் கணவனுடைய சுகத்தை இழக்கிறாள். இவ் விரு பெண்களுடைய வரலாறுகள் நமக்குக் கற்றுக் கொடுக்கும் நீதிகள் பலவாம்.

தனது தந்தை உயர்குலத்தில் பிறந்தவன்; அல்லது அதிகார பலமுடையவன் என்ற எண்ணம் பெண்களுக்குத் தோன்றுதல் கூடாது. அவ்வெண்ணம் தன்னை யொத்த மற்ற பெண்களை இழிவாகக் கருதத் துணை செய்யும். தன் பெற்றோர்களுக்குள்ள ஆற்றலைத் தெரிந்து கொள்ளாது பிறரை நோக்கி வஞ்சினம் கூறுதல் கூடாது. அதிகார பலத் தால் பிறரை நசுக்க நினைக்கும் போது அத்துன்பத்திற்குத் தானும் பலியாதல் கூடும் என்பதனைஒவ்வொரு பெண்ணும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தனக்குஎத்துணைத் துன்பங்கள் நேர்ந்தாலும் கணவனைத் துறந்து பிறந்தகத் தையடைதல் பெண்களுக்குச் சிறப்புத் தருவதொன்றன்று.

கங்கை சத்திய லோகத்தில் பிரமனது சபைக்குச் சென்ற போது மென் காற்றால் தன் ஆடை விலக, உடலு றுப்புகளை வருணன் கண்டு மகிழ்ந்தான். அதற்குத் துணை செய்த வாயு பகவானை வெகுவாகப் பாராட்டினான். பிரமனது சாபத்தால் கங்கை பூவுலகில் ஒரு பிறவி எடுத் தாள். வருணன் சந்தனுவாகப் பிறந்தான். கங்கை, வசிட்ட னுடைய சாபத்தை ஏற்ற வசுக்கள் எழுவரையும் தன் வயிற் றில் குழந்தைகளாக ஏற்று அவர்களது சாப விமோசனத் திற்குத் துணை நின்றாள். பிரபாசன் என்ற வசு கங்கை வயிற்றில் தேவ விரதனாகப் பிறந்தான். கங்கையின் வர லாறு நமக்குக் கற்பிக்கும் நீதிகள்;-

ஆடவரிடையே அல்லது ஆடவர்கள் கூடிய சபையி டையே செல்லும் போது பெண்கள் தாங்கள் உடுத்தியுள்ள ஆடைகளைப் பற்றிய நினைவோடு செல்லுதல் வேண்டும். ஆடைகளை நெகிழ விடாது, மறைக்கப்பட்ட உறுப்புக் களிலிருந்து விலகாது பார்த்துக் கொள்ள வேண்டும், நாம் அதனைப் பொருட்படுத்தா திருந்தாலும், அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பினை எதிர் நோக்கிய ஆடவர்களும் அக்கூட்டத் தில் இருக்கலாம். கவனக் குறைவால் பெருந்துன்பம் விளையக் கூடும். பெண்கள் தங்களுக்கேற்படும் துன்பங் களுக்குள்ளும் பிறருக்கு நன்மை விளைவதானால் உதவமுன் வருதல் வேண்டும். இதுபாரதப் பெண்களின் பண்பாடாகும்.

மச்சகந்தி: இவள் ஒரு சாபத்தின் காரணமாக யமுனை நதியில் திரிந்து கொண்டிருந்த மீன் வயிற்றில் பிறந்தவள். இவள் மீது வீசிக்கொண்டிருந்த புலால் நாற் றத்தைப் பராசரன் என்ற முனிவன் போக்கினான். புலால் நாற்றத்திற்கு மாறாக யோசனை தூரம்நறுமணம் வீச, மச்ச கந்தியை பரிமள கந்தியாக மாற்றினான். அவ்வாறு அவளை மாற்றியதற்குக் காரணம் அம்முனிவன் புத்திரப் பேறு பெற விரும்பினான். உடனே தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள கிடைத்த மங்கை மச்சகந்தி. இவ்விருவருக்கும் பிறந்தவனே வியாசனென்பவன். மச்சகந்தி பின் பரிமள கந்தியாகவும், அப்பரிமளம் ஒரு யோசனை தூரம் வீசிப்பரவு வதால் யோஜன்கந்தியாகவும் பெயர்பெற்றாள். அவளையே சந்தனுமகாராஜன் இரண்டாவது மனையாக மணமுடித்துக் கொண்டான். முதல் மனைவி கங்கையின் மைந்தன் தேவ விரதன் இவர்களது திருமணத்தை முடித்து வைக்கின்றான். யோஜனகந்தி தன் வயிற்றுப் பிள்ளைகளுக்கே இராஜ்ஜியத் தைத் தரல் வேண்டும் என்பதற்காகப் பல உறுதி மொழி களைத் தேவ விரதன் தரப்பெறுகிறாள். தன் மக்கள் இரு வரும் இறந்த பின் தன் மருமகளிருவரிடத்தும் மக்கட் பேற்றினை உண்டாக்கும்படி தேவவிரதனை வேண்டினாள்.

அவன் உடன்படாததறிந்து தேவர்களாலும், முனிவர்க ளாலும் அப்பேற்றினைப் பெற விருப்பம் தெரிவித்தாள். தேவவிரதன் தயங்கிய போது, தான் பராசரனைக் கூடி வியாசனைப் பெற்ற நிகழ்ச்சியினைக் கூறி தேவவிரதனை தன் விருப்பத்திற்கு இசைந்து. அவ்விருப்பத்தினை நிறை வேற்றித்தர துணைபுரியும்படி வேண்டினாள். இந்நிகழ்ச்சி கள் உணர்த்தும் நீதிகளாகக் காணப்படுவன:

பெண்கள், தங்களை விரும்பும் ஆடவர்களின் விருப் பத்திற்கு இணங்கினால் வேண்டியதைப் பெறலாம். தங்கள் பாலுள்ள, தங்களுக்கே உரியதான தீ நாற்றத்தையும் போக்கிக் கொள்ளலாம் மச்சகந்தியின் வரலாற்றால் க்ஷத் திரிய மகளிர் - அதாவது இராச குடும்பத்தில் பிறந்த பெண் கள் காமவிச்சையினாலன்றி குலவிருத்திக்காக முனிவரையே தேவர்களையோ கூடுதல் சாஸ்திர சம்மதமாத லால் கற்புக்கு இழுக்காகாது என்பதாம். பாரதம் நடந்த யுகத்திற்கு அது பொருந்துவதாகவும், ஏற்சுடையதாகவும் விளங்கிய கொள்கையாகும். சங்ககாலம் புலாண்ணுதலை யும், பரத்தையர் பிரிவையும் கடிந்ததாகத்தோன்றவில்லை. ஆடவர்களுக்கு வீரத்தையும், ஏற்றத்தையும் அவை கூட்டுவ காகக் காண்கின்றோம். ஆனால் சங்க இலக்கியங்களுக்குப் பின் தோன்றிய குறளும், மேகலையும் அப்பண்புகளைக் கடிந்து தீயதெனை ஒதுக்கிச் சாடுதலையும் நாம் காண்கின் கிறாம். ஆகவே சமுதாயத்தில் இடம்பெற்றிருந்த சிலபழக்க வழக்கங்கள் காலத்திற்குக் காலம் மாறுபடும் இயல்பினை யுடையவை. அவற்றை எல்லாக் கா்லத்திற்கும் ஏற்றவை கள் என்று கொள்ளுதலும் கூடாது. அவற்றின் அடிப்படை யான தத்துவத்தில் முகிழ்த்தோங்கும் நீதிகள் எக்காலத் திற்கும் பொருந்துவன என்பதை மறந்து விடவும் கூடாது.

அடுத்து, யோஜனகந்தி தன் வரலாற்றைத் தான் வேண்டும் போது தன்குலத்திற்கு நன்மை பயப்பதற்கான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தினாள் என்பதை நோக்கும்

போது பெண்கள் சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டிய உயர்ந்த பண்பொன்று உண்டு. அதுதான் தேவையல்லாத விடத்து தேவையற்றதை வெளிப்படுத்தாதிருத்தல் தனக்குப் பின் தன் சந்ததி நன்றாகவிருக்க வேண்டுமென்பதில் பெண்கள் ஆர்வமுடையவர்கள்.

அம்பை, தான் விரும்பியவாறு வீடுமனைத் திருமணம் செய்துகொள்ள முடியவில்லை. வீடுமன் தன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டாள். முடியாது போகவே, அவனையே கொல்லும் சிகண்டியாக மறுபிறவி யெடுத்தாள். பெண்கள் தாங்கள் விரும்பிய செயலை நிறைவேற்றிக் கொள்ள அயுராது முயற்சிப்பார்கள். முடியா தொழியின் தடையாக இருப்பவர்களை அழிக்கவும் முற்படுவார்கள்.

அம்பிகை, அம்பாலிகை இருவரும் யோஜனகந்தியின் மருமக்கள். யோஜனகந்திக்கும் சந்தனு மகாராஜாவுக்கும் புத்திரனான விசித்திர வீரியனை மணந்து கொண்டவர்களாவார்கள். விசித்திர வீரியன் தன் வம்ச விருத்தியில் விருப்பமில்லாதவனாக இருவரிடத்தும் இன்பந்துய்த்தலியே காலத்தைப் போக்கினான். மிகுந்த போகத்தால் தோன்றும் 'ராஜ்யக்ஷ்மா' என்ற க்ஷய ரோகத்தால் விசித்திர வீரியன் வானுலகடைந்தனன்.

மாமியின் விருப்பத்திற்கிணங்க இருவரும் வியாசபகவானால் கருவுற்றனர். அம்பிகை வியாசனுடன் கூடி, அவன் இன்பந்துய்க்கின்ற காலத்துக் கணவனை நினைந்தவாறு அச்சத்தால் கண்மூடியவாறு மஞ்சத்திருந்தாள். பயன்பிறவிக் குருடனைப் பெற்றெடுத்தாள். அம்பாலிகை என்பவளிடத்து வியாசன் சென்ற போது, அவளும் அச்சத்தினாலும் நாணத்தினாலும் உடல் வெளுத்தாள். அவள் கருத்தரித்து ஈன்ற குழந்தை வெண்ணிறத்தோடு விளங்கியது. இவ்விருவருடைய வரலாற்றாலும் பெண்கள் உணர்ந்து கொள்ள

வேண்டிய செய்திகள் சிறப்புடையன வாகும். தன்னை மணந்து கொள்ளும் கணவனுக்கு மனைவி ஒரு போகப் பொருளாக மட்டும் இருந்து விடக் கூடாது' வாழ்க்கைத் துணைவியுமாக அமைதல்வேண்டும். கணவனைத்திருத்தி நல்வழிப்படுத்துவதில் நாட்ட முள்ளவளாக விளங்குதல் வேண்டும். இல்லையேல் கணவனை விரைவில் பயனொன்றுமின்றி இழக்க நேரிடும். அடுத்தது, திருமணமான புதுப்பெண் தவறாமல் மேற்கொள்ள வேண்டிய பண்பாகும். கணவன் தன்னோடு கூடி மகிழ விரும்பும் போது அச்சத்தையும் நாணத்தையும் தவிர்த்து, அவன் விரும்பியவாறு இசைந்து கொடுத்து அவனை மகிழ்விக்க வேண்டும். அகமும்புறமும் இருளொழிய திவ்விய ஞான ஒளியில் கூடுதல் பயனை விளைவிக்கும். குறைபாடுகள் எவையுமின்றி அழகான குழந்தை பிறக்கும்.

காந்தாரி, காந்தார தேசத்து மன்னன் சுபலனுடைய மகள். தனக்கு மணம் பேசியுள்ள, வரப்போகும் கணவன் பிறவிக் குருடன் என்பதைச் சுற்றத்தார் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து தெரிந்து கொண்டாள் காந்தாரி. புற உலகைக் காண முடியாத ஒருவரைக் கணவனாகப் பெறப்போகும் நமக்குக் கட்புலன் எதற்கு எனக்கருதியவள். அப்போதே தனதிரு கண்களையும் முகபடத்தால் மறைத்துக் கண்களிரண்டையும் கட்டிக்கொண்டவள். பிறகு, தான் அக்கட்டினை அவிழ்த்து உலகப் பொருட்களைத் தான் காண விரும்பினாளில்லை.

தன் பின்னே வந்தொதுங்கிய திரௌபதியை துச்சாதனன் பின் அவைக்குச் செல் என்றுதான் கூறினாளேயொழிய அவளுக்குப் பாதுகாப்புத் தரவில்லை. இவளுடைய வாழ்வு நமக்கு இரு பண்புகளைப் புகட்டுகின்றது. ஒன்று; கணவனது புலனின்பத்தை விட மனைவி அதிகப்புலனின்பம் புறத்தே பெறலாகாது. மற்றொன்று தவறே செய்தாலும் மகனைக் காட்டிலும் மருமகள் அன்பிற்குப் பாத்திரமானவளல்லள் என்ற உலகியல்.

## பானுமதி

பானுமதி துரியோதனன் மனைவி. பெண்களுக்குள்ள உயர்ந்த பண்புகள் அனைத்தும் நிறைந்த கற்பிற் சிறந்த உத்தமி. அவளுக்கு வாய்த்த கணவன் காவியத்தில் மிகவும் கொடுமைக் காரனாக, பாவத்தின் முழு உருவாக காட்டப் படுகின்றான். ஆகவே துரியோதனனுடைய மனைவி பானுமதி காவியத்துள் எங்கும் சிறப்பித்துக் காட்டப்பட வில்லை. பண்புள்ள நற்குடிப் பெண்ணுக்குக் கணவனாக அமைபவன் தீய ஒழுக்கங்களினாலும், பாபச் செயல்களி னாலும் சீர்கெட்டவனாயின் அவனைக் கணவனாகப் பெற் றவளுக்கு எச்சுகமுமில்லை. சமுதாயம் அவளை அறிந்து கொண்டு முறையாகப் பாராட்டத் தவறி விடும். ஆகவே தான் 'பெண்களின் நல்வாழ்விற்கு ஆண்களின் உயர்ந்த ஒழுக்கமும் பண்பாடுமே அணி செய்வன' எனச் சான்றோர் கூறுவர்.

பிரதை, குந்திபோஜனால் ஸ்வீகாரப் புத்திரியாக எடுத்துக் கொள்ளப்பட்டாள். குந்திபோஜனின் வளர்ப்பு மகள் பிரதை; குந்திதேவி என அழைக்கப்பட்டாள். இள மையிலே துருவாச முனிவருக்கு, அவர் மனம் கோணாமல் ஓராண்டு காலம் குற்றேவல் புரிந்து அம்முனிவருடைய நல் லாசியைப் பெற்றாள் முனிவரும் குந்தியின் எதிர்காலத் தைத் தன் ஞானதிருஷ்டியால் கண்டு, அவளுக்கு ஒருமந்தி ரத்தைச் சொல்லிக் கொடுத்தார். அவளுக்கு வரப்போகும் கணவன் வெண்ணிற முடையவன். புணர்ச்சியிலீடு பட்டால் உயிரையிழப்பான் என்னும் சாபமொன்றினை ஏற்றவன். குந்தி மகப்பேற்றினை யடைய வேண்டும் என்பதற்காகவே முனிவர் குந்திக்கு அம்மந்திரத்தினைச் சொல்லிக் கொடுத் தார். குந்தி அம்மந்திரத்தைத்தேவர்களில் எவரைநினைத்துச் சொல்லுகிறாளோ அவர் வந்து அவளுக்கு மகப்பேற்றினைக் கொடுத்துச் செல்லுவார்.

குந்தி திருமணத்திற்கு முன்பே சோதனைக்காக ஒரு முறை அம்மந்திரத்தைச் சொல்லி சூரியனை நினைத்தாள். சூரிய பகவான் குந்தி முன்தோன்றிஅவளுக்கு ஒருபுத்திரனை அளித்துச் சென்றான். அவனே கர்ணன். அவனை ஒரு பேழையுள் வைத்து ஆற்றில் விட்டு விட்டாள்.

பின் பாண்டுவை மணந்து கொண்டாள். மாத்திரி பாண்டுவின் இரண்டாவது மனைவி. பாண்டு மகப்பேற்றினைத் தன் குல விருத்திக்காக விரும்பினான். குந்தி, துருவாச முனிவர் உபதேசித்த மந்திரத்தின் பயனைப் பாண்டுவினிடம் கூறினாள். தான் பெற்றுள்ள சாபத்திற்கு அஞ்சி, பாண்டு குந்தி தேவியை தேவர்பால் கருப்பெற விரும்பி அனுமதித்தான். குந்தி எமதருமனையும், வாயு பகவானையும், இந்திரனையும் கூடி முறையே தருமனையும், வீமனையும், அருச்சுனனையும் பெற்றெடுத்தாள். தன் இளையவளான மாத்திரிக்கும் குந்தி தேவி தானறிந்த மந்திரத்தைக் கூறி புத்திரப்பேறு பெறும் வாய்ப்பினை நல்கினாள். அதன்படி மாத்திரி குந்தி உபதேசித்த மந்திரத்தைக் கூறி சூரிய குமாரரான அசுவனீ தேவர்களை நினைத்தாள். அசுவனீ தேவர்கள் இருவரும் வந்தனர் இருவரையும் கூடி ஒரே சமயத்தில் நகுல சகாதேவர்களை ஈன்றெடுத்தாள்.

தன் கணவனுக்கு ஏற்பட்டுள்ள சாபத்தைப் பற்றி குந்தி மாத்திரிக்கு விளக்கிக் கூறி, பாண்டுவிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எச்சரித்திருந்தாள். உண்மையை உணர்ந்திருந்தும் மாத்திரி தன் கணவன் பாண்டுவினுடைய சல்லாபத்திற்குஆளாகி அவசமாயினாள். அவளிடத்தில் புணர்ச்சியால் இன்பந்துய்த்த பாண்டு மன்னன், சிந்தமனென்ற முனிவரின் சாபத்தால் இறந்து பட்டனன்.மாத்திரி கணவனுடன் உடன் கட்டையேறினாள் குந்தி இருவருக்கும் தம் மக்களைக் கொண்டு அந்திமக் காரியங்களைச் செய்தாள்.

கண்ணன் கூற, கர்ணன் தன் மூத்த மகன் என்பதைக் குந்தி அறிந்தாள். கர்ணனைச் சந்தித்தாள். பாண்டவர் களுக்காகக் கர்ணனிடம் இருவரங்களைப் பெற்றாள், கர்ண னும் தாய் என்பதைஅறிந்து மகிழ்ந்தான்;பின் வருந்தினான் இறுதியில் தானும் அவளிடம் இருவரங்களைப் பெற்றான் குந்தி, மாத்திரி ஆகிய இருவரின் வாழ்க்கை நமக்குச் சில நீதிகளைப் போதிக்கின்றது.

வீட்டிற்கு வரும் பெரியவர்களுக்குப் பணிவிடை செய் வதில் பெண்கள் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக விளங் குதல் வேண்டும். பிறர்மனம் கோணாமல் மற்றவர் மத்தியில் வாழப்பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு பெண், தன்னிடத்தில் மலிந்து கிடக்கும் சக்திகள் எவையானாலும் கணவனுடைய குறிப்பும் விருப்பும் அறிந்தே அவற்றை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். தங்களுக்குள்ள ஆசை கள், உணர்வுகள் மற்ற பெண்களுக்கும் உண்டென்பதை உணர்தல் வேண்டும். மற்றவர்களுக்கும், தாங்கள் பெறும் இன்பத்தினை நுகர வாய்ப்பளிக்க வேண்டும் ஒருபிழையைச் செய்து விட்டு, அதை மறைத்து, ஏதோ ஒரு காலத்தில் அது வெளியாகும் போது வருந்துவதை விட, அப்பிழையைச் செய்யாதிருப்பதே மேல் என்பதைப் பெண்கள் உணருதல் வேண்டும். தான் பெற்ற புதல்வனிடத்தில் தாய்க்கு உள்ள அன்பு, அப்பிள்ளைக்கு எத்தனை பிராயமானாலும் குறை யாது. இரகசியத்தைக் காப்பாற்றுவதில் பெண்கள் ஆண் களை விடக் கைதேர்ந்தவர்களாக விளங்குதல் வேண்டும். கணவனிறந்த பின்னும் தான் ஆற்ற வேண்டிய கடமைகள் காத்திருந்தால் மனைவி வாழத்தான் வேண்டும். குற்றத் தைத் தானாக ஒப்புக்கொண்டு அதற்கான தண்டனையை யும் மேற்கொள்ள எந்த பாரதப் பெண்ணும் தயங்க மாட் டாள். இவையெல்லாம் பாரதம் காட்டும் குந்தியும் மாத்தி ரியும் வாழ்ந்து காட்டி நமக்குணர்த்திய நீதிகளாகும்.

இடிம்பி, இடிம்பனின் தங்கை. வீமனைக் காதலித்தாள். வீமனுக்கும் இடிம்பனுக்கும் போர் நிகழ்ந்தது. இடிம்பனை வீமன் கொன்று விட்டான். தன் தமையனைக்கொன்றவனாயினும் வீமனிடத்தில் இடிம்பிக்குக் காதல் உண்டாயிற்று. இடிம்பியின் மனநிலையினைக் குந்தி உணர்ந்தாள். தருமன் முதலானவர்களிடம் வீமன் இடிம்பி திருமணத்தைப் பற்றிக் கேட்டு அவர்களது சம்மதம் பெற்றாள் குந்திதேவி இடிம்பி திருமணத்திற்குப் பிறகு தன் மாமி மனங்கோணாமல் அவளுக்குப் பணிவிடை செய்து வந்தாள். கடோற்கசன் என்பவனை மகனாகப் பெற்றாள் இடிம்பி. தாயும் பிள்ளையும் பாண்டவர்களை விட்டுப் பிரிந்து இடிம்பவனத்திற்கே சென்று அங்கு வாழ்ந்தனர். வேண்டிய போது கடோற்கசன் பாண்டவர்களுக்கு உதவுவதாகக் கூறிச் சென்றான். இடிம்பியின் வாழ்க்கையும் நமக்குச்சில நீதிகளைக் காட்டுகின்றன.

ஒரு பெண், தான் காதல் வயப்பட்ட ஆடவனைத் தன் சகோதரன், தாய், தந்தை போன்ற உறவினர்கள் வெறுத்தாலும் தான் வெறுக்க மாட்டாள். ஒரு பெண்ணின் உணர்வுகளையும் ஆசைகளையும் அவளைப் போன்ற மற்றொரு பெண்ணால் தான் எளிதில் புரிந்து கொள்ள முடியும் மாமியாரை மதித்து, அவளது அன்பிற்குத் தன்னைப் பாத்திரமாக்கிக் கொண்ட மருமகள் எல்லாராலும் போற்றப் படுவாள். பிறருடைய பழக்க வழக்கங்களுக்கு இசைந்து அவர்களோடு ஒன்றி வாழ முடியாத வேறுபட்ட பழக்க வழக்கங்களையுடையவர்கள் ஒதுங்கி வாழ்வதே சிறப்பு. சிறப்பாகப் பெண்கள் மேற்கொள்ள வேண்டிய பண்பாகுமிது.

சித்திராங்கதை, சித்திரவாகனன் என்ற பாண்டிய மன்னனுடைய மகள். சித்திராங்கதை, தன் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு மதுரைக்கு வந்த அருச்சுனனைக் கண்டாள். அவனிடத்துக் காதல் கொண்டாள். தன் விருப்

பத்தினையும், மனக்கருத்தினையும் தோழியர்களிடத்தும், செவிலித்தாயிடத்தும் முறையே அறிவித்தாள். முறைப்படி பெற்றோர் விரும்ப தனது திருமணத்தை முடித்துக் கொண்டாள். நற்குடியில் பிறந்த பெண்மணிகள் தன் விருப்பத்தையும் காதலையும் மறைக்காது முறையாகப் பெற்றோர்களுக்கு அறிவித்து அவர்கள் முன்னிருந்து நடத்தி வைக்க தங்கள் திருமணத்தைச் சிறப்பித்துக் கொள்ளுவார்கள். இத்தகைய பெண்களே சமுதாயத்தில் மதிக்கத் தகுந்தவர்களாவார்கள்

வர்க்கை என்பவள் குபேரனுக்குப் பிரியமான அப்சரஸ் பெண் ஒரு முறை தனது தோழிகளுடன் உல்லாசமாகச் சென்று கொண்டிருக்கையில் தவஞ் செய்து கொண்டிருந்த ஒரு முனிவருக்கு இடையூறாக ஆடல் பாடல்களைச் செய்தாள். அம்முனிவர் அவளையும் அவளது தோழிகள் நால்வரையும் முதலைகளாகப் போகும்படி சபித்தார். அருச்சுனன் குளத்தில் இறங்கிய போது அம்முதலைகளுள் ஒன்று காலைப் பிடிக்க அருச்சுனன் அதனை வெளியில் இழுத்துப் போட்டான் இதனால் சாபம் நீங்கிய முதலை மற்ற குளத்தில் உள்ள முதலைகளையும் சாபம் நீங்கும்படி வெளியில் இழுத்துப் போடும்படி அருச்சுனனை வேண்டியது முதலைகள் சாபம் நீங்கி பழைய பெண் வடிவினைப் பெற்றனர். இவ்வரலாற்றால் அறிந்து கொள்ள வேண்டியது பெண்கள் தனது ஆடல் பாடல்களினால் பெரியவர்களுடைய கவனம் சிதறும்படி நடந்து கொள்ளக்கூடாது. பெரியவர்களுடைய சினம் நமக்குப் பெருந்துன்பத்தைத்தரும்.

திரௌபதி, பாஞ்சால நாட்டு மன்னன் துருபதன் மகள். துருபதன் புத்திர காமேட்டி யாகம் செய்தான். அந்த யாகத்தீயில் தோன்றியவள் திரௌபதி. இவள் முற்பிறப்பில் நாளாயணியாகவும், இந்திரசேனையாகவும் வாழ்ந்தவள். நாளாயணியாக வாழ்ந்த போது மௌத்த

கல்யன் என்பவனுக்கு மனைவியாக இருந்தாள். மௌத்த கல்யன் ஒரு தொழு நோயாளன். மனைவியை அவன் மிகவும் கடிந்து கொள்ளுபவன். மனைவியை மிகவும் கொடுமையாக நடத்தியவன் இருப்பினும் நாளாயணி தன் கணவனிடத்தில் அன்பாகவும் பணிவுடையவளாகவும் நடந்து கொண்டாள். தன் கணவனுடைய அருவருப்பான தொழு நோய் பிடித்த உடலைக் கூட அவள் வெறுத்தாளில்லை ஒரு சமயம் கணவனுண்டு எஞ்சிய சோற்றில் அவனுடைய விரல் ஒன்று இற்றுக் கிடந்ததையும் பொருட்படுத்தாமல் அவ்விரலை எடுத்தெறிந்து விட்டு அவ்வுணவை உண்டாள். மௌத்த கல்யன் நாளாயணியின் கற்பு நலனைப் பாராட்டி ' என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன்' என்றான் 'மலையும் நதியுமாய், மரமும் அதனைச் சுற்றிப் படர்ந்துள்ள கொடியுமாய், பலவகை உருவங்களில் ஓரிடத்திலின்றி பல விடங்களிலும் ஒருவரை ஒருவர் பிரியாது ஒன்றாகவிருந்து வாழ்ந்து இன்பந்துய்ப்போமாக' என்று வேண்டினாள்.

நாளாயணி, பின் இந்திரசேனையாகப் பிறவியெடுத்தாள். மௌத்தகல்யனை யடைந்தாள். மௌத்த கல்யன் முத்திப் பேரின்பத்தில் ஈடுபட்டிருந்தான். முற்பிறவியில் நாளாயணியாக விருந்த இந்திரசேனையைக் கண்டஞ்சியவனாய் மௌத்த கல்யன், 'என் தவத்தைக் கொடுப்பதற்காக நீ முயற்சிக்கின்றாய். ஆகவே நீ துருபதன் புத்திரியாய்ப் பிறப்பாய்' எனச் சபித்தான். 'உன்னை ஐவர் மணப்பர்' என்றும் கூறினான். பின் இந்திரசேனை சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தாள். தன்முன் காட்சியளித்த சிவபெருமானை வேண்டி, 'எனக்கு ஏற்ற கணவனைத் தருக' வென்று ஆதரத்தால் ஐந்து முறை அடுக்கிக் கேட்டுக்கொண்டாள். சிவபெருமானும் தன் ஐந்து முகங்களோடு அவ்வாறே வரங்கொடுத்தார். திரௌபதி தனது முற்பிறவியில் வாழ்ந்த வாழ்க்கை வெளிப்படுத்தும் உண்மைகள்:-கணவன் எப்படிப் பட்ட புறத்தோற்றத்தை யுடையவனாக இருந்தாலும் உள்ளத்தால் ஒன்றுபடுவதே உயர்ந்த பெண்களின் பண்பு

நலமாகும். நற்குடியில் பிறந்த பெண்கள் ஒரு பிறவியில் தான் பெற்ற கணவனையே இனிவரும் பிறவிகளிலேயும் கணவனாகப் பெற ஆசைப் படுவர்; அவனது அன்பினையே நினைந்து ஏங்குவர். வாழ்க்கைப் பிரச்சனையாக உள்ள ஒன்றைத் தீர்த்துக் கொள்ள ஒருவரை அணுகும் போது அவரிருக்கும் சூழலையும், தான் செல்லும் நேரத்தையும், மனப்பக்குவத்தையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஒருவரிடத்தில் ஓர் உறுதிமொழி வாங்கும் போதும், வரத்தினைக் கேட்கும் போதும் விழிப்பாக இருந்து கேட்டல் வேண்டும்.

திரௌபதி பாண்டவர்கள் ஐவரையும் தனித்தனியே மணந்து கொண்டாள்' தருமபுத்திரன் மயனால் கட்டுவித்த சபாமண்டபத்தைக் காணவும், தான் இயற்றும் இராஜசூய யாகத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கவும் கௌரவர்களை அழைத்தான் துரியோதனனும் தன் சகோதரர்களுடன் அம் மண்டபத்தைக் காண உள்ளே நுழைந்தான். அம்மண்டபத்தைச் சுற்றிப் பார்த்தனர். அப்போது அவர்களை மேல் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த திரௌபதியும், அவளது தோழிமார்களும் சிரித்தார்கள்.

அச்சிரிப்பு துரியோதனன், துச்சாதனன் முதலியவர்களுக்குப் பெருத்த அவமானத்தைஉண்டாக்கியது.அதனால் அவர்கள் மிகவும் வருந்தினார்கள். பதிலாக துரியோதனன் கட்டிய மாளிகையைக் காண பாண்டவர்கள் அழைக்கப்பட்டார்கள்.பாண்டவர்கள் துரியோதனனுடைய அழைப்பிற்கு இணங்கி அத்தினாபுரம் சென்றார்கள். அங்கு சபா மண்டபத்தில் சகுனி தருமனுடன் சூதாடி தருமனுடைய நாடு, நகரங்கள் அனைத்தையும் சகுனி கவர்ந்து கொண்டான். முடிவில் தம்பியர்களையும், திரௌதியையும் சூதாடி இழந்தான்.துரியோதனன் திரௌபதியை மன்னர்கள் கூடியிருந்த சபைக்கு அழைத்துவந்தான். துச்சாதனனை திரௌபதியின் ஆடைகளைக் களைய ஏவினான். அவனும் அவ்வாறே அவளது ஆடையைப் பற்றிக் களைந்தான். திரௌபதி கண்ணபிரானை நினைந்தவளாய் 'கோவிந்தா கோவிந்தா,

என்று கதறினாள். கண்ணபிரானின் அருளால் களையும் துகில் தொடர்ந்தது. 'விரித்த கூந்தலைத் துரியோதனனும், அவனுக்குத் துணையாக இருந்தவர்களும் வரப்போகும் பாரதப் போரில் இறந்தொழிந்த பின்பே முடிவேன்' என்று திரௌபதி வஞ்சினங் கூறினாள். பின் வனவாசத்தைப் பாண்டவர்கள் மேற்கொண்டனர். கந்தர்ப்ப கிரியின் வனத்தில் வாழும் போது ஒருநாள் பொன்மயமான தாமரைப் பூ ஒன்று திரௌபதியின் முன் வீழ்ந்தது. அம்மலரைக் கண்டதும் திரௌபதி தன் கையினால் எடுத்து அதனழகையும், மணத்தையும் கண்டு நுகர்ந்தாள். அதுபோன்ற மலர் தனக்கு வேண்டுமென வீமனிடம் கேட்டாள்.

அம்மலர் அளகாபுரியில் குபேரனுடைய நந்தன வனத்தில் உள்ளதென உரோமசன் கூற, வீமன் அங்கு சென்று அதனைக் கொண்டு வந்து கொடுத்தான். மீண்டும் ஒரு முறை முனிவாகளது பத்தினிமார்களுடன் ஒரு நதியிலே புதிய வெள்ளப் பெருக்கில் நீராடினாள். அவ்வெள்ளத்தில் ஒரு பதும மலர் மிதந்து வந்தது. அம்மலரை எடுத்து திரௌபதி வீமன் கையிற் கொடுத்தாள் அதேபோன்ற மலர் வேணடுமென்றாள். மீண்டும் வீமன் அளகாபுரிக்குச் சென்று அம்மலரை யொத்த பல மலர்களைக் கொண்டு வந்து திரௌபதிக்குக் கொடுத்தான்.

பிறகு நந்திசேன வனத்தில் வாழ்ந்து வரும் போது ஒரு நெல்லி மரத்தில் கனியொன்றைக் கண்டாள் திரௌபதி அருச்சுனனிடத்தில் அந் நெல்லிக்கனியைப் பறித்துத் தருமாறுதிரௌபதி கேட்டாள். உடன், அருச்சுனன்அக்கனியைத் தன் அம்பால் வீழ்த்தி திரௌபதி கையிற் கொடுத்தான். அதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அக்கனியின் வரலாற்றைக் கூறி அதனைப் பறித்தால் வரும் தீமைகளைப் பற்றிக்கூறினார்கள். கிருஷ்ணபகவானுடைய ஆலோசனைப் படி பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் மனத்தே வைத்திருந்த இரகசியத்தைக் கூறினார்கள். திரௌபதி தான் ஐவரோடு மட்டுமன்றி இன்னுமொரு கணவனைப் பெற விரும்பி மனமுருகியதுண்டு எனக்கூறினாள். கனி முன்பிருந்த படியே மரக்கிளையில் ஒட்டிக்கொண்டது.

வனவாசம் முடிந்தபின் பாண்டவர்கள் அனைவரும் விராட நகரடைந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்ய வல்லவரெனக் கூறிக் கொண்டு வேறு வேறு பெயருடன் விராட மன்னனது மாளிகையை யடைந்தனர். திரௌபதி விரதசாரணி என்ற பெயருடன் வண்ணமகளாக விராட மன்னனுடைய பட்டத்தரசி சுதேஷ்ணைக்குப் பணிப்பெண்ணாகப் போய்ச் சேர்ந்தாள். சுதேஷ்ணையின் சகோதரன் கீசகன் என்பவன் வண்ண மகளைக் கண்டு காமுற்றான். விரதசாரணி எவ்வளவு கூறியும் அவன் திருந்தினானில்லை சுதேஷ்ணையும். 'அவன் விரும்பியவாறு உன் கற்புக்கு பங்கம் வராதபடி நடந்து கொள்' என விரதசாரணிக்குக் கூறினாள். விரதசாரணி வீமனிடத்தில் நிலையினை விளக்கிக் கூறினாள். வீமனது ஆலோசனைப்படி விரதசாரணி கீசகனுக்கு ஒரு குறியிடங் கூறி இரவில் வந்து சந்திக்கும்படி ஏற்பாடு செய்தாள். அதே போல குறியிடம் வந்த கீசகனைப் பெண் வேடத்திலிருந்தவீமன் கொன்றான். கந்தருவர்களால் கீசகன் கொலையுண்டு போனான் என மன்னனும் மக்களும் நம்பும்படி செய்தியைப் பரவச் செய்தான் வீமன்.

இதுகாறும் கண்ட திரௌபதியின் வரலாற்றால் உணரத்தக்க பண்புகள்: பெண்கள் பிற ஆடவர்களைக் கண்டு, அவர்கள் மேற்கொள்ளும் எந்தச் செயல்களுக்ாகவும் சிரிக்கக் கூடாது தன்னைக் காத்தற்கு ஐவர் கணவன் மார்கள் இருந்தாலும். அவர்கள் நிலை தளர்ந்திருந்த போது இறைவனே துணை நின்றான். நிர்க்கதியானவர்களுக்கு இறைவனே துணை; அவனே முன் நிற்பான். பொறுமையின் நிலைக்களம் பெண்கள். என்றாலும் அளவு கடந்த சோதனைக்கு ஆளாகும் போது எரிமலையாக மாறிவிடுவர்; வஞ்சினம் கூறுவர். அதுபலித்து விடும். முடிவு கடுமையான பலனைத் தருவதாக அமையும்.

பெண்களுக்கு எந்த நிலையிலும் மலரைக் கண்டால் அதனைப் பெற்றுக் கூந்தலில் சூடிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் உண்டாவது இயல்பு.

# தொகுப்பு

1. அறிமுகமில்லாத புதிய இடத்திற்குப் பெண்கள் துணையின்றித் தனியே செல்லுதலை அறவே தவிர்த்தல் வேண்டும்.

2. பெண்கள் ஒருவரைவிட ஒருவர் அழகுடையவர்களாக இருக்கலாம்.

3. நாமே மிக்க அழகுடையவர்கள் என இறுமாப்படைதல் கூடாது.

4. மிகுந்த அழகு, அவ்வழகினையுடைய பெண்ணிற்கே ஆபத்தை உண்டாக்கக் காரணமாகவு மிருக்கலாம்.

5. நல்லவர்களுக்குக் கொடுக்கும் சாபம் அவர்களுக்குச் சாதகமான பலனையே தரும்.

6. தனது தந்தை உயர்குலத்தில் பிறந்தவன் அல்லது அதிகார பலமுடையவன் என்ற எண்ணம் பெண்களுக்குத் தோன்றுதல் கூடாது.

7. அவ்வெண்ணம் தன்னையொத்த மற்ற பெண்களை இழிவாகக் கருதத் துணை செய்யும்.

8. தன் பெற்றோர்களுக்குள்ள ஆற்றலைத் தெரிந்து கொள்ளாது பிறரை நோக்கி வஞ்சினம் கூறுதல் கூடாது.

9. அதிகார பலத்தால் பிறரை நசுக்கும் போது அத்துன்பத்திற்குத் தானும் பலியாதல் கூடும் என்பதனை ஒவ்வொரு பெண்ணும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

10. தனக்கு எத்துணைத் துன்பங்கள் நேர்ந்தாலும் கணவனைத் துறந்து பிறந்தகம் செல்லுதல் பெண் களுக்குச் சிறப்புத் தருவதொன்றன்று.

11. ஐயம் கொண்ட வாழ்க்கை பெண்களுக்கு அமைதியைத் தாராது.

12. பெண்கள் ஆடவர் கூடிய இடத்திற்குச் செல்லும் போது தங்களது ஆடை விலகாமலும், நெகிழாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

13. தங்களுக்குத் துன்பமே நேர்ந்தாலும், பிறருக்கு நன்மை விளைவதெனில் அதற்கான செயல்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள பாரதப் பெண்கள் முன்னிற்பர்.

14. பாரதப் பெண்கள் தங்கள் குலப்பெருமை அழியா திருக்க வம்ச விருத்திக்காக நற்குழந்தைகளைப் பெற ஆசைப்படுவார்கள்.

15. தங்கள் வாழ்வில் நிகழ்ந்தஎந்தச்சம்பவத்தையும் காரண மில்லாது, அதனால் பயனில்லையெனில் வெளியிட மாட்டார்கள். நல்ல பலனை விளைவிக்குமானால் தங்கள் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களையும் பட்டறி வாக வெளியிடுவர்.

16 இல்லறத்தை மேற்கொண்ட பெண் வாழ்வில் நிகழும் இழப்புக்களைப் பெரிதாகக் கருதி மனதைத் தளரவிட மாட்டாள்.

17. தான் மேற்கொண்ட செயல்களை முடிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பர்.

18. நினைத்தபடி மேற்கொண்ட செயல்கள் நடைபெறா தொழியின் அதற்குக் காரணமானவர்களை அழிக்கவும் முற்படுவர்.

19. தன்னை மணந்து கொண்ட கணவனுக்கு மனைவி ஒரு போகப் பொருளாக மட்டும் இருந்து விடக்கூடாது.

20. பெண், தன்னை மணந்து கொண்ட கணவனுக்கு இல்லறத் துணைவியாக இருந்து சுக துக்கங்களில் பங்கு பெற வேண்டும்.

21. கணவனுடன் கூடி மகிழ்ந்திருக்கும் காலத்தில் அகத்தே யும் புறத்தேயும் இருள் சூழ அனுமதிக்கக் கூடாது.

22. புத்திரப் பேற்றினை விரும்பி தன்னைக் கூட வரும் ஆடவனை-கணவனைக் கண்டு எந்தப்பெண்ணும் அச்ச முறுதலும் நாணமுறுதலும் கூடாது.

23. கணவனுக்கு இல்லாத ஒரு புறச்சுகத்தை மனைவி மட்டும் அனுபவிக்க விரும்புவது பாரதப் பெண்களுக்கு ஏற்ற பண்புடைமையாகாது.

24. தவறே செய்கின்ற தன் மகனைக் காட்டிலும் மருமகள் ஒரு தாயின் அன்பினைப் பெறுவது இயலாததொன்று.

25. திருமணமான ஒரு பெண் விரைவில் தான் தாய்மைப் பேற்றினை யடைய விரும்புவது பாரதப் பண்பாகும்.

26 பெண்களுடைய புகழுக்கும் நல்வாழ்விற்கும் ஆண் களுடைய ஒழுக்கமும் பண்பாடுமே அணி செய்வன.

27. பிறர் மனங் கோணாமல் மற்றவர்கள் மத்தியில் வாழப் பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

28. பெரியவர்களுக்குப் பணிவிடை செய்வதில் பெண்கள் பின்னடைதல் கூடாது.

29. தன்னிடத்தில் உள்ள ஆபூர்வ சக்தி எதுவானாலும் கணவனுடைய குறிப்பும் விருப்பமும் அறிந்தே அச்சக்தி யை வெளிப்படுத்துதல் வேண்டும்.

30. ஒரு பிழையைச் செய்து விட்டு, அதை மறைத்து, ஏதோ ஒரு காலத்தில் அதுவெளியாகும் போது வருந்து வதை விட அப்பிழையைச் செய்யாதிருப்பதே மேல் என்பதைப் பெண்கள் உணர்ந்திருத்தல் வேண்டும்.

31. தனக்குள்ள ஆசைகளும் உணர்வுகளும் மற்ற தன்னைப் போன்ற பெண்ணிற்கும் உண்டென்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்தவளாயிருத்தல் வேண்டும்.

32. இரகசியத்தைப் பாதுகாத்து வருவதில் ஆண்களை விட பெண்கள் சிறந்தவர்களாக விளங்குதல் வேண்டும்.

33. கணவனிறந்த பின்னும், தான் ஆற்ற வேண்டிய கடமை கள் காத்திருந்தால் மனைவி வாழத்தான் வேண்டும்.

34. குற்றத்தைத் தானாக ஒப்புக் கொண்டு அதற்கான தண்டனையையும் பெற பெண்கள் முன் வருதல் வேண்டும்.

35. தான் மணக்கவிருக்கும் ஓராடவனைத்தன் உறவினர் கள் அனைவரும் வெறுத்தாலும் தான் வெறுக்க மாட் டாள்.

56. ஓராடவனிடத்தில் மண்டிக்கிடக்கும் ஏதோ ஓர் ஆற் றலே ஒரு பெண்ணை அவ்வாடவனைக் காதலிக்கச் செய்கிறது.

37, ஒரு பெண்ணின் ஆசையையும், உணர்வுகளையும் அவளைப் போன்ற ஒரு பெண்ணால் தான் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

38. மாமியாரை மதித்து அவளது அன்பிற்குத் தன்னைப் பாத்திரமாக்கிக் கொண்ட மருமகள் எல்லாராலும் போற்றப் படுபவளாகின்றாள்.

39. பழக்க வழக்கங்களால் மாறுபட்ட ஒருபெண் பிறரோடு ஒன்றி வாழ்வதைக் காட்டிலும் தனித்து வாழ்வதே மேல்.

40. ஒரு பெண் தான் விரும்பிய ஆடவனைத் திருமணம் செய்து கொள்ள, முறையாகத்தன் விருப்பத்தைப் பெற்றோர்களுக்கு அறிவிக்க வேண்டும். பெற்றோர்கள் விரும்பி, முன்னிருந்து அத்திருமணத்தை நடத்தி வைத்தல் பாராட்டுதற்குரிய தாம்.

41. பெண்கள். தனது ஆடல் பாடல்களினால் பெரியவர்களுடைய கவனம் சிதறும்படி நடந்து கொள்ளக்கூடாது.

42. பெரியவர்களுடைய சினத்திற்குப் பெண்கள் பலியாதல் கூடாது.

43. கணவன் எப்படிப்பட்ட புறத்தோற்றத்தையுடையவனாக இருந்தாலும் உள்ளத்தால் ஒன்றுபடுவதே உயர்ந்த பெண்களின் பண்பு நலமாகும்.

44. நற்குடியில் பிறந்த பெண், ஒருபிறவியில் தான் பெற்ற கணவனையே தொடர்ந்து வரும் பிறவிகளிலேயும் கணவனாகப் பெற விரும்புவாள்,

45. ஒருவரிடத்தில் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால் அவருடைய சூழலையும், மனப்பக்குவத்தையும் புரிந்து கொண்டு அவரை நாடுதல் வேண்டும்.

46. பிறரிடத்து நம் வாழ்வின் நலங்கருதிப் பெறும் உறுதி மொழியினை மிக்க விழிப் போடிருந்து பெறுதல் வேண்டும்.

47. வரம் பெறுவதற்கு, சிறப்பாகப் பெண்களுக்கு முறை தெரிந்திருக்க வேண்டும்.

48. பெண்கள் பிற ஆடவர்களைக் கண்டு, அவர்கள் செய்யும் எந்தச் செயல்களுக்காகவும் சிரித்தல் கூடாது.

49. தன்னைக் காப்பதற்குக் கணவனே கண்கண்ட தெய்வம் என்றாலும், அவன் வலியிழந்த போது அவனுக்கும் மேலான பரமாத்மா ஒன்று உண்டு என்பதை நம்புதல் வேண்டும்.

50. பொறுமைக்கு நிலைக்களம் பெண்கள்; என்றாலும் அளவு கடந்த சோதனைக்கு ஆளாகும் போது அவர்கள் தெய்வமாகின்றார்கள்.

51. பாரதப் பெண்கள் வஞ்சினம் கூறினால் அது பலிக்கும்; முடிவு எவராலும் தடுக்க முடியாத கடுமையான பலனைத் தருவதாக அமையும்.



திருவாளர் பெ. கு. வரதராசன் அவர்கள் சேலம் மாவட்டம் நாமக்கல்லை அடுத்துள்ள பெரியபட்டி என்னும் ஊரில் 16-11-1929 இல் பிறந்தவர். தந்தையார் உபாத்தியாயர் திரு. A. குப்புசாமி பிள்ளை. தாயார் திருமதி இலக்குமி அம்மையார்.

1952 நவம்பர் முதல் 1959 வரை உயர்நிலைப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராகவும் 1959 முதல் 1972 ஆகஸ்ட் முடிய தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். 1972 செப்டம்பர் முதல் 1988 மே முடிய - பதவி ஒய்வு பெறும் வரை அரசு கலைக்கல்லூரி உதகையில் ஓராண்டும் கிருஷ்ணகிரியில் தொடர்ந்து பதினைந்து ஆண்டுகளும் தமிழ்ப் பணியாற்றியுள்ளார்.

வித்வான் பி. ஓ எல்., எம். ஏ. பி. டி., பி. எச். டி. முதலிய பட்டங்களும் ஆசுகவி, புலவரேறு, கவிஞர் கோமான் அருட்கவி முதலிய விருதுகளையும் பெற்றவர். திருமுறைச் செல்வரான இவர் 11ஆம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி பிரபந்தங்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார்.

பல ஆய்வுக் கட்டுரைகளும் தெய்வப் பனுவல்களும் எழுதியுள்ளார். தம் அறுபதாவது அகவையில் 'தன் வரலாறு' என்னும் நூலினை வெளியிட்டார். அடக்கமும், அன்பும் பண்பும் ஆழ்ந்த புலமையும் உடையவர்.